இளந்தளிர்

5

15.03.2016

Let's
BE GOOD

நல்லவர்களாயிருப்போம்

விண்ணகம் எம்மை வியந்து நோக்கும்

வடலிகள் வளர்ப்போம் வானுயர்ந்து ஓங்க
விண்ணகம் வியக்க வான்மழை பொழியும்
விழுகின்ற நீரை வீணாக்க மாட்டோம்.
ஆறு குளம் குட்டைகளில் தேக்கி வைப்போம்
நன்னீர் பெறுவோம் பயிர்செய்து வாழ்வோம்
எழுவோம், எழுவோம், இன்றே எழுவோம்.

15.03.2016

இளந்தளிர் - 5

15.03.2016

வளமும் வாழ்வும்

மகுட வாசகம்

கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!

குறிக்கோள்

சைவசமயத்தோர் மத்தியில் சமய நெறிகளை ஊட்டி
எமது மதத்தைப் பல்வேறு வகைகளிலும்
மறுசீரமைத்துக் காத்தல்

செயற்பாடு

கிராம மக்களிடையே சமயம் பற்றிய
விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்
பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்தல்

நூல் விபரம்

நூல்	:	இளந்தளிர் - 5
வெளியீடு	:	கந்தையா கனகம்மா நிதியம்
இதழாசிரியர்கள்	:	செல்வன். வ. கபிலன் செல்வி. து. ரஜிதா
ஒப்புநோக்குனர்கள்	:	திரு. க. மயில்வாகனம் திரு. சு. சுதர்சன் திருமதி. ம. சாந்தகுமாரி
பக்கங்கள்	:	xxxii +71
வடிவமைப்பு & அச்சுப்பதிப்பு	:	ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A. தம்பி லேன், யாழ்ப்பாணம்.

தளிரின் உள்ளே.....

இறைவணக்கம் (நல்வரம் தருவாயே) ---------- i
இறைவணக்கம் (எந்தையாய் தாயாய்) ---------- iii
நிதிய கீதம் ---------- iv
ஆசிச் செய்தி (பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்யா) ---------- v
ஆசிச் செய்தி (கலாநிதி. S. ஜெபநேசன் அடிகள்) ---------- vi
வாழ்த்துரை திரு. (பி . முத்துலிங்கம்) ---------- vii
வாழ்த்துரை திருமதி. (சி. சிவத்திரை) ---------- ix
இதழாசிரியர்களின் எண்ணங்கள் ---------- x
காப்பாளர் அறிக்கை ---------- xii
செயற்பாடுகளும் திட்டமிடல்களும் ---------- xvi
அட்டைப்படம் கூறுவது ---------- xix
கடையிற் சுவாமிகள் ---------- xxiii
எழுதாதம்பி எழு ---------- xxxi
அடக்கம் அறிவுடமை ---------- 1
இணைந்து வாழ்வோம் ---------- 7
உழுதுண்டு வாழ்வோம் ---------- 10
சூரியன் ---------- 12
அம்மா ---------- 13
நோயின்றி வாழ்வோம் ---------- 14
உயர முயல்வோம் ---------- 15
தலைவராவோம் ---------- 16
இணைந்து வாழ்வோம் ---------- 17
இணைந்து வாழ்வோம் ---------- 19
நேர்காணல் - செல்வன் ஞானசூரியன் திவாகரன் ---------- 21
மயிர் வெட்டோம் - சௌரமும் செய்யோம் ---------- 25
கிராமிய வளர்ச்சியும் சமூக மேம்பாடும் ---------- 27
நேர்காணல் - செல்வி. சஞ்சீவி சற்குண நாதன் ---------- 30
சித்திரை விடுமுறையில் சுற்றுலா போனோம் ---------- 34
போதையில்லா பாதை செய்வோம் ---------- 38
அகன்ற அழகிய கனடாவே - கனடாவே ---------- 43
சில பட்டறிவுகள் - படிப்பறிவுகளுக்கானவை ---------- 51
நாமடந்தை நிறைபணி விழா மலர் சிந்தனைக்கருவூலம் ---------- 54
2015ஆம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு
பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்ற மாணவர்கள் ---------- 59
2016ம் ஆண்டு ஆண்டு ஒன்றில் இணைந்துகொண்ட இப்பிரதேசமாணவர்களுக்கு
கைதடி மக்கள் வங்கிக் கிளையுடன் ஆரம்பிக்கப்பட்ட கணக்கு விபரங்கள் --- 60
2015ம் ஆண்டு க. பொ. த உயர்தரத் தேர்வில் சித்தியெய்தி ஊக்குவிப்பு
பெறும் மாணவர்கள் ---------- 65
சமயபாடத் தேர்வு - 2015 பரிசில் பெறும் மாணவர்கள் ---------- 66
நாம் 10.10.2015 அன்று சாவகச்சேரிப் பிரதேச சபையின் பொது நூலகத்துடன்
இணைந்து நடாத்திய கட்டுரைப் போட்டியில் பரிசில் கௌரவம் பெறுபவர்கள் - 71

கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்!!

ஆதி பகவன் முதற்றே உலகு.

பெற்றோரின் பொற்றிருப்பாதங்களைப்
பற்றிப் பணிந்து.....

கந்தையா கனகம்மா நிதியம்

15.03.2015

இறைவணக்கம்

நல்வரம் தருவாயே

தெளிந்த கல்வியும் சிறப்பும்
நிறைந்த வயதும் சுகமும்
இளமையும் நன்றாய வீரமும்
நோயறியா உடலும் தீரமும்
சலியாதமனமும் புரிந்த நட்பும்
அன்புகொண்ட மனைவியும்
வலிநீக்கி எமது துயர்நீக்கி - என்றும்
குன்றா வளமும் வாழ்வும் தா

பொலிந்து வந்த சந்தானமும் சீரும்
மாறாத கீர்த்தியும் மாண்பும்
நலியாத வார்த்தையும் வாய்மையும்
தடையறாக் கொடையும் தானமும்
தவமும் சீர்மிகு அறமும்
கற்றோரும் சுற்றமும் துணையோடு
அவமாகிப் போகாமல் வாழ்வோம்
வரம் தருவாயே

சூலமதைக் கையேந்திச் சூக்குமம்
காட்டித்தாயே நீவந்துறை
சாலச் சிறந்த தச்சர் வாழும்
வேலன்பராய் ஊரின் நடுவே
வீற்றிருந்து காத்திடும் சங்கரி
பாவம் படையெலாம் சங்கரிக்க
நோற்று(உ)டன் இருந்தோம் நித்தியம்
எமைக்காக்க வந்தருள்வாயே

வளம் தருவாய் நல்மனம் தருவாய்
குளம் நிறைந்திட நீர் தருவாய்
களம்பல கண்டும் களைத்திடா இளைஞர்
உளம் நிறை ஊக்கமும் தருவாய்
சுகம் தருவாய் நிதம் சோறும் தருவாய்
அகம் மகிழ்ந்தேத்தி என்றும்
இகம்பரம் உனைநினைந்துருகி
வாழும் வாழ்வைத் தருவாயே

துன்பங்கள், துயரங்கள் ஏற்படும் போதுதான் கடவுளின் ஞாபகம் வருகின்றது. துன்பதுயரங்கள் தொடர்ந்துவர, பிரார்த்தனைகள், பூசைகள், பரிகாரங்கள் பலியிடுதல் படையல் வைத்தும் துன்பங்கள் நீங்கவில்லை என்றால் கடவுள் மீது வெறுப்பும் கோபமும் வருகின்றது. கேட்கும் போதெல்லாம் தருவதற்காகவா கடவுள்? போதுமான அளவு தந்துள்ளார். குறைவற்ற உடலும், வலிமையும் 24 மணி நேரமும் தினம்தினம் தந்துகொண்டேயிருக்கின்றார். இந்த மணித்துளிகளை (Money) மணிப்பொருட்களாக்கிச் சிறப்பாக வாழ முயல்வோம். நல்ல வழிநின்று முயல்பவர்களுக்கே இறைவன் அருளும் தாராளமாக கிடைக்கும். உழைக்கும் ஆற்றலையும் சுகமான உடலையும் இறைவனிடம் கேட்டுப் பிரார்த்திப்போம்.

இறைவணக்கம்

எந்தையாய் தாயாய்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
விந்தையாய் உமக்கோர் கோவில் அமைக்க
தந்தையின் மகனாய்த் தரணியில்
வந்துதித்த வீரபத்திரா சற்புத்திரா
கார் பொழிய கனகமணி நெல்விளைய
தூரகற்றி நீர்தேக்கிப் பயிர் வளர்க்கும்
ஊர் அதுவாம் வேலன்பராய் உற்றவனே
உத்தமனே வாழி! வாழி!!

கார்தரும் நீர்வழிந்து வீணே
மீன் நிறை கோவிலாக்கண்டிக் கடலுள்
சேர்வதைத் தடுத்தணை கட்டித் தேக்கிப்
பயிர் வளர்த்து வாழும் மக்கள் நிறை
ஊர் அதுவாம் வேலன்பராய் உற்றவனே
எம்மூர் சிறந்து எல்லோரும் வாழ
சீர்தருவாய் சிறப்பும் தருவாய்
பாராளும் வீரபத்திரா வாழி! வாழி!!

தென்னைகள் வளர்ப்போம் தெவிட்டாக்
கனி மரங்கள் விரும்பி வளர்ப்போம்
தன்னை யாரும் வளர்க்காதபோதும் - பனை
வளர்ந்து தரும் பயனடைவோம்
நெல் விளையும் நிலம்பரவிப் பொருளோடு
மாடுகன்று கோழியும் வளர்ப்போம்
பல் தொழிலும் சிறக்கப் பணிகின்றோம்
அருள் பூத்திடவே நீ வாழி! வாழி!!

நிதிய கீதம்

அறமது துளிர்த்து அருள்மிகு பூத்து
அவனியில் இன்பம் குலவிடவே
நறுஞ்சுவைத் தமிழொடு நாடிய பயன்தரு
நெறிமிகு சைவம் தழைங்கிடவே
வீறொடு வேலன் பிராய்வந் துறைந்திடு
வீரபத்திரன் விழியது நோக்க
திறன்தரு கலைகளும் கல்வியும் ஓங்கியே
வாழிய! வாழிய!! வாழியவே!!!

அன்னை தந்தையை அகமதி லிருத்தி
அனுதினம் அவர்களின் பாதம் போற்றும்
தன்னிக ரில்லா வாழ்வினைத் தந்த
தலைவனை என்றும் மனதினில் போற்று
கன்னல் மொழிபேசிக் கருணையைக் காட்டு
கடமையை என்றும் கண்ணெனப் போற்று
துன்பம் விலக்கிநீ துணிவுடன் வாழ்ந்து
வாழிய! வாழிய!! வாழி பல்லாண்டு!!

ஆசிச் செய்தி

சின்மயா மிஷன்
சின்மயஞானவேல்
9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1 - 3 - 2016

கந்தையா கனகம்மா நிதியத்தால் ஐந்தாவது ஆண்டாக 'இளந்தளிர்' என்னும் சஞ்சிகை நாவற்குழிப் பிரதேச மாணவர்களினதும், பெரியோர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி இம்முறையும் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது. கந்தையா கனகம்மா நிதியமானது அமரர்களான கந்தையா கனகம்மா ஆகியோரது ஞாபகார்த்தமாக அவர்களுடைய அனைத்துப் பிள்ளைகளாலும் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இந்நிதியம் பல கல்விப் பணிகளையும் சமூக சேவைப் பணிகளையும் ஆற்றி வருவது பெருமைக்கு உரியது. அந்தவகையில் இளந்தளிர் எனும் சஞ்சிகை இம்முறையும் மிகச் சிறப்பாக வெளிவரவும் அறப்பணிகள் தொடரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

இறைபணியில்
பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.

ஆசிச் செய்தி

அதிவணக்கத்துக்குரிய
கலாநிதி S. ஜெபநேசன் அடிகள் J.P
31 ஸ்வார்ட்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
25.02.2016

கோவிலாக்கண்டி மேற்கு கந்தையா கனகம்மா நிதியம் நாவற்குழிப் பிரதேசத்தில் மாணவர்களுக்கும் மக்களுக்கும் ஆரவாரமின்றி ஆற்றி வரும் சேவையைக்கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இவர்கள் ஆண்டு தோறும் வெளியிடுகின்ற இளந்தளிர் சஞ்சிகை மிகவும் உயர்ந்த தரத்தில் காணப்படுகின்றது. அச்சஞ்சிகையை வாழ்த்திச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இலட்சியவாதிகள் குன்றிப்போயுள்ள எமது சமுதாயத்தில் இளந்தளிர் இளய மனங்களில் நல் எண்ணங்களை விதைத்து வருகின்றது. உயர்ந்த நோக்குடன் போடும் விதைகள் வளர்ந்து பெருவிருட்சமாகிச் சமுதாயத்திற்கு நிழல் தரும் என்பதில் ஐயமில்லை.

"பொதுநலம் பேசும் புண்ணியவான்களின் போக்கினில்
அநேக வித்தியாசம்
புதுப்புது மொழிகளில் பேசுவதெல்லாம் புவியை மாய்க்கும் வெளிவேசம்

அந்தப் பொல்லாத மனிதர் சொல்லாமல் திருந்த
நல்லோரை எல்லோரும் கொண்டாடணும்" என்கிறார் பட்டுக் கோட்டைக் கல்யாணசுந்தரனார்.

நாவற்குழியூரில் பற்பல நற்பணிகளாற்றி வரும் கந்தையா கனகம்மா நிதியத்தினருக்கு எப்போதும் இறையருள் கிடைக்கும்.

இந்நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்
அன்புள்ளங்களை நான் மனதார வாழ்த்துகின்றேன்.
இறைவன் இவர்களை ஆசீர்வதிப்பாராக!

வாழ்த்துரை

நாவற்குழிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பொது அமைப்புக்களின் பங்களிப்பு

திரு. பீ. முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்.
20 - 1 - 2016

நாவற்குழி பிரதேசத்தில் இயங்கி பல்வகை கல்விச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருகின்ற கந்தையா - கனகம்மா நிதியம் வெளியிடும் இளந்தளிரின் 5வது படைப்பு வெளி வருவதறிந்து உவகை அடைவதுடன் அச் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்துக்காக மிகவும் மன மகிழ்வடைகின்றேன்.

பாடசாலை, சமூக உறவை ஏற்படுத்துவதில் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன முக்கியமானவையாகும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர் இவ்வாறான பொது அமைப்புக்களின் விழாக்கள், செயல் திட்டங்களில் பங்கு கொள்வதன் மூலமே பாடசாலை, சமூக உறவு வளர்ச்சியடையும். அத்தோடு இவ்வாறான பொது அமைப்புக்கள் பாடசாலை அபிவிருத்தியிலும் பங்காளர்களாக மாறுவார்கள். இதற்கு முன்னுதாரணமாக நாவற்குழி மகா வித்தியாலயத்தையும் அதன் ஊட்டப் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களையும் குறிப்பிடலாம்.

இப் பொது அமைப்புக்களில் கந்தையா - கனகம்மா நிதியத்தின் பங்களிப்பு காத்திரமானது. இவ் அமைப்பு பல வருடங்களாக நாவற்குழி, கைதடி பிரதேசப் பாடசாலை மாணவர்களின் சைவசமய வளர்ச்சிக்காக போட்டிகளை,

தேர்வுகளை நடாத்தி பரிசில்களை வழங்கி வருகின்றது. அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான போட்டிகளை நடாத்தி ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பௌர்ணமி தினங்களில் க.பொ.த (சா.தர) மாணவர்களுக்கு மேலதிக மீட்டல் வகுப்புகளை நடாத்தி வருகின்றது. இவ்வாறாக வருடம் பூராவும் இப்பிரதேச மாணவர்கள் மத்தியில் கல்வி, கலாசாரம் சார்ந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றமை பாராட்டிற்கு உரியது.

2016ம் ஆண்டு தொடக்கம் தமிழ்மொழியும், இலக்கியமும் சார்ந்த தேர்வுகளை நடாத்த உத்தேசித்துள்ளார்கள் என அறிகின்றேன். இத்திட்டம் சகல மாணவர்களுக்கும் பயன்படுவதோடு, தாய் மொழியில் சிறிது பின்தங்கிநிற்கும் எமது சிறார்களின் மொழித் தேர்ச்சியை நிச்சயமாக உயர்த்தும் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு. இவ்வாறான செயற்பாடுகளையெல்லாம் இந் நிதியம் பிரதேசசபை உப அலுவலக வளாகத்தில் கந்தையா - கனகம்மா நினைவாலயம் என தமது பெற்றோர் நினைவாக பொது மண்டபம் ஒன்றை அமைத்து அங்கே நடாத்தி வருகின்றமை பாராட்டிற்குரியது. மேலும் நாவற்குழி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி. வ. மேகலிங்கம் அவர்களின் நிறைபணி விழா சிறப்பாக நடைபெற இந்நிதியம் உட்பட இப்பிரதேச பொது அமைப்புக்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கதாக அமைந்தது. இறுதியாக, பிறக்கப் போகும் புத்தாண்டில் கல்வி, ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த செயல் திட்டங்களை மேற்கொண்டு கைதடி, நாவற்குழி பிரதேச கல்வி, கலாசார அபிவிருத்திக்கு உதவ எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்துரை

இதயங்களை வென்றிடும் இளந்தளிரே வருக.

திருமதி. சிவத்திரை சிவநாதன்

பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி

25.02.2016

கந்தையா கனகம்மா நினைவாலயத்தின் ஊடாக வருடாந்தம் முன்னெடுக்கப்படும் பரிசில் வழங்கல் விழாவின் போது வெளியீட்டுக்கு வருகின்ற இளந்தளிர் இதழுக்கு வாழ்த்துரைப்பதில் மனநிறைவடைகின்றேன்.

நாவற்குழிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கான சிந்தனையில் உருப்பெற்று அமரர்களான கந்தையா, கனகம்மா நிதியமாக உருவாகிப் பல்வேறுபட்ட கல்விப்பணி விருத்திகளை மேற்கொண்டு வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது. முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரண விநியோகம், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நூறுபுள்ளி பெற்றவர்கள் மற்றும் சித்தியடைந்தோர் ஊக்குவிப்பு, தரம் ஒன்றில் இணையும் அனைத்து மாணவர்களுக்குமான சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பது, ஒன்று தொடக்கம் பதின்மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கான பாடம் சார்ந்த போட்டிப்பரீட்சைகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கல், வாசிப்புமாத கட்டுரைப்போட்டிகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கல், சமயபாடப் போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்கல், வறுமைப்பட்ட மாணவர்களை இனங்கண்டு உதவித்திட்டங்களை கல்விக்காக மேற்கொள்கின்றமை, கைதடி முதியோர் இல்லத்திற்கும் சித்த மருத்துவ நிலையத்திற்கும் இலைக்கஞ்சி வழங்கல் போன்ற கல்வி, சமய மற்றும் சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் மேற்படி நிதியத்தின் பணியானது, காலத்தின் பதிவாகச் சான்று பகர்கின்றது. அந்தவகையில் அப்பணிகளின் சிறப்பினைச் சுமந்து ஆண்டுதோறும் விழா எடுத்து அதனது ஆவணமாக ஐந்தாவது மலராக வெளிவர இருக்கும் இளந்தளிர் - 5 இன்று போல் என்றும் பிரகவித்து பெரு விருட்சமாகத் துளிர்த்து எமது பிரதேச சிறார்களின் கல்விப்பணிக்கும் அறப்பணிக்கும் சமூகப் பணிக்கும் பங்காற்ற இறைவனின் ஆசி கிடைக்க வேண்டும் எனவும், இச்செயலுக்கான ஆணிவேராக இருந்த கந்தையா கனகம்மா தம்பதியினரையும் நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்து இளந்தளிருக்கு எனது இதயபூர்வமான வாழ்த்தையும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

"அறப்பணிகள் பல்கிப் பெருகித் தொடரட்டும்

இதழாசிரியர்களின் எண்ணங்கள்

மாறிவரும் உலகில் என்றும் மாறாதிருப்பது உண்மையும் சத்தியமும்தான், அறமும் அன்பும்தான். ஆற்றலும் ஆக்க வெளிப்பாடும்தான். இவற்றை அடையவோ வளர்க்கவோ அல்லது தூண்டிவிடவோ கல்வி அவசியமாகின்றது. கற்றார் கண்ணுடையார் என்பதற்கிணங்க, மக்களின் அறிவுக்கண்ணைத் திறந்துவிடும் வகையில் பலவகைகளிலும் இணைந்து முயன்று வரும் கந்தையா கனகம்மா நிதியத்தினர் வருடம்தோறும் வெளியிடுகின்ற ஆவணப்பதிவு நூலாகவும், இளம் படைப்பாளிகளின் களமாகவும் அமைந்துவரும் இளந்தளிர் சஞ்சிகையின் 5வது இதழை ஆக்கும் பொறுப்பை இவ்வருடம் எம்மிடம் வழங்கியமைக்கு நிதியத்தினருக்கு எமது நன்றிகள்.

கடந்தகால இளந்தளிர்கள் இப்பிரதேச மாணவர்களிடையே ஏற்படுத்திய மறுமலர்ச்சிகள், உத்வேகத்தை படைப்பாற்றல்களைக் கண்டு மிக மகிழ்ச்சியடையும் அதேவேளை தொடர்ந்தும் அவர்கள் எழுத வாசிக்க, சிந்திக்கக்கூடிய படைப்புக்களுக்கான களமாகவே அமைகின்றது. இப்பிரதேசத்து மாணவச் சிறார்களின் கட்டுரைகள், ஆக்கங்கள் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. இவ்வளவு ஆற்றலும் ஆக்க வெளிப்பாடும் இதுவரை கடலில் பெய்த மழையாகி விட்டதே என்ற ஆதங்கமும் எம்முள் எழுகின்றது.

முதல் உறவு (தாய்) முதல் அன்பு (நண்பன்) முதல் எழுதிய கவிதை, கட்டுரை, கதை என்பன பிரபல்யமான வகைப் பின்னணியில் வளர்ந்தவராலும் கூட மறக்க முடியாததாகும். அவ்வாறானவர்களை இளம் பராயத்தில் இருக்கும் போதே எழுதத் தூண்டுவது எமது நோக்கம். அதன் மூலம் இப்பருவத்தில் மட்டுமல்ல வளர்ந்துவிட்ட நிலையிலும் அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதே எமது இலட்சியமாகும். எழுத முடியுமானவனொருவனாக இருப்பவன் நிறைய வாசித்திருப்பவனாக

இருப்பான். இங்கே படிப்பு வேறு வாசிப்பு வேறாகும். சாதனை படைத்த படைப்பாளிகள் பலர் பாடசாலைக் கல்வி பெற்றுக் கொள்ளாதவர்களாய் இருந்தாலும் கூட, பாடசாலைக்கல்வி கற்றிருந்தால் இன்னமும் சிறப்பாக மிளிர்ந்திருக்க முடியுமல்லவா? அந்தவகையில் இப்பிரதேசத்து மாணவர்களின் ஆக்கங்களை வெளியிடுவதால் மேலும் மேலும் பல படைப்பாளிகளின் ஆற்றல்களைத் தூண்டமுடியும் என்ற பரிபூரண நம்பிக்கை எமக்கு உண்டு. ஆகவே நிறையவே வாசியுங்கள். நிறைவாக யோசியுங்கள். நிதர்சனங்களைப் படையுங்கள். இளந்தளிர் என்றும் உங்களுக்குக் களம் அமைக்கும்.

வழமைபோலவே இவ்வாண்டு இளந்தளிர் - 5 உம் இப்பிரதேசத்துச் சாதனையாளர் ஒருவரைக் கௌரவிக்கும் முகமாக திரு. செ. பஞ்சாட்சரம் அவர்களின் புகைப்படத்தை அட்டையில் தாங்கி வருகின்றது. கந்தையா கனகம்மா நிதியச் செயற்பாடுகளின் ஆவணப்பதிவாகி வருகின்றது. கல்விச் சாதனையாளர்களின் நேர்காணல்களுடன் வருகின்றது. போட்டிப் பரீட்சை முடிவுகளையும் பரிசுக்குரியவர்களின் விபரங்களையும் தாங்கிவருகின்றது.

தொடர்ந்தும் இளந்தளிர்கள் துளிர்விடும். பயன்தரும். வளம் சேர்க்கும். நீரும் பசளையுமாக என்றென்றும் நீங்கள் அமைய வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க இறையருள் வேண்டும். மீண்டும் வருவோம்.

நன்றி.

கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!

செல்வன். வ. கபிலன்
செல்வி. து. ரஜிதா
05.03.2016

காப்பாளர் அறிக்கை

உலகம் மிக வேகமாக, ஆனால் ஒரு ஒழுங்குக்கமைவாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. தத்தமது மேன்மைக்காகவும், தேவைக்காகவும் போட்டியிடும் மனித வாழ்வியலில் அவரவர் பெற்ற அனுபவங்கள் கற்றலாக விரிவடைகின்றது. தினம் தினம் கற்றுக்கொள்ளும் புதிய புதிய அறிவியலை, அவற்றின் ஆற்றலை மனித ஆற்றலுடன் ஒன்றிணைத்து வாழ வைக்க நாம் முயன்று கொண்டிருக்கின்றோம். உண்மையான உளைப்பாளிகளும், சோர்வில்லா தொழிலாளிகளும் செறிந்து வாழும் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை அவர்களது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதாலேயே, அதற்கு உதவுவதாலேயே ஊக்குவிப்பதாலேயேதான் அடைந்து விட முடியும் என நாம் திடமாக நம்புவதால் இவ்வாறான பணிகளை எமது பெற்றோர் நினைவாக 2007ம் ஆண்டு ஆரம்பித்த கந்தையா கனகம்மா நிதியத்தூடாக முன்னெடுத்து வருகின்றோம்.

கல்வி, நல்லொழுக்க மேம்பாடு கருதி ஆரம்பித்த நமது செயற்பாடுகள், இன்று குடும்பநலம், சுகாதாரம் போசாக்கு, பொருளாதார வளர்ச்சி எனப் பல தளங்களில் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஆற்றலை இனங்கண்டு, வெளிக்கொணர்ந்து, சுய தேடலையும் சுயநம்பிக்கையையும் வளர்த்து முழு மனிதர்களாக வாழ வைக்கும் இலக்கு நோக்கிய எமது பயணத்தில் இப்பிரதேச மாணவர்களும், மக்களும் விருப்புடன் இணைந்து செயற்படுவது மிக உத்வேகம் அளிக்கின்றது. அவ்வாறான சிந்தனைகளுடன் நாம் 2015 ஆண்டு நடாத்திய போட்டிப் பரீட்சையின் பரிசில் வழங்கும் நாள் நிகழ்வில் இங்கு ஒன்று கூடியிருக்கின்றோம். அவ்வாறான நிகழ்வை நெறிப் படுத்திக் கொண்டிருக்கும் தலைவர் அவர்களே

முதன்மை விருந்தினர் அவர்களே
சிறப்பு விருந்தினர்களே
கௌரவ விருந்தினர் அவர்களே

மாணவச் செல்வங்களே, அவர்தம் பெற்றோர்களே பிரதேச பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களே முன்ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களே, நிர்வாகிகளே சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், உறுப்பினர்களே இப்பிரதேச மக்களே உங்கள் அனைவரையும் இவ்வேளையில் வாழ்த்தி வணங்கி வரவேற்கின்றோம்.

இந்நிகழ்வை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் திரு. சிற்றம்பலம் துரைராசா அவர்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர். அவரது பதவிக் காலத்தில் இப்பிரதேசம் மிகவும் பொலிவுற்று விளங்கியது. ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் பிரச்சினைகளை அணுகி ஆராய்ந்து நல்ல முடிவெடுக்கும் திறன் மிகுந்தவர். இவர் இன்று எம்மோடு கலந்து சிறப்பிக்கின்றார் இவரை அன்புடன் வரவேற்பதுடன் இவரும் இவரது குடும்பத்தவரும் இறையருள் பெற்று சுகமாக வாழ வேண்டும் எனப் பிராத்திக்கின்றோம்.

எமது முதன்மைவிருந்தினர் திரு. சதாசிவம் நிமலன் (MA. Dip.in.Edu, SLPS) யாழ் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர். எமது கிராமத்துச் சூழலை ஒத்த வேலணைக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து உயர் கல்வி கற்று இன்று உன்னதமான நிலையில் உள்ளார். ஆரம்பக் கல்வி, இடைநிலை உயர்தரக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பட்டப் படிப்புகளை யாழ் பல்கலைக்கழகத்திலுமாகப் பெற்று உயர்ந்தவர். இவரது கல்வித் தேடல் இவரது பிள்ளைகளையும் பற்றிக் கொள்ளவே அவர்களும் உயர்கல்வி கற்று வருகின்றனர். திருமதி. கமலாதேவி நிமலன் அமைதியாக இருந்து அனைத்தையும் நிர்வகித்து வருகின்றார். இவ்வாறான சிறப்புமிகு திரு. நிமலன் அவர்கள் தனது வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு இன்று எங்களுடன் கலந்து சிறப்பிக்கின்றார். இவரும் இவரது குடும்பத்தவரும் மேலும் சிறப்புகள் பெற்றுயர இறையருள் வேண்டிப் பிராத்திக்கின்றோம்.

எமது பிரதேசத்தின் பிரபல்யம்மிக்க பாடசாலையாகிய யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தை கடந்த பல வருடங்களாக நிர்வகித்து, தென்மராட்சிக் கல்வி வலயத்திலேயே தரம்மிக்க பாடசாலையெனத் திகழும் அளவிற்கு மேம்படுத்தி ஓய்வு பெற்ற நிலையிலும், தனது பிரதேச வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் திருமதி வசந்தா தேவி மேகலிங்கம் அவர்கள் எமது இன்றைய சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். எமது நிதிய செயற்பாடுகளில் ஆரம்பகாலம் தொட்டு இன்றைய நிலைவரையும் எம்முடன் இணைந்து எமக்கு வழிகாட்டி, எமது வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்து இப்பிரதேச மாணவர்களின் கல்வி நல்லொழுக்க மேம்பாடடையச் செய்து, தொடர்ந்தும் செயற்பட்டு வரும் இவரும் இவரது குடும்பத்தவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ்விலுயர இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து மகிழ்வடைகின்றோம்.

நூலகர் என்றதும் எல்லோர் நினைவிலும் நிறைந்து நிற்கக் கூடிய அளவில், இப்பிரதேச நூலகத்தைத் தளமாகக் கொண்டியங்கி, தாயாகி நின்று சிறுவர்களுக்கெல்லாம் எழுத்தறிவித்த திருமதி. இராணி சிவசுப்பிரமணியம் அவர்கள் இன்றைய சிறப்பு விருந்தினராகக் கலந்து எம்மைக் கௌரவப்படுத்துகிறார். நாம் நூலக சேவையுடன் இணைந்து செயலாற்ற ஆரம்பித்த பின்னர் தொடர்ந்து 4 தடவைகள் சிறந்த நூலகம் என்ற விருதை எமக்குப் பெற்றுத்தந்தவர். மாணவர்களை வாசிக்கத் தூண்டியவர். இவர் காலத்தில் ஏற்றம் பெற்ற எமது நூலகம் தொடர்ந்தும் வளர்முகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இடமாற்றம் பெற்று இவர் வேறு பிரதேசம் சென்றாலும் கூட, இவரது பணிகளும் சேவைகளும் என்றும் எமது மனதில் நிறைந்திருக்கும். இவரது குடும்பத்தவரும் இன்று போலவே என்றும் சிறந்து வாழ இறைவன் அருள் வேண்டிப் பிராத்திக்கின்றோம்.

நாம் எமது கவனத்தை முன்ஆரம்பபாடசாலை மாணவர் பால்தான் குவித்து வருகின்றோம். ஐந்தில் வளையாதது

ஐம்பதில் வளையாது என்பதற்கிணங்கி இளமைப் பருவத்திலிருந்தே ஒழுக்க நெறிகளை மாணவர்களிடையே வளர்த்து வரும் முன்ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் போதிய ஊதியமுமின்றி மிகுந்த பொறுப்புணர்வுடனும் சேவையுணர் வுடனும் பணியாற்றி வரும் இவர்கள் போற்றுதற் குரியவர்கள். இவர்களுடன் இணைந்தும் உதவியும் செயலாற்றி வரும் திருமதி. சுபத்திராதேவி தனபாலசிங்கம் அவர்கள் - முன் ஆரம்ப பாடசாலைகளின் இணைப்பாளர். இன்றைய நிகழ்வின் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்றார். இவரும் இவர்போன்றியங்கும் முன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் சுகமாக வாழ்ந்து இப்பிரதேசத்துக்குச் சேவையாற்ற இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து மகிழ்வடைகின்றோம்.

ஆசியுரை வழங்கிய சமயப் பெரியார்களுக்கும் வாழ்த்துரைகள் வழங்கிய கல்விப் பணிப்பாளர்களுக்கும் எமது நன்றிகளும் வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

இப்பிரதேச மாணவர்கள், பெற்றோர், சமூகப் பணியாளர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், பொது நலக் குழுக்கள், சமயப் பெரியோர் பிரதேசசபை உப பணிமனைப் பொறுப்பதிகாரி அலுவலர்கள் நூலகர், உதவியாளர் அனைவருக்கும் நன்றி. இவர்கள் அனைவரும் சுகமாக வாழ்ந்து எமது பிரதேசத்துக்குப் பணிபுரிய இப்பிரதேசம் மேன்மையுறும் என வாழ்த்தி வணங்கி மகிழ்வடைகிறோம்.

நன்றி.

கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்.

செயற்பாடுகளும் திட்டமிடல்களும்

நிதியம் ஆரம்பித்த 2007ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் இப்பிரதேச பாடசாலை மாணவர்களுள் அரச, பொதுத் தேர்வுகளில் சித்தியடைபவர்களுக்கு ஊக்குவிப்பும் கௌரவமும் வழங்கிவரும் நாம் 2013ஆம் ஆண்டிலிருந்து இப்பிரதேச மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் எங்கு கல்வி கற்றும் சித்தியெய்திய வர்களையும் இணைத்து ஊக்குவிப்பும் கௌரவமும் வழங்குகிறோம்.

2010ஆம் ஆண்டிலிருந்து சமய அறிவை வளர்ப்பதன் மூலம் நல்லொழுக்க விழுமியங்களைப் பேணும் வகையில் சமய பாடப் போட்டிப் பரீட்சைகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கி வருகின்றோம். இவ்வாண்டு முதல்கொண்டு இப்பிரதேச கிறிஸ்தவ மாணவர்களும் பங்குகொள்ள வழிவகுக்கும் வகையில் இப்போட்டிப் பரீட்சை தமிழ்மொழிப் போட்டிப் பரீட்சையாக மாற்றியமைத்துள்ளோம்.

2012ஆம் ஆண்டில் இருந்து நல்வழி நூல் தொகுப்பும், 2014 இல் உயிரெழுத்து அகராதி தொகுப்பும் பதிப்பித்து இப்பிரதேச மாணவர்களுடன் கைதடிப் பிரதேச பாடசாலைகளின் மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கி வருகின்றோம்.

2016ம் ஆண்டில் தமிழ் அமுது என்னும் தமிழ்ச் சொற்பொருள் கூறும் நூற்தொகுப்பை வெளியிட்டு மாணவர்களுக்கு வழங்கவுள்ளோம். 2015ம் ஆண்டில் தரம் 1 இல் இணைந்து கொண்ட 67 மாணவர்களுக்கும் 2014ம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வில் சித்தியெய்திய மாணவர்களுள் 100 புள்ளிகளுக்கும் மேல் பெற்ற 43 மாணவர்களுக்குமாக 110 மாணவர்களுக்கு சிறுவர் பராய வங்கிக்கணக்கு ஆரம்பித்து சேமிக்கத் தூண்டி வருகிறோம். 2016 இல் தரம் 1 இல் இணையும் மாணவர்களுக்கும் 2015ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் 100 புள்ளிகளுக்கும் மேலாகப் பெற்ற மாணவர்களுக்கும் வங்கிக் கணக்குகள் ஆரம்பித்து பெறுமதிமிகு பரிசுப்பொருட்களையும் வழங்குகிறோம். புத்தகப்பை,

தொப்பி என்பவற்றில் எமது நிதியத்தின் பெயர் பொறித்து வழங்குகின்றோம்.

30.12.2015 இல் பிரதேசத்து மாணவர்களின் மந்த போஷாக்கு நிலையைச் சீர்செய்ய ஒருதொகுதி புரத தானிய உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து நலிந்த பொருளாதார வளம் கொண்ட பாடசாலை செல்லும் மாணவர்களுள்ள குடும்பங்களுக்கு வழங்கினோம். 120 பயனாளிகளையும் பிரதேச சனசமூக நிலையங்களும் முன் ஆரம்பப் பாடசாலைகளும் தேர்ந்தெடுத்து உதவினர். நன்றி.

02.07.2015 இல் இப்பிரதேச மாணவர்களும் மக்களும் பயனடையும் வகையில், சுதேச வைத்திய முறைகளை மீளவும் அறிமுகப்படுத்தும் வகையில் மிகுந்த சிரமப்பட்டு நாம் ஆரம்பித்து வைத்த சித்த மருத்துவ நிலையம் போதிய நோயாளர்கள் வருகையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நடத்து வதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றோம்.

03.01.2016 இல் மாணவர்களைப் புத்தகங்களுடன் பழக வாய்ப்பளிப்பதன் மூலம் வாசிக்கும் திறனை அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கையில் 2016 இல் தரம் 1 இல் சேரவுள்ள மாணவர்கள், முன் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகளையும் இணைத்துக் கல்விச்சுற்றுலா ஒன்று ஒழுங்கு செய்து யாழ் பொதுநூலகத்திற்கு அழைத்துச் சென்று வந்தோம் 2015இல், தரம் ஒன்றில் சேர்ந்து கொண்ட 67 மாணவர்களுக்கும், 2014ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்கள் 43 என 110 மாணவர்களுக்கும் பராயமடையாதோர் சேமிப்புக் கணக்கை வங்கியில் ஆரம்பித்து வங்கியிடமிருந்து அன்பளிப்பாக கற்றல் உபகரணங்கள் பெற்று வழங்கினோம். 18 வயதில் இந்த மாணவர்கள் A/L இக்கு வரும்போது இவர்களது உயர்கல்வித் தேவைக்காக நல்லெண்ணம் கொண்டவர்களிடம் இருந்தும், இவர்களுமாக நிதி சேமித்து தமது கல்விக்குத் தம்மைத் தாமே தயாராக வைக்கும் சுய பொருளாதார வளர்ச்சியைத் தூர நோக்காக்கிச் செயற்படுத்தியுள்ளோம்.

இப்பிரதேச படைப்பாளிகளின் ஆக்கங்களை இணைத்து சிறுகதை தொகுப்பு வெளியிட்டு, ஆக்க இலக்கியவாதிகளை ஊக்குவிக்கவும் தீர்மானித்துள்ளோம். இவ்வாண்டும் 2016இல் ஆண்டு ஒன்றில் சேரும் மாணவர்களுக்கும் 2015 இல் 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் தேர்வில் 100 புள்ளிகளுக்கும் மேல் பெற்றுக்கொண்ட இப்பிரதேச மாணவர்கள் அனைவருக்கும் வங்கிக்கணக்கு ஆரம்பித்துப் பாடசாலைப் புத்தகப்பையும் தொப்பிகளும் வழங்கினோம்.

18.11.2015 பிரதேச மக்களின் கண்பார்வைத் திறனறிந்து தேவைப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும், வைத்திய ஆலோசனைகளும் லயன் கழகத்தின் உதவியுடன் வழங்கினோம். 150 பயனாளிகள் மூக்குக்கண்ணாடி பெற்றனர். 10 - 12 பார்வை குறைந்தவர்கள் வைத்தியசாலைகளுக்குச் செல்ல சிபார்சு செய்து அனுப்பி வைத்தோம்.

நாம் ஆரம்பித்து நடாத்தி வந்த யோகா கலைப் பயிற்சி வகுப்புக்கள் போதிய மாணவர்கள் வரவின்மையால் தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டுள்ளது. இப்பிரதேச பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் நல்லாதரவுடன் ஆரம்பித்து நடாத்தவுள்ளோம்.

சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கும் கற்றல் முறைமை களையும் பழக்க வழக்கங்களையும் சொல்லித் தருகின்ற, அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் கொண்ட எமது பிரதேச முன் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் சிறுவர் உளமேம்பாட்டுப் பயிற்சியும் ஆசிரிய விருத்திப் பயிற்சியும் மேற்கொள்ள சிறந்த வளவாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத் தியுள்ளோம். விரைவில் இப்பயிற்சி நெறியும் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறாக விரிந்து கொண்டும் தொடராகவும் நடைபெற்று வரும் சமூகப்பணிகள் சிறப்புடன் நிறைவுற இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்

அட்டைப் படம் கூறுவது

விண்ணுலகத்து வியத்தகு சோலை ஒன்று மண்ணுலகில் வந்து அமைந்ததுவோ என வியப்புற வைக்கும் எழிலோடு நாற்புறமும் கடலால் சூழப்பெற்று இயற்கை வளமும் வனப்பும் பொருந்திய இந்தப் புண்ணிய பூமியிலே, இந்து சமுத்திரத்தின் முத்து என்னும் ஈழநாட்டிலே கலப்பை போன்ற வடிவமைந்த யாழ் குடாநாட்டின் கீழ்த்திசையில் சாவாங்கோட்டை, சம்பு குண்டம் என முன் நாட்களில் அழைக்கப் பெற்ற நாவற்குழியூர் பல்வகைச் சிறப்புப் பொருந்தியது.சாவகரால் ஆக்கிரமிக்கப்பட்டு அவர்கள் வாழ்ந்த இடம் சாவகச்சேரி என்றானது போல சாவகரின் கோட்டையாக விளங்கிய இடம் சாவாங்கோட்டை (சாவகர் கோட்டை) என அழைக்கப்பட்டு இருக்கலாம் என்பது துணிவு. மிகுந்த மருத்துவக் குணவியல்புகள் கொண்ட நாவல் மரங்கள் செறிந்து செழித்து வளர்ந்திருந்தமையால் சம்புகுண்டம் எனக் காரணப் பெயர் பெற்றுப் பின்னர் நாவற்குழி எனவும் மாறியிருக்கக் கூடும். நாவற்குழி முதற்கொண்டு தச்சன்தோப்பு, வேலன்பராய், கோவிலாக் கண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கி நாவற்குழிப் பிரதேசம் என இப்பிரதேசம் அழைக்கப் பெறுகின்றது. இப்பிரதேச நிர்வாகப் பணிகளை சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப பணிமனையும், சாவகச்சேரி பிரதேச செயலர் நிர்வாகக் கட்டமைப்பும் கவனித்து வருகின்றன.

பூமியில் வகுக்கப்பட்ட ஐந்து வகை நிலப்பகுப்புகளில் நால்வகை நில அமைப்புக்களைத் தன்னகத்தே கொண்ட இப்புனித பிரதேசத்திலே, கோவிலாக்கண்டிக் கடல், நாவற்குழி நீரேரி, மறவன்புலவின் பொன்விளையும் மண்வளத்துடன் தானாகவே தோன்றி வளர்ந்து அழிவிலும் பயன் தந்து கொண்டிருக்கும் பனைமரக்காடுகள், காட்டுத் தென்னந்தோட்டம், வரலாற்றுச்

சிறப்புமிகு வேலன்பராய் கண்ணகி அம்மன் கோவிலுடன் கிராமமொரு கோவிலெனச் சிறப்புமிகு ஆலயங்களும் உயர்தர கல்விக்கூடங்கள், கற்றவர் கூடும் அரங்குகள், இசைக்கலைஞர்கள், தொழில்நுட்பவிற்பன்னர்கள், உணவளிக்கும் உழவர்கள், இலக்கிய விருந்து படைக்கும் படைப்பாளிகள் நிறைந்த செழுமைமிகு பிரதேசத்திலே, தச்சன்தோப்பு என்னும் சிற்றூரிலே, ஆச்சாரியத் தொழில் விற்பன்னர்கள் கூட்டத்திலே செல்லத்துரை இராசம்மா இணையர்களுக்கு 24.03.1957 இல் பிறந்தார், இளந்தளிர் 5 இன் அட்டையை அலங்கரிக்கும் திரு. பஞ்சாட்சரம் அவர்கள். தனது ஆரம்பக் கல்வியை யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் பெற்று இடைநிலைக் கற்கை நெறிகளை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தொடர்ந்தார். எட்டுப் பிள்ளைகள் கொண்ட குடும்ப பொருளாதார நிலைகண்டு இவருக்கு மூத்தவர்கள் இருவரும் ஆச்சாரியத் தொழில் பழகி வருமானம் ஈட்டினர். கல்விமீது கொண்டிருந்த வேணவாவாலும் கற்பதாலேயே உயரலாம் என்ற தெளிந்த நம்பிக்கையுடனும் உயர்கல்விக்குக் குடும்ப பொருளாதாரம் இடம் தர மறுத்த போதிலும் தொழிலும் செய்துகொண்டு படித்தும் உயர்ந்தவர் இவர். படிக்கவேண்டுமென விருப்புக் கொண்டவர்களுக்கு எதுவும் தடையாக மாட்டாது என நிறுவியவர். வறுமையும் வயதும் கற்க முனைபவர்களுக்கு தடையாக முடியாது எனக் கற்றுயர்ந்தவர்.

தொழில்முறைப் பட்டங்களை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியிலும் உயர் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் பெற்று (B.A) கலைமாணியாகிப் பின்னர் பட்டப்பின் டிப்ளோமா (Dip in Education) முதுநிலைக்கல்வி (M.Ed) என்பவற்றையும் பெற்றுக் கொண்டார். 1981ம் ஆண்டில் தரம் 1 ஆசிரியராகி வரலாறு, புவியியல், அரசியல் போன்ற பாடங்களை மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ள ஏற்றவாறு மாணவர்களுக்குப்

பயிற்றுவித்து வந்தார். இதனால் இவரிடம் கற்ற மாணவர்கள் தேர்வுகளில் சிறப்புச் சித்தி பெற்று உயர்நிலை அடைந்தனர். முழங்காவில் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்த இவரது ஆசிரியப்பணி, வளர்ந்து விரிந்து பரவிப் பாய்ந்து பளை மகாவித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கல்வி கற்றுவந்த மாணவர்களின் அறிவுப்பசிக்கு நல்ல தீனியாயிற்று. இவரது ஆற்றல், ஆளுமை ஆலோசனைகள் அறிவுறுத்தல்களுக்காக மாணவர் கூட்டம் எப்போதும் இவரை மொய்த்தபடியே இருக்கும். எப்போதும் புன்சிரிப்புடனும், பண்பாகவும் அன்பு பாராட்டியும் பழகிவரும் இயல்பு கொண்ட இவர் பாடசாலை நிர்வாகங்களாலும் விரும்பப்பட்ட ஒருவராவார். விகடமாகப் பேசுவதும், அன்பாக அரவணைத்துப் பழகும் இயல்பும் கொண்ட இவர் ஊர் மக்களினால் பெரிதும் விரும்பப் பட்டதாலும் பல கிராம முன்னேற்றச் சமூக முன்னேற்றச் செயற்பாடுகளில் இணைந்து திறம்படச் செயற்பட்டார். உண்மையை உள்ளபடியே எப்போதும் பேசுவது இவரது உயர் பண்பாகும்.

தச்சன் தோப்பில் அமைந்துள்ள முருகன் கோவில் அறங்காவலர் குழுவில் இணைந்து அரும்பணிகள் ஆற்றினர். இரண்டு அண்ணாக்களுடனும் நான்கு தம்பியருடனும் ஒரேயொரு தங்கை மல்லிகாதேவியுடனும் அன்பாக வாழ்ந்து வரும் நாளில் 1980ம் ஆண்டில் சிலப்பதிகாரக் காப்பியத்தில் மணிபல்லவம் என அழைக்கப்பெற்று பாரெங்கும் பாடப்பெறும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமையப்பெற்ற நயினாதீவில் வேலாயுதபிள்ளை நாகம்மா இணையரின் நல்வாழ்வுப் பயனாய் வந்துதித்த கனிஷ்ட புத்திரி செல்வி கனகாம்பிகை, (பொது முகாமைத்துவ உதவியாளர் / சுருக்கெழுத்தாளர் யாழ் மாவட்டச் செயலகம்) என்பவரை விரும்பி மனமொத்து மணந்து இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து

வந்தார். அதன் பயனாக பார்த்தீபன் (பொறியியலாளர்), கார்த்தீபன் (மருத்துவபீட மாணவன்) காயத்திரி (மாணவி) என மூன்று பிள்ளைகளுடன் சாலச்சிறந்து வாழ்ந்தவராவார்.

இவர் கல்வி கற்கும் காலங்களிலும், பின்னர் இவர் கற்பிக்கும் காலங்களிலும் ஐயந்திரிபு அற அறிவிக்கும் அறிவும் ஆற்றலும் மிகக் கொண்டவர். வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வளர்ந்த மாணவர்கள், பஞ்சு மாஸ்ரர் என சிறப்புப் பெயரால் அழைத்தாலும் கூட இவர் ஒருவருக்கும் ('Punch') பஞ்ச் கொடுத்தவரல்லர். காசில்லாமல் போனது கல்வி கற்க விரும்பும் ஒருவருக்குத் தடையாகாது என வாழ்வில் சாதித்துக் காட்டிய இவரது புகைப்படத்தை இளந்தளிர் 5 இன் முகப்பில் அமைத்து, இவருக்குப் பெருமை சேர்ப்பதுடன் உங்களாலும் முடியுமெனத் தட்டிக்கொடுத்து ஊக்குவித்து உதவி செய்து எமது பிரதேச மாணவர்களை மேலெழ வைத்து வரும் கந்தையா கனகம்மா நிதியத்தவர் இவரை முன்னுதாரணமாகக் கொண்டு நீங்களும் விரும்பி கற்று, அறிந்து தெளிந்து உயரவேண்டும் என நாம் வளர்க்கும் மாணவர்களையும் ஊக்குவிக்கின்றோம்.

சரணம் குருவே சரணம்



செல்லப்பா சுவாமிகள்

சரணம் குருவே சரணம்

கடையிற் சுவாமிகள்

க. மயில்வாகனம்
யாழ்ப்பாணம்

தன்னை நம்பும் ஒருவர் தனது, சக்தியை நம்பும் ஒருவர் தன்னுள்ளே இருக்கும் பிரம்மத்தை அறிந்து கொள்வர். அந்தப் பிரம்மமே கடவுள். உலகைச் சிருஷ்டிப்பவர், பாதுகாப்பவர், எல்லாம் அறிபவர், எங்கும் நிறைந்த பரம்பொருளும் அவரே. கடவுள் வெளியே இருப்பதாகவும் அர்ச்சனைப் பொருட் களுக்காகவும், அவிர்பாகத்துக் காகவும் காத்திருப்பதாகவும் எண்ணி மயங்கித் தேடி அலையும் மனிதன் தனது சக்தியை அறிந்து தன்னை நம்ப ஆரம்பிக்கும் போதே அவன் கடவுள் ஆகிவிடுகிறான். தன்னை நம்பாதவன், வேறெதையும், வேறெவரையும் நம்பப் போவதில்லை. என்னால் முடியும், நான் சாதிப்பேன், நான் வெல்வேன் என்ற நேர் எண்ணம் வளர ஆரம்பித்ததுமே அவன் கடவுளை நம்பிவிடுவான். தவறான எண்ணங் கொண்டவனே மற்றவர்களையும், மற்றவைகளையும் தவறாக எண்ணுவான். சீரிய நேர்ச் சிந்தனைகள் கொண்டவன் பிழையாக எண்ணவே மாட்டான். தவறாக வழிகாட்டமாட்டான். மற்றவர்களை மதிப்பிட நான் யார்? மற்றவர்களைத் தண்டிக்க நான் யார் என எண்ணும் ஒருவர் மனித நிலையிலிருந்து புனிதராகிப் பின்னர் சித்தராகிவிடுவார். தன்னை எளியராக்கி, இறையடியோனாக்கி ஏனையோரை மதித்து நடக்க ஆரம்பித்து விடுவார். இந்த ஆரம்பம் ஒருவர் ஞானியாகவோ, யோகியாகவோ சித்தராக வாழவோ வழிகாட்டிவிடுகின்றது. அவ்வாறு பல சித்தர்கள் இந்தியாவில், தமிழ் நாட்டில் வாழ்ந்த போதிலும் பதினெண்சித்தர்கள் பற்றியே விரிவாக அறியமுடிகின்றது. அவர்கள் போல, இலங்கையில் வாழ்ந்த சித்தர்களுள் சிலரின் வரலாறுகளே பெறமுடிகின்றது. வரலாறு எழுதிவைக்காத குறை எம்மினத்துக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி வருவது கண்கூடு. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய இனம் எனப் பேசப்படும்

இனம் அவற்றை நிறுவப் போதிய ஆவணங்கள் எவற்றையும் விட்டுச்செல்லவில்லை அல்லது பாதுகாக்கப்படவில்லை. அந்த வகையிலே நாம் அறிந்த சித்தர்கள் வரலாற்றை நாம் பெற்ற தரவுகளைக் கொண்டு எழுதிவைக்க விரும்பியே இளந்தளிர் 4 இல் முதன்மைச் சித்தராகிய குடையிற்சுவாமி என அழைக்கப்படும் கோண்டாவில் கந்தையாச் சித்தருடைய வரலாற்றைத் தந்திருந்தோம். அவர் வழித்தோன்றலாகிய கடையிற் சுவாமி அவர்களைப் பற்றி நாம் அறிந்தவற்றை இளந்தளிர் 5 தாங்கி வருகின்றது.

ஏன், எதற்கு என்ற கேள்விகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. நான் யார் என்று அறியும் ஆவல் இல்லாமல் ஞானம் இல்லை. ஞானம் என்பது அறிவு. அறிவு பெறவேண்டுமாயின் கேள்விகள் எழவேண்டும். நியாயமான கேள்விகளுக்கான பதில் தேடலில் சித்தம் அடங்கியிருக்கும். நான் என்ற நினைப்பு அற்றுப்போக எல்லாம் அவன் சித்தம் என்ற ஞானத் தெளிவு பிறக்கும். வயிற்றுப்பசி கொடியது. விரும்பி அதைப் போக்குவது புண்ணியமாகும். ஞானப்பசி இனியது. சுயதேடலில்தான் அது கிடைக்கும். இதை ஒருவருக்கு வழங்குவது கோடி புண்ணியமாகும். அன்னசத்திரம் ஆயிரம் வைத்தாலும், ஆலயம் பதினாறாயிரம் அமைப்பதிலும் தேடி அலையும் ஒருவனுக்கு ஞானப்பழம் - கல்வி அறிவு வழங்குவதே சாலச்சிறந்தது. தேடி அலையும் எவரும் சற்குருவைக் கண்டுகொள்வர். தாய்ப்பசுவைத் தேடி அலையும் கன்றுக்குட்டி, பசுவைக் கண்டுகொள்ளும். பசு என்றால் ஆன்மா. பதியைத் தேடி அலையும் பசு - ஆன்மா, பதியை - இறைவனை அடைந்தே தீரும். தேடல் தூய்மையானதாகவும், தீவிரமானதாகவும், நுண்மையானதாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறான தேடல்களுக்குத் தீனி வழங்கிவரும் நாம் கடந்த காலங்களில் ஆற்றிய பணிகளின் வலிமை கண்டு, இரங்கித்தான் இறைவன் சித்தர்கள் பற்றி எழுதும் எண்ணக்கருவை எமக்குள் உருவாக்கி வளர்த்து பலவகைகளிலும் உதவி வருகின்றான் என்பது நிதர்சனம்.

கடையிற் சுவாமிகள், தென்னிந்தியாவின் பெங்களூரில் அ.திகடநாதன் என்ற பெயரில் வாழ்ந்தவரென்பது மட்டும் அறிய முடிகின்றது. அம்மா, அப்பா பூர்வீகம் அறியப்படாமைக்கு வரலாறுகள் எழுதப்படாமையே காரணமாகும். அத்துடன் நதிமூலம், ரிஷிமூலம் பார்க்கக்கூடாது என்பதும் ஒரு வழக்கு. வரலாறுகளுக்குள் அடக்கப்பட முடியாதவர்கள் யோகிகள் என்பதால் பதிவுகள் இல்லாமலும் போயிருக்கலாம். பெங்களூரில் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்திருந்தும் உயர்கல்வி கற்றுத் தலைமை நீதிபதியாகக் கடமைபுரிந்தவர் என்பதும் அறிய முடிகின்றது. கொலைவழக்கு ஒன்றில் குற்றவாளி கொலையாளியே எனச் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட சிறப்பு ஜூரிமார் கொலையாளியே எனத் தீர்மானித்து தூக்குத் தண்டனைக்குப் பரிந்துரை செய்ய, இவனுக்கு மரணதண்டனை வழங்க நான் யார்? என்ற ஞானக்கேள்வி திகடநாதன் (கடையிற் சுவாமிகள்) மனதில் எழுந்தது. அந்தக் கேள்வி எழுந்த நாள் சுவாமி அவர்களது வாழ்வின் திருப்புமுனை. அவனருள் கிடைத்த நாள். பக்குவப்பட்டிருந்த ஆன்மா ஞானப்பால் உண்ட நாள். திருஞானசம்பந்தருக்கு 3 வயதில் கிடைத்த ஞானம் இவருக்கும் கிடைத்தது. ஞான ஒளிவெள்ளம் உள்ளே நயந்து பரவி, இன்னொருவருக்கு - அவர் குற்றமே புரிந்திருந்தாலும் கூட, தண்டனை வழங்க நான் யார்? என்ற தெளிவு உண்டானது. நீதிபதிப் பதவியைத் துறந்து சற்குரு ஒருவரைத் தேடி ஓடி ஞானம் பெற்றுவந்த இவருக்குத் தீட்சைப்பெயர் முத்தியானந்தா ஆகும்.

சிவபூமியாம் எம் மண்ணுக்குச் சித்தர் ஒருவர் வரக் காலம் கனிந்தது. வியாபார நோக்குடன் இந்தியா சென்றிருந்த வைரமுத்துச் செட்டியார் முத்தியானந்தரைச் சந்திக்கின்றார். மட்டற்ற அன்பினால் கட்டுண்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருகின்றார். கப்பலில் வந்த இருவரும் ஊர்காவற்துறைமுகத்தில் வந்து இறங்கிய பின்னர் வைரமுத்துச் செட்டியார் என்ன ஆனார் என்பது தெளிவில்லை. முத்தியானந்தர் யாழ்ப்பாணம் நோக்கி

நடந்து வந்துகொண்டிருந்த வேளை களைப்புற்று புண்ணிய ஆத்மா, மண்டைதீவு மண் பெற்ற புண்ணியத்தால் சிலகாலம் அங்கே தங்கியிருந்து அவ்வூர் மக்களுக்கு அருள்மழை பொழிந்தார். நீதிபதியாக அதிகாரிகளின் உடையில் வாழ்ந்த அவர் பரதேசிக் கோலம் கொண்டார். பின்நாட்களில் இவரது சீடர்களில் ஒருவரான குழந்தைவேற் சுவாமிகள்,

பெரிய கடைநாதன் பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச்சீலை கருந்தோலன சால்வை
துரியாதீதப் பொட்டு துலங்க நடைமெட்டுச்
சரியா யறிந்தேத்தித் தழைத்தாட் படுவீரே.

என இவரது கோல எழிலைப் பாடியுள்ளார். மண்டைதீவு மக்கள் அன்புடன் தந்த பனங்கள்ளை அருந்தினார், புலாலுணவுகளை உண்டார். அன்புடன் தருபவர்கள் மனம் வருந்தக்கூடாது என்பதற்காக பிரியமற்ற உணவுவகைகளை உண்பவர்களை இன்றும் காணலாம். சாதி, மத, இன, குலம் கடந்து நின்று எல்லா மக்களையும் சமமாக மதித்துச் சேவை செய்து அருள்மாரி பொழிந்தமையால் இவருக்கு எதிராகவும் பலர் செயற்பட்டனர். தன்னை நாடிவந்த அன்புள்ளம் கொண்ட வறிய மக்களின் பசி, நோய் போக்கி அறிவு, வளம், ஞானம் வழங்கினார். அவ்வேளைகளில் இரும்பைப் பொன்னாக்கி ரசவாதம் புரிந்தார் எனவும் அறிய முடிகின்றது. சித்தர்கள் கடவுளின் அருளாளர்கள். சித்து வல்லமை பெற்றவர்கள். மக்கள் நன்மை கருதி இவ்வாறான சித்துகள் செய்த பல சித்தர்களின் வரலாறு உள்ளது. செங்கல்லைப் பொன்னாக்கியது, படிக்காசு பெற்றது, திருக்கதவு மூட - திறக்கச் செய்தமை, ஆற்றில் விட்ட ஏடு நீரோடு திசைக்கு எதிராக ஓடச்செய்தமை, ஊமைப்பெண்ணைப் பேசவைத்தமை எல்லாம் முடியும் என இருந்தால் இவர் இரும்பைப் பொன்னாக்கியும் இருக்க முடியும். இவரது சித்து சக்தி அறிந்து பெரும் பொருளாளர்கள் மேலும் பொருளீட்ட எண்ணி இவரிடம் வர,

நோக்கமறிந்து மறுத்துவிடவே, அவர்களின் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. பலவகையான கஷ்டங்களை பணக்காரர்கள் வழங்கினாலும் அவற்றை எல்லாம் பொறுத்துக்கொண்டு மக்கள் சேவையில் மகிழ்ந்திருந்தார். தொடர்ச்சியான தொல்லைகளால் மனம் வருந்தி அவர் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். தங்கிட வசதிகளற்ற நிலையில் பெரியகடைச் சந்தைக்கடை வாயிலில் படுத்துறங்கினார். இதனால் கடையிற் சுவாமிகள் என அழைக்கப்பெற்றார். கடையிற்சுவாமிகள் என்பதே முதன்மைச்சுவாமி என்பதைச் சுட்டி நிற்பதையும் அவதானிக்கலாம். (கடைசி இல்லை முதல் என்பதாமே)

பஞ்சபூதங்களின் செயற்பாடுகளை நன்குணர்ந்திருந்தாலும் பரமாத்மா ஆகிய இறைவன் வெளியில் எங்கும் இல்லை. எமக்குள்ளேதான் உறைந்துள்ளார் எனத் தெளிந்துகொண்டாலும் இறைதொண்டர் ஒருவர் சித்தராகிவிடுவார். அவரது செயற்பாடுகள் யாவும் உலகியலைக் கடந்து இருக்கும். அவ்வாறான செயற்பாடுகள் இவர்களைப் பைத்தியக்காரர்கள் என எண்ணத் தோற்றுவிக்கும். பின்நாளில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளை மனநோயாளி எனக் கருதி மனநலக் காப்பகம் அனுப்புவதற்காக சிறைக்கூடத்தில் அடைத்து வைத்திருந்தனர். மறுநாள் இவர் அங்கு காணப்படவில்லை. பின்னர் வண்ணார்பண்ணையில் வசித்து வந்ததாயும் அறிய முடிகின்றது. நீராவியடி வீடொன்றில் தங்கி வாழ்ந்ததாகவும், வெளியில் எங்கும் திரிவதில்லை எனவும் அறியக்கூடியதாக உள்ளது. இதை உறுதிப்படுத்துமாப் போல இவர் தங்கிவாழ்ந்த வீடு இருந்த தெரு இன்னமும் கடையிற்சுவாமிகள் தெரு என அழைக்கப்படுகின்றது.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனத் தெளிந்து மக்கள் நலன் விரும்பிச் சேவைகள் செய்து வருபவர்கள் இவ்வுலகத்தோரால் பேயன், விசரன், பித்தன் என அழைக்கப் படுவதுடன் அவர்களது செயற்பாடுகளும் பல வகைகளில் விமர்சிக்கப்பட்டும் வருகின்றன. மக்கள் நலன் விரும்பிகளின்

செயற்பாடுகள் கூர்மையடைய, கூர்மையடைய ஒடுங்க ஒடுங்க அவர்களின் எண்ண அலைகள் வலுவடைய வலுவடைய அபூர்வ அதிர்வலைகளுக்குள் மனித வாழ்வு சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் அமைவது இயல்பே. நடந்து முடிந்த கொடிய யுத்தம் ஏற்படுத்திய அழிவுகள் யாவரும் அறிந்ததே. அவ்வேளைகளிலும்கூட இவர்கள் போல் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற சித்தர்களின் நேர் எண்ண அதிர்வலைகள் இங்கு இன்னமும் வியாபித்து இருக்கின்றமையால் யாழ்ப்பாணப் பகுதியை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட யுத்தத்தால் பேரழிவுகள் ஏற்படாது தடுக்கப்பட்டது நிதர்சனம்.

கடையிற் சுவாமிகளை இலங்கை அழைத்துவந்த வைரமுத்துச் செட்டியார் குருவுக்குத் தன்னை ஒப்படைத்தவாறு, தனது சொத்துக்கள் யாவையும் தர்ம கைங்கரியங்களுக்கு வழங்கினார். அவரால் வழங்கப் பட்டு இன்றுவரை நல்லூர் திருவிழாக்காலங்களில் அன்னதானம் வழங்கப்படும் நிலையங்களே அன்னசத்திரமாகும். இங்கே இவரது இன்னொரு சிஷ்யரான சின்னச்சாமி அவர்களின் சமாதியும் உண்டு. அன்னசத்திர வீதி என ஒரு வீதியும் அமைந்து மக்கள் போக்குவரத்துகளை இலகுவாக்கி வருகின்றது.

சுவாமிகள் மது, மாமிசம் உண்பதால் அதனைத் தாங்களும் உண்பது தவறல்ல என வாதிட்டு வந்தவர்கள் இவ்வகையான சுவையான உணவுகளுக்காக இவர் உணவு உண்ணச் செல்லும் வேளைகளில் சுவாமியுடன் இணைந்து செல்வது வழமை. இப் பிழையான கருத்தை நீக்கவேண்டும் என்று எண்ணியிருந்த சுவாமிகள் வழியிலே மெழுகை உருக்கிக்கொண்டிருந்த ஒருவரிடம் கொதி மெழுகை வாங்கி அருந்தினார். நீங்களும் வாங்கிக் குடியுங்கள் என்று கூறவே உணவுக்காகக் கூடச் சென்றவர்கள் ஓடி விட்டார்கள்.

இக்காலத்தில் நல்லூரில் செல்லப்பன் என்னும் இறைபக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சுவாமிகள் மது அருந்துவது அறிந்து இவருக்குக் கொடுக்கவென ஒரு போத்தல் சாராயம் வாங்கி வைத்திருந்தார். சுவாமிகளைக் கண்டதும் அதை எடுக்கப் போனார். போத்தல் வெறுமையாக இருந்தது. அது எப்போதோ முடிந்துவிட்டது என்று கூறிய சுவாமிகள் அருகில் இருந்த கடலை விற்ற பெண்ணிடம் ஒரு ரூபா பெற்று வெற்றிலையில் மடித்து செல்லப்பா தலையில் வைத்துக் குடையால் தட்டி ஓடடா என்று அருளினார். அன்றுதான் செல்லப்பா சுவாமிகள் ஞானம் பெற்றார்.

சத்திரத்துச் சந்தியில் பொன்னம்மா மில் அமைந்திருந்தது யாவரும் அறிவர். பொன்னம்மா மில் ஒரு சத்திரமாகவே இயங்கியது. எவர் எந்தநேரம் பசித்து வந்தாலும், உணவருந்திச் செல்லக்கூடிய வாறு அமைந்திருந்தது. ஒருநாள் சுவாமிகள் கூடவே பரிவாரங்களும் உணவுக்கு வந்தவேளை வறுமையில் மிகவும் மனமுடைந்திருந்த பொன்னம்மா தாலியை விற்று உணவு பரிமாறினார். அதை அறிந்த சுவாமிகள் பழைய நாகபடம் என்னும் இரும்பைப் பொன்னாக்கி வழங்கி அவர்களது வறுமையைப் போக்கினார். பின்னர் பொன்னம்மா மில் சிறப்பாக இயங்கியது. கால ஓட்டத்தோடு அழிந்து போனாலும் சத்திரத்துச் சந்தி என்ற பெயரும் இடமும் என்றும் இருக்கும்.

கடையிற்சுவாமியுடன் நன்னியர்சுவாமி, சின்னச்சாமி என இருவர் எந்நேரமும் சேர்ந்தே இருப்பார்கள். ஒரு தடவை நன்னியரின் மகன் ஒருவர் யாத்திரை புறப்பட்டார். சுவாமிகள் விரும்பவில்லை. இருப்பினும் யாத்திரை சென்றவர் அதிக நாட்கள் ஆகியும் வீடு திரும்பவில்லை. நன்னியர் வீட்டு முற்றத்தில் சுள்ளிகள் அடுக்கி பிணம் எரிப்பது போல கொள்ளிக்குடம் உடைத்து சிதை மூட்டினார் சுவாமி. மக்கள் என்ன கேடு நேரப்போகிறதோ என அஞ்சினர். யாத்திரை போன மகன் சிதம்பரத்தில் இறந்த செய்தி வந்தது. இவ்வாறு தீர்க்க தரிசனத்தால் சித்தர்கள் கூறுவது நடைபெற்றே தீரும். அவ்வாறே

ஒரு தடவை நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று கடையிற் சுவாமிகளும் தேரடியில் நிற்கின்றார். காலை 8 மணி. கடும் வெயில். உவர் இண்டைக்குத் தோய்ந்துகொண்டுதான் திரும்புவார் என்று செல்லப்பா சுவாமிகள் கூறினார். தேர் மேற்கு வீதியால் திரும்பவில்லை. மேகம் திரண்டு வந்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. தேர் நனைந்தவாறு இருப்பிடம் வந்தது. இவ்வாறு மக்கள் நலனுக்காக நல்லவர்கள் எண்ணும் எண்ணங்களின் அதிர்வலைகள் பேரண்டத்தில் வியாபித் திருக்கும் அதிர்வலைகளுடன் தொடர்புறுவதால் நல்லவை நிகழ்ந்தபடியே உலகம் சுழன்றுகொண்டிருக்கின்றது. எப்போது எப்போது எனது தேவைகள் உணரப்படுகிறதோ அப்போதப் போதெல்லாம் நான் தோன்றிக்கொண்டே இருப்பேன் என கீதை கூறும் வேதம் போல உயர் சிந்தனை கொண்ட புனிதர்கள் மனிதராகப் பிறந்து புனிதராக வளர்ந்து ஞானிகள் ரிஷிகளாகி நன்றாய் மக்களை வாழவைத்த வண்ணமே உள்ளார்கள்.

நல்லன எண்ணுவோம். நல்லனவே நடக்கும்.

எழடா தம்பி எழடா

நம்பிக்கையுடன் எழடா தம்பி எழு
நாளைய உலகம் உன்கையில்
தும்பிக்கையானைத் தொழு தெழவே
தூர விலகும் துன்பம் துயரம்

வறுமை தடையென்பது அறிவீனம்
முயன்றால் வாழ்வு நிதர்சனம்
இறையீந்த நேரம் உன்வசம்
உணர்ந்தால் உலகம் கைவசம்

தோல்விகள் கண்டு துவளாதீர்
தொடர்ந்து முயன்று வென்றிடுவீர்
ஆல்போலென்றும் விழுதெறிவீர்
அனைவரும் வாழ இடமளிப்பீர்

புதுப்புதுக் கலைகள் பலகற்பீர்
புதுமைகள் உலகில் ஆக்கிடுவீர்
வாழ்விலுயர வழி காண்பீர்
வருந்தி முயன்று வென்றிடுவீர்

மரங்கள் தேர்ந்து நாட்டிடுவீர்
பட்டி, பண்ணை காத்திடுவீர்
பாடுபட்டு பணம் சேர்த்தே
பலரும் வாழ வழிசமைப்பீர்

மண்ணில் மாரி பொழிந்திடவே
மண்ணீர் காத்து மகிழ்ந்திடுவீர்
மதகு, குளத்தின் தூரகற்றி
துளித்துளி நீரை சேர்த்திடுவீர்

தேக்கிய நீரில் பயிர்வளர்த்து
தெங்கு, பனையென வளம்பெற்று
ஓங்கி வளர்ந்த தருக்களினால்
பாங்குற மழைவர வாழ்ந்திடுவோம்

வாரீர் வாரீர் தம்பிகளா
சிந்தனை முடவர் தமையறிந்து
சீலராய் மாற்ற முனைந்திடுவோம்
வந்தனை செய்யுமுனை வரும் சமூகம்
ஆதலால் .....

எழடா தம்பி எழு

20 - 2 - 2016

மயூரதன்

யாழ்ப்பாணம்.

தவறுவது இயல்பு. திருந்தப் பார்ப்போம். துன்பங்கள் அரிக்கும் வரை கிடந்து உழலமாட்டோம். விழுந்தால் வீறுடன் எழுவோம். எங்கு தவறு நடந்தது என யோசிப்போம். தெளிவு கொள்வோம். தொடர்ந்து முன்னேறுவோம். இல்லாவிட்டால் உலகம் எம்மை விட்டு வேகமாகச் சென்றுவிடும்.

அடக்கம் அறிவுடமை

மயூரன்
யாழ்ப்பாணம்.

அன்பான பிள்ளைகளே!

நலமாக இருக்கிறீர்களா? நன்றாகப் படிக்கின்றீர்களா? அன்னை தந்தையை வணங்கி எழுகின்றீர்களா? புதுவருடம் பிறந்திருக்கிறது. புது வகுப்பு, புதுப் பாடசாலை, புதிய புதிய நண்பர்கள். பழையன கழியப் புதியன எல்லாம் உங்கள் வாழ்விலும் சேரட்டும். புதியன அறியும் வேளைகளில் பழமையையும் தொன்மையையும் அவற்றில் பொதிந்து உள்ள உண்மைகளையும் நுண்மைகளையும் அறிந்து ஒழுகுங்கள். நீங்கள் பல உண்மைகள் கூறும் கதைகளைப், பாட்டி கூறியும் பாடப் புத்தகங்களில் கற்றும் நூலகங்களில் தேடி வாசித்தறிந்தும் இருப்பீர்கள். இதுவும் உண்மை பேசுவதால் உயர்ந்த வாழ்வு பெற்ற ஏழைச் சிறுவனின் கதைதான் வாசித்துப் பாருங்கள்.

இந்திரலோகத்துத் துண்டொன்று, நாவற்குழி பிரதேசத்து தென்கிழக்கு மூலையில் வீழ்ந்ததுவோ என ஆச்சரியப்படுமளவிற்கு அழகு, வளம், சிறப்புப் பொருந்திய கிராமம்தான் வேலன்பராய். நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் தன் குடும்ப உறவுகள் அனைத்தையும் இழந்து ஆதரவற்று பல வீடுகளில் தங்கி அடிமை போல நடாத்தப்பட்டு, வெறுப்புடன் விதி வழியே போவோம் என வரும் வழியில் மயங்கி வீழ்ந்து தெருவில் கிடந்த சிறுவன்தான் ஜெயதீபன். பெயரில் "ஜெயம்" இருந்ததே ஒழிய அவன் வாழ்வில் கண்ட தெல்லாம் தோல்வியும் துயரங்களும்தான். வெறுப்பும் விரக்தியும் தான்.

வீதியில் கிடந்த ஜெயதீபனை நல்மனங் கொண்டு நல்லதம்பி என்பவர் எடுத்து வந்து பசிபோக்கிப் பிள்ளைபோல வளர்த்து வந்தார். தனது பிள்ளைகளுக்குச் சமனாக இவனை வளர்த்த போதும் கூட இவனது அடிமனதில் ஒரு தனிமையும் வெறுப்புணர்வும் இருந்து கொண்டே இருந்தது. படிக்கும் நேரம் தவிர மிகுதி நேரம் எல்லாம் நல்லதம்பியின் தோட்டத்திலும் வீட்டிலும் எல்லா வேலைகளையும் செய்து வருவான். நல்லதம்பியும் மனமகிழ்ந்து பள்ளிப் பாடங்களுடன்

அறநெறிக் கதைகளையும் கூறி வளர்த்தார். சத்தியம் காக்க வேண்டும் உண்மை பேச வேண்டும். அன்பாயிருக்க வேண்டும் போன்ற உயரிய பண்புகள் இவனிடம் வளர்ந்து வந்தன.

வேலன்பராய் கிராமத்தின் தெற்குப் பகுதியில் கோவிலாக் கண்டிக் கடல் உள்ளது. சுவையான மீனினமும் கடல் வாழ் உயிரினங்களும் நிறைந்து எப்போதும் பூரிப்புடன் இருக்கும் கர்ப் பிணிப் பெண் போலக் காணப்பட்ட கடலின் மறுகரையில் அரியாலைக் கிராமம் அமைந்துள்ளது. வேலன்பராயில் அமைந்துள்ள சக்திமிகு கண்ணகை அம்மன் கோவிலில் சென்று வழிபட்டு விட்டு கடற்கரை வழியே நடந்து சென்ற ஜெயதீபன் கடலில் ஒரு பொருள் மிதந்து வருவதைக் கண்டான். அருகில் சென்று பார்த்த போது அது ஒரு தேங்காய் என அறிந்து, விளையாட்டாக அதை உடைத்துச் சாப்பிட்டு விட்டான். அப்போதுதான் இது யாருடையதோ, நான் எடுத்துச் தின்றுவிட்டேனே என்ற எண்ணம் தோன்றியது. வாழ்ந்த வாழ்வு முறைக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டதே என வருந்தினான்.

வேலன்பராய்க் கிராமத்தில் அமைந்திருந்த காட்டுத் தோட்டம் என அழைக்கப்பட்ட தென்னந்தோப்பு முற்று முழுதாக அழிக்கப்பட்டு அங்கிருந்து மண் அகழ்வு திருட்டுத்தனமாக மேற்கொள்ளப்பட்டு கடல் நீர் குடி மனைக்குள் புகுந்து குடிநீர் உப்பு நீராகி வருகின்றதே. அப்படி இருக்க இந்தத் தேங்காய் எங்கிருந்து வந்தது என எண்ணியபடி கடற்கரை வழியே சென்றான். கடலில் வந்தது தான் களவு எடுக்கவும் இல்லை நான் யாருடைய பொருளை, தானாக வந்தவேளை எடுத்தாலும் அது தவறுதானே, களவுதானே என எண்ணியபடி கடற்கரை வழியே நடந்தான். கோவிலாக்கண்டிக் கடலில் மறுபக்கக் கரையில் தென்னம்சோலை செழித்து வளர்ந்திருப்பதைக் கண்டான். அங்கிருந்துதான் இந்தத் தேங்காய் வந்திருக்க வேண்டும் எனத் தெரிந்து கொண்டான். எவ்வாறாயினும் அவரது தேங்காயை எடுத்துச் சாப்பிட்டதற்கு மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று துணிந்தான். கடலின் மறுகரைக்குப் போவதற்குப் படகு வசதிகள் இல்லை. கோவிலாக்கண்டிக்கடல் சில இடங்களில் ஆழமாகவும் சில இடங்களில் திட்டிகளாகவும் இருக்கும் என்பதை

முன்னரே அறிந்து வைத்திருந்த ஜெயதீபன் கடலில் இறங்கி நடந்தான். எதிர்பாராமல் ஒரு குழியில் விழுந்து விட்டான். கிட்டத்தட்ட மூழ்கும் நிலைக்கு வந்த தீபன் முழுச் சக்தியையும் பிரயோகித்து நீந்தி வெளியில் வந்துவிட்டான். உடைகள் நனைந்து, சேறு அப்பி பார்க்க அசிங்கமாக இருந்தான்.

கடல் நீரில் எல்லாவற்றையும் தேய்த்துக் கழுவிக் கொண்டு, கவனமாக நடந்து மறுகரை அடைந்து, தோட்டத்தின் வாசலை அடைந்து விட்டான். அங்கு நின்ற காவல்காரனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, முதலாளியைச் சந்திக்கச் சென்றான். தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ள அகலமான பாதையில் நடந்து செல்கையில், தான் பெற்றார் சகோதரங்களுடன் செழிப்பாக வாழ்ந்த விசுவமடுக் கிராமத்தின் அகன்ற செம்மண் வீதிகள் ஞாபகத்துக்கு வரவே, அம்மா அப்பா சகோதரச் சொந்தங்களின் நினைவு வந்தது. துயரமும் வந்தது. இளந்தென்றல் காற்றில் தென் ஓலைகளின் சலசலப்பும், குளிர்ச்சியும் சுகமாக இருக்கவே மன அமைதியடைந்து முதலாளி இருக்கும் சிறிய வீட்டை அடைந்தான்.

நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? யாரைப் பார்க்க வேண்டும் என கேள்விகளை அடுக்கியவாறு முதலாளி வந்தார். நடந்த சம்பவங்களையெல்லாம் கூறி மன்னிப்புக் கேட்டுப் போக வந்ததாகக் கூறினான். சிறுவனின் உளப்பாங்கையும் பண்பையும் அறிந்து உள் மகிழ்ந்த தோட்டச் சொந்தக்காரன், நீ தவறு செய்துள்ளாய். மன்னிப்பெல்லாம் வழங்க முடியாது. தண்டனையாகப் பத்து வருடங்கள் எனது தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும். உணவு, தங்குமிடம் போன்ற அனைத்து வசதிகளும் தருவேன். தங்கி வேலை செய்கிறாயா என்று கேட்டார். அவனும் வெளியில் அலைந்து திரிவதைவிட ஓரிடத்தில் தங்கி வாழ்வதுடன் விவசாயக் கல்வியையும் கற்றுவிட முடியும் என எண்ணி உடன்பட்டான்.

பத்துவருட காலமும், இவர் தான் பெற்று வைத்திருந்த ஆன்மீக அறிவு, நற்பழக்க வழக்கங்களைப் பயிற்றுவித்து ஒரு மனிதனாக வளர்த்தெடுத்துவிட்டார். இக்காலப் பகுதியில் விளை பொருட்கள் ஏற்றிச் செல்ல வரும் ஆட்கள், தோட்டத்தில் வேலை

செய்யும் ஆட்களை தவிர இவரது உறவுகள் என ஒருவரையும் இவன் காணவில்லை. தன்னைப்போலவே இவரும் தனிமனிதனாகவே வாழ்கிறார் என எண்ணிக் கொண்டான். இவர் சம்மதித்தால் இவருக்கு உதவியாக இங்கே தங்கிவிடவும் எண்ணினான்.

அன்றொரு நாள் விளை பொருட்களை ஏற்றிக் கொண்டு திருநெல்வேலிச் சந்தைக்குச் சென்ற ஜெயதீபன் நாவற்குழி நன்னீர் ஏரிக்குள், மரங்கள் வளர்க்கப்படுவதைக் கண்டு வியந்தான். எதிலும் நுண்மையான அறிவு கொண்ட அவனுக்கு, சீமெந்துக் குளாய் களுக்குள் மண் நிரப்பி மரம் வளர்ப்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட மரங்கன்றுகள் மருத மரங்களாகவிருப்பதையும் அவதானித்தான். இளைய மருது பெரிய மருது என்ற பண்டைய அரசர்கள் ஞாபகத்துக்கு வந்தனர். கூடவே ஆங்கில அதிகாரிகள் வளர்ந்து செளிப்புற்றிருந்த மருத மரங்களை வெட்டி அகற்றிவிட முயன்ற போது அரச விசுவாசம்மிக்க மக்கள் ஒன்று கூடித்தடுத்து நிறுத்தியமையும் வாசித்தது நினைவுக்கு வந்தது. அவ்வாறு இந்த மரங்களும் சரித்திரம் வரையும் என்றும் பறவைகளின் சரணாலயமாக இந்தப் பகுதி மாறவிருப்பதும் மனக் கண்முன்னே தோன்றியது. இயற்கையை நேசிக்க அல்லது போற்றி வளர்த்து வாழ வழி திறந்துள்ளமையை கண்டு மிகவும் மனம்மகிழ்ந்தான். மரம் வளர்ப்பவர்கள் எவராயிருந்தாலும் அவர்கள் உன்னதமானவர்கள் என எண்ணினான். இவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் கருதினான்.

காலம் வேகமாகக் கரைந்தோடியது. கட்டிளம் பருவத்துக்கு இவன் வளர்ந்துவிட்டான். ஆளுடன் அறிவும் வளர்ந்து தீர்க்கமான முடிவெடுக்கும் ஆற்றலும், சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணக்கூடியவனாகவும், வாசித்ததால் சிறந்த பரந்த அறிவு பெற்ற முழு மனிதனாக இவன் பரிணமித்தான். பத்து வருடங்கள் முடிந்து விட்டது. எனது தண்டனைக்காலம் முடிந்து விட்டது ஐயா என்று இவன் அவர்முன்னால் நின்றான். சூரிய ஒளிபட்டு மினுமினுப்பான தேகக்கட்டுடலுடன் தீர்க்கமான பார்வையும், கம்பீரமும் கொண்டு

வளர்ந்து விட்ட இவனைக் கண்டு மகிழ்ந்து, இல்லை இல்லை உனது தண்டனை இன்னமும் முடியவில்லை. மற்றவர் பொருள் எடுத்த உனக்கு இன்னுமொரு பத்து வருடங்கள் இங்கு தங்கிச் செல்ல விருப்பம் உள்ளதா? அப்படியாயின் மேலும் பத்து வருடங்கள் இங்கு தங்கி எனக்கு உதவிவிட்டு நீ போகலாம் என்றார். இவனது விருப்பமும் அதுதானே. அதைக் காட்டிக் கொள்ளாமல் சொல்லுங்கள் ஐயா செய்கின்றேன் என்றான்.

எனக்கு ஒரு மகள் அவலட்சணங்களுடன் பிறந்து வளர்ந் துள்ளாள். கண்பார்வை இல்லை. காதும் கேட்காது. வாயும் பேசமாட்டாள். நீ அவளைத் திருமணம் செய்ய வேண்டும். அவளுக்காகவே நான் இந்தத் தோட்டத்தை வைத்திருக்கிறேன். அவளை நீ விரும்பி மணந்தால் இவை அனைத்தும் உனக்கே தருவேன் என்றார்.

ஐயா நானோர் அனாதை. இவ்வளவு காலமும் எனக்கு ஆதரவு காட்டி கல்விபுகட்டி, என்னை ஒரு முழு மனிதனாக வளர்த்துள்ளீர்கள். உங்கள் விருப்பம் அதுவானால் அவரை நான் திருமணம் செய்வேன். சொத்துக்களுக்காக அல்ல நன்றிக் கடனாக என்றான்.

இவன் மனிதன் அல்ல. புனிதன் என விளங்கிக் கொண்ட சுந்தரனார், தனது மகளுக்கு மிகவும் பொருத்தமான மணாளன் கிடைத்துவிட்ட மகிழ்வில் இன்றுமாலை நீ அவளைச் சந்திப்பாய் உனக்கு விருப்பம் என்றால் செய்து கொள்ளலாம் என்றார்.

அவசியமில்லை ஐயா, நீங்கள் கூறினால் அதில் நியாயம் இருக்கும். சரியான காரணமும் இருக்கும். நீங்கள் திருமண ஏற்பாடுகளைப் பாருங்கள் என்றான்.

திருமணம் எளிய முறையில் கடவுள் சந்நிதியில் நடந்தது. ஐயர் இல்லை. மந்திரங்கள் மேளதாளம் ஆரவாரம் எதுவுமின்றி

ஊரில் மூத்தவர் தாலி எடுத்துக் கொடுக்க அமைதியாக நடைபெற்றது. மனைவியின் முகத்திரையை விலக்கிப் பார்த்த போது அவன் ஒருகணம் தடுமாறி விட்டான். பிரகாசமான கண்களுடன், அன்று மலர்ந்த தாமரை மலர்போல முகப் பொலிவுடன் அவள் விளங்கினாள். முத்துகள் சிந்தியது போல இனிமையாகப் பேசினாள். இவனோ வியப்பின் விளிம்புக்குச் சென்றுவிட்டான்.

மறுநாள் காலை ஐயா இவ்வாறான அழகிய மகளை நீங்கள் அவலட்சணமென்றும் குருடு செவிடு ஊமையென்றும் கூறினீர்களே எவ்வாறு உங்களால் பொய் கூற முடிந்தது என்று கேட்டான்.

புன்முறுவலுடன் தன் அழகிய மருமகனை அரவணைத்து தம்பி, தேவையற்ற பொருட்கள் எதையும் பார்ப்பதில்லை. அதனால் அவள் குருடி. பயனற்ற வார்த்தைகள் வம்புப் பேச்சுக்கள் எவையும் அவள் பேசுவதில்லை. ஆதலால் ஊமை. அவசியம் எழாவிட்டால், எதையும் கேட்பதில்லை. ஆதலால் அவள் செவிடு என்றேன். இப்ப கூறு நான் பொய் கூறினேனா என்று கேட்டார்.

உனது அறிவு எதையும் கிரகிக்கும் ஆற்றல், அவற்றைச் செயற்படுத்துவதிலுள்ள ஆர்வமும் திறமையும், நற்பண்புகளையும் கண்டு என் மகளை உனக்குத் தர விரும்பினேன். நீ எவ்வாறு எடுத்துக் கொள்வாயோ என அஞ்சித்தான் இவ்வாறான ஒரு தேர்வுக்குள்ளாக்கினேன். உன்னைப்போல ஒரு அழகான வாலிபன் அவலட்சணமான பெண்ணை மணக்கச் சம்மதிக்கவே மாட்டான். நீயோ நன்றி விசுவாசத்திற்காகச் சம்மதித்தாய். நீ தான் என் மகளுக்கு ஏற்றவன் எனது சொத்துகள் அனைத்தையும் உங்களுக்கே எழுதி வைத்துள்ளேன். சந்தோஷமாக வாழுங்கள் என வாழ்த்தினார்.

மாணவ மணிகளே இக்கதை மூலம் நீங்கள் நிறையக் கற்றுக் கொள்வீர்கள். உங்கள் வாழ்வு சிறக்க அவை உதவும். ஆதலால் வாசியுங்கள். நிறைய யோசியுங்கள். தெளிவு பெறுங்கள். தேர்ந் தெடுங்கள். எல்லாம் உங்களுக்கு நலமாக அமைய வாழ்த்து கின்றேன்.

இணைந்து வாழ்வோம்

சி. பிரியங்கா
யா/ இந்துமகளிர் கல்லூரி.

இப்பூமியில் மனிதர்களாக ஜனனித்த நாம் ஆறு அறிவைக் கொண்டுள்ளோம். ஐந்து அறிவு படைத்த மிருகங்களை விலத்தி அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் உயர்ந்தவர்களாகவே காணப்படுகின்றோம். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீக்கிப்பிறத்தல்" என்றார் ஔவைப்பிராட்டி. அந்தவகையில் மனிதராகப் பிறந்துள்ளோம். எவ்வித குறைகளும் (கூன், குருடு, செவிடு) இன்றிப் பிறந்த நாம் பிறருக்கு உதவுதல், உண்மை பேசுதல் போன்ற விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்பதோடு நின்றுவிடாது சமூகத்துடனும் சகபாடிகளுடனும் இணைந்து வாழக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இணைந்து வாழல் என்பது பிறருடன் ஒன்றிணைந்து வாழுதல் மட்டுமல்ல. அவர்களுக்கு வரும் பிரச்சினைகளையும் தீர்ப்பவர்களாகக் காணப்படல் வேண்டும். இணைதல் என்பதன் பொருளாக, சேர்தல், ஒன்றிணைதல் போன்றவற்றையும் குறிப்பிட்டுக்கொள்ளலாம். உதாரண மாகச் சமூகத்தில் பிரச்சினை ஏற்படுகின்றது. அதாவது தற்போது பாலியல் துஷ்பிரயோகங்கள் பல இடங்களிலும் பலவிதமாக நடந்து வருகின்றன. சிறுபிள்ளைகள் கூடப் பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு நமது சமூகத்தில் ஒரு பிரச்சினை ஏற்படும் போது ஒரு பிள்ளைக்கு அவ்வாறான நிலைமை எனின் அப்பிள்ளைக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக நம் சமூகத்திலுள்ள அனைவரும் ஒன்றித்து ஒருமித்து இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இது சமூகத்துடன் இணைந்து வாழல் எனப்படும்.

வீட்டில் எம் சகோதரர்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்படும் எனில், அதனை நாம் தீர்த்து, எம்மால் இயலக்கூடிய வரை உதவிசெய்தல் வேண்டும். அது சகோதர ஒன்றிப்பு. இவ்வாறு பிறருடன் ஒன்றித்து

அவர்களுக்குத் தேவையானவற்றை ஆற்றுவது மனிதர்களாகப் பிறந்த எமது தலையாய கடமை.

எமது சகோதரங்களுடன் மட்டுமன்றி பாடசாலையிலும் நாம் இணைந்து வாழுதல் வேண்டும். இணைந்து வாழ்வதால் நாம் பற்பல நன்மைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. அவையாவன,

- ஒற்றுமையை வளர்க்கலாம்.
- போட்டி, பொறாமைத்தன்மை குறையும்.
- நட்பு, சகிப்புத்தன்மை போன்ற நல்ல பண்புகள் வளரும்.
- பிறருடன் சண்டையிடவேண்டிய தேவைப்பாடுகள் காணப்படாது.

இவை இணைந்து வாழ்வதால் ஏற்படக்கூடிய நன்மைகளில் சிலவாகும். பலர் இணைந்து வாழ்வதன் மூலம் எந்தக் கெட்ட உள்ளம் படைத்தவரையும் நல்லவர்களாக மாற்றலாம். அவரைத் திருத்த முயற்சிக்கலாம்.

- நம் சமூகத்தில் ஒருவர் மதுபோதைக்கு ஆளாகிக் காணப்படுவாராயின் பலர் ஒன்றிணைவதன் மூலம் அவரைத் திருத்திக் கொள்ளலாம்.
- எமது சமூகத்தில் ஒரு நிகழ்வு நடைபெறுகிறது எனின் பலர் இணைந்துகொள்வதன் மூலம் சிரமமின்றி அந்நிகழ்வை நடாத்தி முடிக்கலாம். இந்தவகையில் இணைந்து வாழ்வதன் மூலம் எதையும் சாதிக்கலாம் என்பது தெரியவருகின்றது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பது பழமொழி. அதாவது சிறுவயதில் பழகுகின்ற பழக்கங்களை விடுத்து பெரிய வயதில் வேறுபழக்கங்களைப் பழக முடியாது. அவ்வாறே சிறுவயதில் ஒரு வேலை செய்யாத பிள்ளை இளம்பராயம் நெருங்கும் போதும் அவ்வேலையைச் செய்யாது, அந்தவகையில் நாம் சிறுவயதிலேயே இணைந்துவாழக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். நாம் கற்பவை பாடம் சம்பந்தமான விடயங்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. வேறு விடயங்களையும் கற்றல்வேண்டும். "இணைந்து வாழ்தல்" ஒரு விழுமியப்

பண்பாக இருத்தல் மட்டுமன்றி, ஒரு கற்றலாகவும் காணப்படுகின்றது. "அன்னப்பறவை பாலையும் நீரையும் கலந்து வைக்கும்போது பாலைப் பிரித்துப் பருகும்." அதுபோல நாமும் தீயவற்றை விலக்கி நல்லவற்றைக் கற்கவேண்டும். அந்தவகையில் இணைந்து வாழ்தலும் கற்றல் வகைகளில் ஒன்றாகக் கருதி நாம் சமூகத்துடனும் பாடசாலையுடனும் பிறருடனும் இணைந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பண்டைய எம் தமிழர் சமூகத்தில் கூட்டுக்குடும்ப அமைப்புக் காணப்பட்டபோது ஒருவருக்கொருவர் உதவியாக இருந்ததுடன் பிரச்சினைகளும் எழவில்லை. இன்றைய தனித்த குடும்ப வாழ்வு போட்டி பொறாமைப் பிரச்சினைகளையே ஏற்படுத்தியுள்ளது.

உலகிலுள்ள அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் இணைந்தே வாழவேண்டியுள்ளது. பெற்றோரில் பிள்ளைகளும், பிள்ளைகளில் பெற்றோரும் ஆசிரியர்களில் மாணவரும் மாணவரில் ஆசிரியர்களும், முதலாளிகள் தொழிலாளர்களிலும், தொழிலாளர் முதலாளிகளிலும், மக்களில் அரசும், அரசில் மக்களும் என நீண்டு செல்லும்.

பஞ்சபூதங்கள் இணைந்து இயங்குவதனால்தானே உலகு சீராக இயங்குகின்றது. இதில் மாறுபாடு ஏற்படுகின்ற போது இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இதனை உற்று அவதானித்தால் நிச்சயம் நாம் இணைந்து வாழ்வோம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதனை மனதிலிருத்தி என்றுமே இணைந்து வாழ்வோமாக.

உழுதுண்டு வாழ்வோம்

கோ. தாராங்கினி
யா/ நாவற்குழி மகா வித்தி.

"உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் மற்றவர் தொழுதுண்டே வாழ்வர்" என்ற திருக்குறள் வாக்கிற்கிணங்க உழுது உண்டு வாழ்பவர்களே சிறப்பான வாழ்க்கையை வாழமுடியும். மற்றவர் களுடைய வாழ்வுக்கு வழிகாட்டியாக இருப்பவர்களும் இவர்களே ஆவார்.

எம்முடைய வாழ்க்கையில் உழவுத் தொழில் என்பது மிகமிக இன்றியமையாததாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் எந்த உயர்ந்த தொழிலைச் செய்பவனுக்கும் இத்தொழிலே உணவை வழங்குகின்றது என்றால் அது மிகையல்ல. உழுதுண்டு வாழ்பவர் களாகவே இருக்க வேண்டும். அந்த வகையில் பிறரில் தங்காது நாமே எமது வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள வேண்டும்.

உழவுத்தொழில் என்பது சூரியனுக்கு நன்றி படைப்பதாகவே அமைகின்றது. அந்தகையில் உழவுத் திருநாளான தைப்பொங்கல் அன்று சூரியனுக்குப் படைக்கும் முகமாகவே இது கொண்டாடப் படுகின்றது. அதாவது எல்லா இடங்களிலும் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற ஒரு நிகழ்வு ஆகும். உழவர்களைப் போற்றும் முகமாகக் காணப்படுகின்றது. உழவர்கள் இல்லாவிடின் நாம் வாழ்வதென்பது முடியாததொன்றாகும். எனவே உழுதுண்டு வாழ்வதன் அவசியம் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உழவுத்தொழில் மேற்கொள்ளப் பட்டுத்தான் வருகின்றது. அந்தவகையில் பிரதேசத்துக்குப் பிரதேசம் உழவுத்தொழில் வேறுபடுகின்றது. எமது பிரதேசங்களில் ஒருபோக நெற்செய்கையே இடம்பெறுகின்றது. மலைநாட்டுப் பிரதேசங்களில் இருபோகம், முப்போகம் என பல பருவ காலங்களில் விவசாயம் மேற் கொள்ளப்படுகின்றது.

உலகிலே நவீன கண்டுபிடிப்புகளுக்கு அப்பால் புதிய தேடல்களையும் தாண்டி நாம் வளர்ச்சியடைந்து வருகின்றோம். ஆனால் விவசாயத்தை மேற்கொண்டு அதன்மூலம் வாழ்க்கையினை மேற்கொள்வது தமிழர் மரபாகும். அத்தோடு எமது பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருவதாகும். உழுதுண்டு வாழ்வது இன்றும் பின்பற்றப்படுகின்றது. ஆனாலும் தொன்றுதொட்டு வந்த செயற்பாடுகளை இன்று விடுத்து வருகிறோம். அதாவது முன்பு அரிவி வெட்டுவது என்பது கையினால் மேற்கொள்ளப்பட்டது. இன்று புதிய இயந்திரங்களினூடாக மேற்கொள்ளப்படுகிறது. அதுபோலவே சூடு மிதித்து நெல்லினைப் பெறுவது முற்காலத்தில் காணப்பட்டது. இன்று மிக அரிதாகவே காணப்படுகிறது. பெரும்பாலும் இயந்திரங்கள் மூலம் உழவு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் உழவர்கள் கூட இன்று பாரம்பரிய பழக்கத்திலிருந்து விடுபட்டு புதிய முயற்சிகளையே மேற்கொள்கிறார்கள். ஆனாலும் இன்று உழவுத்தொழில் இன்றி அமையாததாகக் காணப்படுகிறது. ஏனெனில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உணவு என்பது இன்றியமையாத அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றாகும். எனவே அவ் உணவினைத் தரும் உழவர்களுக்கு நாம் நன்றி உடையவர் களாகவே விளங்க வேண்டும். ஒவ்வொருவரும் உழுதுண்டு வாழ்வதன் மூலம் வாழ்வினை உயர்த்திக்கொள்ள முடியும்.

எனவே உழுதுண்டு வாழ்வதனைப் பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்" எனப் பாடியுள்ளார். இதனூடாக உழுதுண்டு வாழ்வதன் அவசியத்தை விளங்கிக் கொள்ளலாம்.

சூரியன்

ச. ஜிந்துஜா
யா/ கோவிலாக்கண்டி மகாலட்சுமி
வித்தியாலயம்.

1. சூரியன் காலையில் கிழக்கில் உதிக்கும்.
2. சூரியன் மாலையில் மேற்கில் மறையும்.
3. சூரியன் பந்து போன்ற உருண்டை வடிவமானது.
4. காலைச் சூரிய ஒளியில் விற்றமின் D உண்டு.
5. சூரியக் குடும்பத்தில் உள்ள ஒன்பது கோள்களும் சூரியனுக்கே ஆதாரமாக உள்ளன.
6. சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோள் வியாழன் ஆகும்.
7. சூரியக் குடும்பத்தின் மிகச்சிறிய கோள் புதன் ஆகும்.
8. சூரிய ஒளியில் பல பொருட்களை உலர வைக்கலாம்.
9. சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு.
10. சூரிய ஒளி தாவர ஒளித்தொகுப்புக்கு அவசியமாகும்.
11. சூரியன் இல்லாவிட்டால் அகத்திலும் புறத்திலும் ஒளி உண்டாகாது.
12. சூரியனிற்கு ஆதவன், ஞாயிறு, மித்திரன், கதிரவன், பகலவன் எனப் பல பெயர்கள் உண்டு.
13. சூரியனை இரவில் காண முடியாது,
14. சூரியனிலிருந்து வெப்பம் கிடைக்கிறது.
15. சூரியனிலிருந்து மின்சாரம் பெறலாம்.
16. சூரிய ஒளியினால் நீர் ஆவியாகி வானத்திற்கு சென்று மீண்டும் மழையாகப் பொழிகிறது
17. சூரியஒளி புவியை வந்தடைய 8 நிமிடங்கள் ஆகும்.
18. சூரியனிலுள்ள வெப்பத்தைக் காண நாசா விஞ்ஞானிகள் மேலே விண்ணோடங்களை அனுப்பியுள்ளார்கள்.
19. சூரியனை வணங்குவதற்காக தமிழர்கள் தைப்பொங்கலைக் கொண்டாடுவார்கள்.
20. சூரியனின் நிறம் செம்மஞ்சள் ஆகும்.

அம்மா

ஜெ. ஜெயடினோஜன்
நாவற்குழி மகா வித்தியாலயம்

1. எனது அம்மாவின் பெயர் ஜெ. நிலாஜினி.
2. எனது அம்மா எனக்கு நல்ல பழக்கங்களைக் கற்றுத் தருகிறார்.
3. எனது அம்மா என்னைப் பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுத்தார்.
4. எனது அம்மா என்னைக் கண்ணை இமை காப்பது போல காக்கின்றார்.
5. எனது அம்மா எனக்குப் பிடித்த உணவைச் சமைத்துத் தருகின்றார்.
6. எனது அம்மா எனது கண்கண்ட தெய்வம்.
7. எனது அம்மா எனக்குப் பிடித்த விளையாட்டுப் பொருட்களை வாங்கித் தருவார்.
8. எனது அம்மா எனக்குப் பல விளையாட்டுக்கள் சொல்லித்தருவார்.
9. எனது அம்மா எனக்குப் பாடம் கற்றுத்தருவார்.
10. எனது அம்மா எனக்காகத் தினமும் கஸ்டப்படுவார்.
11. எனது அம்மா என்னை உயிரிலும் மேலாக நேசிக்கின்றார்.
12. எனது அம்மா எனக்குப் பல நற்செயல்களைக் கற்றுத் தருகின்றார்.
13. எனது அம்மா மிகவும் நல்லவர்.
14. எனது அம்மா என்னைத் தினமும் பாடசாலைக்கு அனுப்பி வைப்பார்.
15. எனது அம்மா மிகவும் அழகானவர்.
16. எனது அம்மா என்னைத் தினமும் சுத்தமாக வைத்திருப்பார்.
17. எனது அம்மாவும் தினமும் சுத்தமாக இருப்பார்.
18. எனது அம்மாவைக் காலையில் வணங்குவேன்.
19. உலகத்தை இறைவன் காப்பது போல என்னை எனது அம்மா பாதுகாக்கிறார்.
20. எனது அம்மாவை நான் மிகவும் நேசிக்கிறேன்.

நோயின்றி வாழ்வோம்

நா. சங்கீதா
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழி ஆகும். நாம் நோயின்றி வாழவேண்டுமானால் உடல், உள, சமூக ரீதியான நன்னிலையைப் பெறவேண்டும். நாம் முதலில் எமது உடல் தூய்மையைப் பெறவேண்டும். பின் உளத் தூய்மையைப் பெற வேண்டும். பின்னர் சமூக ரீதியான தூய்மையைப்பெற வேண்டும்.

சமூக ரீதியான தூய்மை என்னவென்றால் நமது சமூகத்தையும் சூழலையும் தூய்மையாகப் பேணிப் பாதுகாத்தலாகும். இத்தகைய சூழல் எமக்கு இருந்தால் நாம் சுகமாக நோயின்றிச் சுகதேகியாக வாழலாம். நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடற்பயிற்சி, சூரிய நமஸ்காரம் என்பன செய்யவேண்டும்.

நாம் உடற்பயிற்சி, சூரியநமஸ்காரம் செய்வதோடு நின்றுவிடாமல் ஆரோக்கியமான உணவுகளையும் விற்றமின்கள் உள்ள பழங்களையும் உண்ணுவது அவசியம்.

மேலும் நாம் இவற்றை உண்ணாமல் நோயாளிகளாக இருந்தால் நமக்கு மனமகிழ்ச்சியோ, மனநிம்மதியோ இருக்காது. நாம் இவற்றை உண்டு மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் வாழவேண்டும்.

நாம் நோயின்றி வாழும்போது உள்ள சந்தோசம் நமக்கு எப்போதும் கிடைக்காது. எனவே எமது சுற்றுச் சூழலையும் எமது பிரதேசத்தையும் நகரத்தையும் மேலும் எமது நாட்டையும் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் பேணிக்காப்பது கடமையாகும்.

நாம் இவற்றைப் பாதுகாக்கும் போது எமது குடும்பங்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் என்போர்களை நோயிலிருந்து பாதுகாக்கலாம். எனவே நாம் எமது சுற்றுச் சூழலில் உள்ள புற்களை எரித்து இலைகள் இலைச்சருகுகளைக் கூட்டுப்பசளையாக்கி சுற்றுச்சூழலைப் பேணுவோம்.

நாம் அவசியமின்றிப் பிளாஸ்ரிக் பயன்பாட்டைத் தவிர்த்தால் சூழல் மாசடைதலை தவிர்த்தவராகவே காணப்படுவோம். நாம் தேவையற்ற மேலைநாட்டுப் பொதிசெய்யப்பட்ட உணவு வகைகள், மென்பானங்களைத் தவிர்ப்பதனால் நோயற்று வாழ வழி ஏற்படும்.

நாம் நோயின்றி வாழ உடலுழைப்பு அவசியமானதாகும். எனவே எறும்புபோல என்றும் சுறுசுறுப்புடனும் தேவையான ஊட்டங்களைத் தேடியுண்டும் நலமே வாழ்வோமாக.

உயர முயல்வோம்

அ. லோகிகா
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

இன்றைய சமுதாயம் ஒரு குறிக்கோளுடன்தான் வாழ்ந்து வருகிறது. சிறார்களாகிய நாம் கல்வி அறிவைப் பெற்று நாளைய உலகின் தூண்களாக மாறவேண்டும். நமக்குக் கல்வி அறிவை ஊட்டுவதற்கு அயராது உழைத்து நமது கல்வி மேம்பாட்டிற்கும் முயற்சி கொடுப்பவர்களில் முதன்மையானவர்கள்தான் நமது பெற்றோர்கள். நாம் வெற்றியை அடையவேண்டும் என்றால் தோல்வியையும் கண்டுதான் செல்ல வேண்டும். "தோல்வியே வெற்றியின் முதற்படி" என்ற முதியோரின் வாக்கிற்கு அமைய நாம் தளராது உழைத்து வந்தோம் என்றால் எமக்கு வெற்றி நிச்சயமே. நாம் ஒன்றையும் சுலபமாகச் செய்துவிட முடியாது. எதையும் உழைத்தே அச்செயலை வெற்றியீட்ட முடியும்.

குறிப்பாக மகாத்மா காந்தி, அப்துல்கலாம் போன்றவர்கள் தாங்கள் எவ்வளவுதான் தோல்வியைத் தழுவினாலும் இறுதியில் வெற்றி நிச்சயமாக அவர்களுக்குக் கிட்டியது. "ஆகாயத்தில் கோட்டை கட்டாதே" என்பது முதுமொழி. "ஆகாயத்திலும் கோட்டை கட்டமுடியும்" என்பது இன்றைய புதுமொழி. அந்தளவிற்கு அண்டத்தின் மூலை முடுக்குகளைக் கூட மனிதன் அடைந்து வருகிறான். அந்த வகையில் தனது முயற்சியை நழுவவிடாமல் வாலன்டினா தெரஸ்கோவா அவர்களால் சாதிக்க முடிந்ததல்லவா? மனிதப்பிறவி என்பது மிகவும் அரிதான பிறவியாகும். அதனால் அதை நாம் உணர்ந்து உயர முயலவேண்டும். எனது உறவினர் ஒருவர் உயர்தர பரீட்சையில் வெற்றியை நழுவவிட்டார். ஆனால் அவர் மீண்டும் நன்றாகப் படித்து வெற்றியைத் தனது பக்கமாக மாற்றிக்கொண்டார். எனவே சின்னஞ்சிறிய சிறார்கள் எதிர்காலத்தின் தூண்கள் நாம் எனக் கருதிக்கொண்டு உயர முயல்வோமாக.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"

தலைவராவோம்

ஸ்ரீ கதிர் வழி
பா/ வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி.

ஒரு குழந்தை பிறந்து வளரும் போது சிறுவனாகி, இளைஞனாகி, தலைவராக மலர்கின்றான். எனவே நாம் நாளைய தலைவராவோம் என்ற கருத்து ஏற்கக் கூடியது. நாம் கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர்களாக வளர்க்கப்பட வேண்டும். கல்வி, ஒழுக்கம் என்பன நாம் தலைவராவதற்கு அத்தியாவசியமானவையாக இருக்கின்றன. கல்வி, ஒழுக்கம் என்பன எம்மிடம் காணப்பட்டால் நாம் நாளைய தலைவர்களாக தலைநிமிர்ந்து வாழமுடியும் என்பதில் ஐயம் இல்லை.

இன்றைய காலகட்டத்தில் நாம் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுகின்றோம். எனினும் வேதனைகளைச் சாதனைகளாக்கி சரித்திரம் படைத்தோரையும் நாம் காணமுடியும். தலைவராவதற்கு எமக்குக் குறிக்கோள் அவசியமானதாகும். நாம் எமது குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டால் அனைவரும் போற்றும் தலைவர்களாக முடியும் என்பது திண்ணம்.

எமது பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுக்கள், போட்டிகள், மன்றங்கள் போன்றவற்றில் நாம் தலைமை ஏற்கும் போதும், சாரணர் கழகம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம் போன்ற சமூக மேம்பாட்டு நிறுவனங்களில் பங்குபற்றும் போதும் தலைமைத்துவப் பண்பை வளர்த்துக்கொள்ள முடியும். அத்தோடு தலைவராக சமூக தேவைகளையும் நிறைவு செய்வதற்குக் கற்றுக் கொள்கின்றோம்.

கெட்டவன் என்று பெயரெடுப்பது மிகவும் எளிது. ஆனால் நல்லவன் என்ற பெயரெடுப்பது மிகவும் கடினம். நாம் மக்கள் மத்தியில் நல்லவன் என்று பெயரெடுக்கும் போதே நாம் தலைவராவதற்குரிய வாய்ப்பு எமக்குக் கிடைக்கிறது. எனவே, நாம் கல்வி, ஒழுக்கம் என்பன உடையவர்களாக வளர்ந்து, மக்கள் மத்தியில் நல்லவன் என்று பெயரெடுத்து நாளைய தலைவர்களாக உருவெடுக்க வேண்டும்.

பரிசில் நாள் நிகழ்வுகள் 2015

விருந்தினர் வரவேற்பு

முதன்மை விருந்தினர் விளக்கேற்றல்

மங்கல விளக்கேற்றல்

வரவேற்புரை

நூல் வெளியீடு

இணைந்து வாழ்வோம்

செல்வி. அ. சர்விகா
யா / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

அறிஞர்களின் அறிவு மொழியிலே 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' எனும் பொன்மொழியை அறியாதவர்கள் இல்லை. ஆம், இந்த இருபத்தோராம் விஞ்ஞான யுகத்தில் விழுமியங்கள் மரித்துப் போகும் காலகட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் தனித்து இயங்க ஆரம்பித்து விட்டான். கூடி வாழ்வதன் அருமை பெருமைகளை அறியாதவனாகிவிட்டான்.

நாம் ஒவ்வொருவரும் எமக்கிடையில் இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கின்றோம். ஐந்தறிவு படைத்த ஜீவனான எறும்பை ஆன்றோர்கள் ஒற்றுமைக்கு உவமானமாக எடுத்துக்கூறுவர். இவ்வுலகில் தனித்து நின்று எம்மால் எதையும் வென்றுவிட முடியாது, பிள்ளைப் பருவத்தில் பெற்றோருடன் இணைகின்றோம். மாணவப் பருவத்தில் ஆசிரியர், நண்பரோடு கூடுகின்றோம். இளமைப்பருவத்தில் இச்சமுதாயத்தினையே எதிர்கொள்கின்றோம்.

இவ்வாறே எமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் யாரோ ஒருவரின் துணையுடனே வாழ்கின்றோம். தனித்திருக்கும் அடம்பன் கொடியை நொடிக்குள்ளே ஒடித்துவிடலாம். ஆனால் பல கொடிகள் திரண்டிருந்தால் அவற்றை எம்மால் ஒடித்துவிட முடியாது, இங்கே தனிமரமாய் நிற்பவனை இலகுவில் தறித்துவிட முடியும் எனும் பொருளையே நாம் காணுகின்றோம்.

இணைந்து வாழ்வது என்பதில் குறைந்தது இரு மனிதர்களின் எண்ணிக்கை இருப்பதைக் காணமுடியும். ஒரு கை தட்டினால் ஓசை பிறக்குமா? நிச்சயமாக இல்லை. எமது இரண்டு கைகளும் சேரும் போதே அது ஓசையை ஒலிரச் செய்கிறது. நம்மவர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து வாழவேண்டுமானால் முதலில் நாம் இணைந்து வாழவேண்டும்.

சண்டைகளின் பிடியில் சிக்கியிருக்கும் இன்றைய உலகினை சமாதானத்தின் கரங்களில் கொடுப்பது எப்படி? குடும்பங்கள் இணைய வேண்டும். நகரங்கள் கூடவேண்டும். நாடுகள் நட்புறவோடு செயற்பட

வேண்டும். இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் இணையவேண்டும். அப்படி இணைந்தால் இப்பூவுலகில் சாதிகள் இல்லை. மதபேதங்கள் இல்லை. இனமொழி வேறுபாடுகள் எல்லாவற்றையும் வேரோடு களைந்துவிட முடியும்.

அன்று காந்திஜியின் பின்னால் அகிம்சைப் போராளிகள் இணையாவிட்டால் இன்று இந்தியாவிற்குச் சுதந்திரம் இல்லை. எமது நாட்டின் தேசியத் தலைவர்களின் கூட்டு முயற்சியே இன்று எமது தாய்மண்ணை நேசித்து சுவாசிப்பதற்குக் காரணம். இவையெல்லாம் யாராலும் எதிர்பார்க்கப்படவில்லை. எனினும் இவை நிஜங்களின் தடங்கள்.

அவ்வாறே தனிமனிதனின் பலங்கள் ஒன்றோடு ஒன்று கூடும்போது இவ்வுலகினையே ஒரு புதுமைப்புரட்சி செய்யமுடியும் என்பது வெறும் கற்பனையோடு நின்றுவிடும் சிந்தனையாகக் கூடாது. அதனை நிஜமாக்க வேண்டும். அதற்கு நாம் இணையவேண்டும்.

சுயநலமற்ற வாழ்க்கைப் பின்னணியை நமது அடுத்த சமுதாயத்திற்கு அளிக்கவேண்டிய கடமை நமக்குள்ளது. கற்பதால் இணைவோம் காலத்தை வெல்வோம். உழைப்பால் இணைவோம். இவ்வுலகம் நமதெனக் கூறுவோம். ஆயிரமாயிரம் அநாதை இல்லங்களை இனிமேல் இல்லாது செய்யவேண்டும்.

பொதுப்பிரச்சினைகளைத் தனியொருவரின் தலையில் பொறுப்பேற்கவிடுவது அழகல்ல. நாளை நமக்கொரு பிரச்சினை ஏற்படும் போது தோள்கொடுக்க மனிதர்கள் இல்லை என்றால் நாம் வாழ்வதில் அர்த்தமே இல்லை எனக் கொள்ளவேண்டும்.

மழைத்துளியுடன் மண் இணையும்போதுதான் செடியில் மலர் மலரும். வாழும் மக்கள் கூடும்போதல்லவா மாற்றம் கிடைக்கும். பிரிவு என்னும் வார்த்தையை எமது அகராதியிலிருந்து விலக்குவோம். இணையும் போதே விடிவு என அனைவருக்கும் விளக்குவோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

இணைந்து வாழ்வோம்

செல்வன் சு. அனுசன்
புனித தோன் கல்லூரி.

மனிதனின் வாழ்க்கை முன்னேறிக்கொண்டே செல்கிறது. ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதனுக்கும் தற்போது வாழும் மனிதனுக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அந்த ஒற்றுமைகள் நிலைத்திருக்க காரணமே மனிதனிடம் காணப்படும் இணைந்து வாழ்கின்ற பண்புதான்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற முதுமொழியும் இணைந்து வாழ்வதின் நன்மையைத்தான் குறிப்பிடுகின்றது. கூடி வாழாவிட்டால் அனைவருமே தாழ்த்தப்படுகின்றனர். இணைந்து வாழ்வதை முக்கியமாகக் கருதி ஐ.நா. சபை ஒரு தினத்தை இதற்கென்றே ஒதுக்கியுள்ளது. நாம் இணைந்து வாழ்வதனால் நமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. நமது வேலைகளைப் பலருடன் இணைந்து செய்யக்கூடியதாக உள்ளது. நமது அறியாமையைப் பிறரிடம் கேட்டு போக்கக்கூடியதாக உள்ளது. இணைந்து வாழ்ந்தால் நன்மை இருக்கிறதே தவிர தீமைகள் எதுவும் இல்லை.

நமது இலங்கையில் கூட இப்பொழுது சமாதானம் நிலவி வருகிறது. முன்னய காலத்தில் சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடு இருந்தமையால்தான் போர் நடந்தது. பிறகு சமாதானத்தை நாடக் கூடி வாழ்வதே அவர்களுக்குத் தீர்வாக இருந்தது. ஒருவன் பிறந்து வளர்ந்து ஒரு நற்பிரஜையாக ஆவதற்குப் பல காரியங்களைச் செய்தல் வேண்டும். இதற்கு எல்லாம் அத்திவாரமாக அமைவதற்குப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். பாடசாலைகளில் ஆண், பெண் வேறுபாடு பார்ப்பதில்லை. எல்லோரும் ஒன்றாகத்தான் கற்பிக்கப்படுகின்றார்கள். சமமாகத்தான் மதிக்கப்படுகின்றார்கள். ஆனால் வெளியே பெண்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர். அவர்களில் அதிகமானோர் பாடசாலைக்கு செல்லாதவர்களாகத்தான் இருப்பர். அவர்கள் திருந்தவேண்டும் என்றால் அவர்கள் பாடசாலைக்குச் சென்றிருக்க வேண்டும். ஏனென்றால் அங்கேதான் அவர்களுக்கு இணைந்து வாழ்தல் பற்றி கற்பிக்கின்றனர். பலர் கூடி வாழ்வதையே விரும்புகின்றனர். ஆனால் சிலர் தனிமையையே விரும்புகின்றனர்.

அவர்களுக்கு நான் சொல்கிறேன், நீங்கள் சமுதாயத்தில் மக்களுடன் இணைந்து வாழாவிட்டால் அவர்களால் தாழ்த்தப்படுவீர்கள். ஊருக்குள் நடக்கும் நல்ல, கெட்ட காரியங்களுக்கு உங்களை அழைக்கமாட்டார்கள். இதெல்லாம் தேவையா?

சிலர் தங்கள் மதத்தவருடன் மட்டும் தான் சேருவர். அவர்கள் சாதியுடன்தான் கதைப்பர். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன், விவேகானந்த சுவாமிகள் சொல்லி இருக்கின்றார் எல்லா மதங்களும் இறைவனைத்தான் அடைகிறது. ஆறுகள் எல்லாம் கடலுடன் கலப்பது போல மதங்களெல்லாம் இறைவனுடன் கலக்கிறது. மதங்கள், சாதிகள் உருவாக்கியது மக்களை இலகுவாக வேறுபடுத்தி இலகுவாக இணைத்து வாழ்வதற்குத்தான். இதைப் புரிந்துகொள்ளாத மக்களோ சாதிகளை வேறு வேலைகளுக்கெல்லாம் பயன்படுத்துகின்றார்கள்.

இந்த சாதி, மதங்கள் உருவான கதை ஒன்றை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு ஊரில் மக்களெல்லாம் இணைந்து வாழ்ந்தனராம். அவர்களுக்கெல்லாம் தலைவராக இறைவன்தான் இருந்தாராம். ஒருநாள் எல்லோரும் ஆரவாரத்துடன் பெரும் கூச்சலிட்டு கதைத்துக்கொண்டு இருந்தனர். இறைவன் அவர்களை அமைதியாக இருக்குமாறு கூறினார். ஆனால் அதைக் கேளாத மக்களோ கதைத்துக்கொண்டே இருந்தனர். இது பிடிக்காத கடவுளோ ஒருவர் பேசுவது இன்னொருவருக்குப் புரியாதவாறு செய்தார். அன்றிலிருந்துதான் மொழிகள், சாதிகள், மதங்கள் ஒருவருக்கு ஒருவர் உருவாக்கிக் கொண்டனர். இறைவன் அப்படிச் செய்ததால் இந்த உலகத்தில் பெரிய மாற்றங்கள் வருமென நினைத்தார். ஆனால் இப்படி நடக்கும் என்று அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இதுதான் அந்தக்கதை. மக்கள் சாதி, மதங்கள் உருவாக்கியதால்தான் இணைந்துவாழும் பண்பு அருகிப்போனது. சாதிகள் பல இருக்கும். ஆனால் எல்லோரும் ஒருசாதி. மனிதன் என்னும் சாதிதான். இதைக் கடைப்பிடித்து புரிந்து கொண்டால் நாங்கள் மற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்து சந்தோசமாக இருக்கலாம்.

கூடிவாழ்வோம்! நன்மைகள் பெறுவோம்!

தலைமை உரை

முதன்மை விருந்தினர் பரிசில்கள் வழங்கல்

பரிசில்கள் வழங்கல்

அன்பளிப்பு

நேர்காணல்

வருடந்தோறும் எமது பிரதேசத்து இளம் சாதனையாளர்கள் இருவரைக் கௌரவித்து பேட்டிகண்டு, சமூகத்தின் முன் எடுத்துவருவதை வழமையாகக் கொண்டுள்ள நாம், இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர உயர்தர தேர்வில் வணிகப்பிரிவில் 3A பெற்று புனித ஜோன்ஸ் கல்லூரியின் முதன்மை மாணவராகவும் யாழ் மாவட்டத்தில் 7ம் இடத்தையும் தனதாக்கிக் கொண்ட ஞானசூரியன் திவாகரன் அவர்களை நேர்கண்டுள்ளோம். அமைதியாக இருந்து சாதனைகள் புரியும் அவரது கருத்துப் பதிவுகள்.

- வணக்கம் தம்பி, இனிய புத்தாண்டு வழ்த்துக்கள். 2016 ம் ஆண்டு உங்கள் வாழ்வில் சுகம், சுபீட்சம் சந்தோசத்தைக் கொண்டு வரட்டும்.

  வணக்கம். உங்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள். நீங்கள் சுகமாய் இருக்க வேண்டும் எமது பிரதேசம் வளர்ச்சி காண்பதற்கு.

- பிரதேசத்துச் சாதனையாளர்கள் இருவரைக் கௌரவித்து வரும் நாம், உயர்தர தேர்வில் முதன்மை மாணவராக பெறுபேறுகள் பெற்றமைக்காக இளந்தளிர் 5 இன் நேர்காணலுக்காக சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

  நன்றி ஐயா, வாருங்கள். கந்தையா கனகம்மா நிதியம் வெளியிடும் இளந்தளிர் 5 இன் நேர்காணலுக்கு என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கும் அதில் கலந்துகொள்வதிலும் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

- வளம் குறைந்த கிராமத்திலிருந்து நலிந்த பொருளாதார நிலையிலுள்ள குடும்பத்தில் இருந்தபோதும் க.பொ.த. உயர்தர தேர்வில் 3A பெற்றுள்ள நீங்கள் உங்கள் பாடசாலைக் கல்வியை எங்கு பெற்றீர்கள்.

  எமது ஆரம்பநிலைக் கல்வியை எமது கிராம மாணவர்களின் கலங்கரை விளக்காய் ஒளி வீசும் யா/நாவற்குழி மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ்/புனித ஜோன்ஸ் கல்லூரியிலும் பயின்றேன்.

- உயர்தரக் கல்வியை நகரத்துப் பாடசாலையில் பயின்று கொள்வதற்காக இணைந்தபோது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

  உயர்ந்த கட்டிடங்களைக் கொண்ட பரந்த வளாகப் பரப்பைக் கண்டு மலைப்புற்றேன். முதலிரண்டு மூன்று நாட்களாக மனம் ஒருவகை வெருட்சியுடனிருந்தது. நண்பர்களின் அன்பும்

ஆசிரியர்களின் அரவணைப்பும் என்னை ஊக்கப்படுத்தியது. பல புதிய அனுபவங்களையும் போட்டித் தன்மையுடனும் கல்வி கற்க வேண்டிய நிலையையும் உணர்ந்து கொண்டேன். எமது குடும்பநிலை மனக்கண்ணில் தோன்றியது. பின்வாங்குதில்லை என உத்வேகம் கொண்டேன்.

- ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்ற நாவற்குழி மகாவித்தியாலயம் எவ்வாறு உங்களைச் செதுக்கியது?

தாயின் மடியில் எவ்வாறு குழந்தை தவழுமோ அவ்வாறுதான் நாவற்குழி மகாவித்தியாலயமும் எமக்கு இருந்தது. ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும் என்ற குறிக்கோளுடன் அதிபர், ஆசிரியர்கள், கல்வி என்ற ஞானப்பாலுடன் ஒழுக்கத்தையும் சேர்த்து ஊட்டினார்கள். ஒழுக்கமில்லாக் கல்வி பாழ் என்பதைப் பின் நாட்களில் பழகிய என் நண்பர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

- எம்மைப் பொறுத்தவரை உங்கள் அடைவுமட்டம் பெரும் சாதனையே. நலிந்த பொருளாதார நிலையுடைய கிராமத்துப் பிள்ளை வசதியுற்ற பிள்ளைகளுடன் பொருதிக் கற்று முதல் மாணவனாக வருவதென்பது இலகுவான காரியமல்ல. இதனை அடையக் காரணமாக இருந்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?

இயல்பாகவே என்னிடம் எதையும் தெளிந்து பின்தொடரும் குணம் அமைந்திருக்கின்றது. இறைவன் தந்தது. இடைநிலை ஆரம்ப வகுப்பாசிரியர்கள் என்னை நன்றாக வழிநடத்தினார்கள். குடும்ப வறுமை என்னைப் புடமிட்டது. அடைந்தே தீருவது என்ற வெறி என்னுள் வளர்ந்தது. ஊன்றிக் கவனிக்கும் இயல்பு துணை வந்தது. ஆதலால் இப்பெறுபேற்றை என்னால் எட்ட முடிந்தது. பாடசாலை மட்டத்தில் மட்டுமல்ல மாவட்ட மட்டத்திலும் முதலாவது மாணவனாக வரவே முயன்றேன். இனிவரும் காலங்களில் நிறைய சாதிக்க உள்ளேன்.

- கற்றல் நடவடிக்கையுடன் வேறு தகைமைகள், ஈடுபாடு ஏதாவது..

பாடசாலையில் கற்கும் போதே தொழிற்கற்கை நெறிகளையும் (AAT, CA), கழகச் செயற்பாடுகள், மெய்வல்லுநர் போட்டிகளிலும் ஆர்வம் காட்டினேன். கல்வியை முதலாகக் கொண்டிருந்தமையால் அத்துறைகளில் அதிக அளவில் பிரகாசிக்க முடியவில்லை.

- உங்கள் குடும்பப் பின்னணியும் அவர்களது ஊக்குவிப்புப் பற்றியும் குறிப்பிடுவீர்களா?

எமது குடும்பம் மிகவும் நலிந்த பொருளாதார நிலையில் இருந்தது. அப்பா தச்சுவேலை செய்துவரும் பணத்தில்தான் குடும்ப வண்டி ஓடியது.

சுகவீனமான அப்பாவால் தொடர்ந்து வேலைக்குப் போக முடியவில்லை. குடும்பத்தில் நாங்கள் அறுவர்.அம்மா, அப்பாவுடன் எட்டுப் பேர். அப்பப்பாவும் எங்களுடன். தினச் சீவியத்துக்கே கஷ்டம். அண்ணா திசாந்தன் பொறுப்புக்களை எடுத்தார். மத்தியகிழக்கு நாட்டுக்குச் சென்று மிகவும் கஸ்டப்பட்டு எங்களைப் படிக்கவைத்தார். அவரது கனவுகளை நாம் நனவாக்குவோம். எனது ஒரே தம்பி நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகிறான். எனது மாமா அப்புத்துரை இராசதுரை 1969இல் விஞ்ஞானப் பிரிவில் தேர்வாகி பெரதேனியா பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வந்தார். அவர்போல் வரவேண்டும் என்ற ஆர்வம் சிறுவயதிலிருந்தே என்னுள் வளர்ந்து வந்தது.

- உங்களுக்குப் போதித்த ஆசிரியர்கள் பற்றி.....

ஆசிரியர்கள் என்றும் புனிதமானவர்கள். தங்கள் மாணவர்களைத் தங்கள் பிள்ளைகள் போல் நேசிப்பவர்கள். மாணவர்களது வாழ்வு சிறக்க வேண்டுமென உழைப்பவர்கள். நல்லாசிரியர்கள் கிடைப்பது பூர்வஜென்ம பயன். எனக்கு நல்லாசிரியர்களைக் கடவுள் தந்தார். எனது அடைவுமட்டம் ஒரு இலக்கென்றால் அதைநோக்கி என்னை உந்தியவர்கள் அவர்கள்தான். நான் இன்று மற்றையோருக்குத் தெரிகின்றேன் என்றால் என்னைத் தூக்கி வைத்திருக்கும் கரங்கள் அவர்களதுதான். அவர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் எனது நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

- தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றதுண்டா?

எனது இடைநிலைக் கல்விக் காலத்தில் கிராமத்தில் இயங்கும் சாயி அக்கடமியிலும் உயர்கல்விக் காலத்தில் நகரில் புகழ்பூத்த யுனிவர்சல், DMI கல்வி நிலையங்களிலும் பயின்றேன்.

- உங்கள் எதிர்கால இலட்சியங்கள் இலக்குகள்.....

நான் நல்ல வாழ்வு வாழ்ந்து எமது சமூக மக்களுக்கு உதவி முன்மாதிரியாக இருக்கவே விரும்புகின்றேன். சமூக மேம்பாட்டாளர்கள் எனக்குச் செய்துவரும் உதவிகளைப் போல எமது சமூகத்திற்கு வழங்க விரும்புகிறேன்.

- இவ்வாறான உயர் அடைவுமட்டத்தை நீங்கள் அடைய கைக்கொண்ட உபாயங்கள் முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்.

கல்வி மந்திர தந்திரங்களாலும் உபாயங்களாலும் அடைய முடியாது. உழைப்பு, உழைப்பு ஒன்றாலேதான் அடையமுடியும். அதிகாலை சேவல் கூவும் வேளையில் எழுந்து படிக்க வேண்டும். புனிதமான அவ்வேளைப் பொழுதில் படிப்பவை அப்படியே மனதில் பதியும். வேலை நிலுவை வைத்திருத்தலாகாது. வகுப்பில் அன்று கற்றதை இரவு மீட்டுப்பார்த்து ஐயம் தீர்த்துப் புரியாவிட்டால் குறித்து வைத்து விளங்கி, அதிகாலையில் படிக்க வேண்டும். வறுமையும் ஏழ்மையும் அடைய முயல்பவனுக்கு ஒரு தடையல்ல. முயலாமல் விட்டுவிட்டு காரணம் கற்பிக்கும் வேலை அது. ஆரம்ப நாட்களில் எமது பிரதேச பொதுநூலகமும் உயர்கல்விக் காலத்தில் யாழ் பொதுநூலகமும் என் தேடலுக்குக் கைகொடுத்தன. இலத்திரனியல், இணைய ஊடகங்கள் போதியளவு தகவல்களைத் தேடுபவனுக்கு வேண்டிய தரவுகளைக் கொண்டுள்ளது. தேடிப்பார்த்தேன். பெற்றுக்கொண்டேன. யார் தேடினாலும் அவை தரும்.

- உங்களைப் போன்ற மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

கூறுவதற்கு நிறைய உள. ஆனால் கூறுவதால் பயனில்லை. அவரவர் உணரவேண்டும். பெற்றோர் எடுக்கும் பிரயத்தனங்களை மதிக்க வேண்டும். அவர்களைத் துதிக்க வேண்டும். இலக்கை நிர்ணயிக்க வேண்டும். இறைவன் தந்த பொக்கிஷமான நேரத்தை முகாமை பண்ணவேண்டும். வறுமையும் ஏழ்மையும் வயதும் கற்கத் துடிப்பவனுக்குத் தடையே அல்ல. சாக்குப் போக்குச் சொல்லி உங்களை நீங்களே ஏமாற்றி இறுதியில் கஸ்டப்பட நேரும். ஆகையால் எழுங்கள், அதிகாலையில் எழுங்கள். ஓடும் நேரத்தைக் பிடித்து வைத்து படித்து முன்னேறுங்கள். நீங்கள் மதிக்கப்படுவதுடன் பெற்றோருக்கும் வாழிடத்துக்கும் பெருமை சேர்க்கலாம்.

- நன்றி தம்பி உங்கள் கனவுகள், விருப்பங்கள், எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும். வாழ்த்துக்கள்.

நன்றி ஐயா.

மயிர் வெட்டோம் – சௌரமும் செய்யோம்

மகான்
யாழ்ப்பாணம்.

மூச்சு விடவும் நேரமில்லை
பிளைப்புக்கென வந்த இடத்தில்
பேச்சுக்கென்ன பேசித்தான் பயனுமென்ன
தூக்கத்திலும் கடையினைத்தான் துடைப்போம்
ஆச்சுபோச் சென்று அள்ளி விழுங்கி
ஏச்சுப் பேச்சுக்களுசி பனிக்குளிரில்
மூச்சுப் பிடித்தோடிக் கடைதிறக்காவிடின்
போச்சு போச்சு வேலையே போச்சு.

நேரத்தில் உணவு நேர்த்தியாய் இல்லையென்று
கோப்பையை எறிந்தாங்கு ஏகியவனும்
வாரத்துக்கொரு தடவை கோழிக்குழம்பில்லை யென்று
தாரத்தின் குடுமி பிடித்தாட்டியவனும்
உப்பில்லைக் கறியிலென்று உலுப்பியடித்தவனும்
தப்பேதும் செய்யாதபோதும் தாயை உதைத்தவனும்
அப்படியல்ல என அறிவுகந்த அப்பாவை
அந்நியராக்கி இங்கு வந்தவரும் அந்நியரே.

பச்சைமிகு நாடென்று எல்லை தாண்டி வந்ததனால்
பிச்சை எடுப்பதற்கும் நாதியற்று - ஊரார்
நச்சை உமிழ எல்லாம் வீ(ழு)ளாங்கியவராய்
கொச்சைத் தொழில் செய்திங்கு வாழ்கின்றோம்.
உண்பதற்கும் குளிப்பதற்கும் உறங்கவும் விடாரிங்கு
புண்பட்ட மனதுடனே புகுவோம் வேலைக்கு
கண்காணாத் தேசத்தில் அக்காவின் கலியாணக்
கடனழிக்க வந்து என்பாடுகள் என்சொல்ல.

மயீர் வளர்ப்போம் வெட்டக் கூலி போவதனால்
மழுங்கடிப்போம் மொட்டையும் வடிவென்போம்.
உயிர்போகும் என்றறிந்தும் உயரத்தில் வேலை செய்வோம்
பெற்றார் துயர்மாழ வேண்டுமென்றே துடிப்பதறியார்
மனம் இரங்கார் காசனுப்பு தம்பி காசனுப்பு என்பார்
கார் வேண்டும் ஓட்ட மொட்டைமாடி உப்பரிகை
சனம் கட்டுது இங்கே நீயென்ன என்பார்
நாமென்ன செய்ய இங்கிருந்தவாறே

வெள்ளைக்காரத்துரை வருவதில்லை கடைபார்க்க
கள்ளத்தனமாய் வந்திங்கு குடியுரிமை
பெற்றுவிட்ட எம்மினத்து மக்களிங்கு
எள்ளிநகை யாடுகின்றார் ஏளனம் செய்கின்றான்
ஓய்வு கேட்டால் தருவதில்லை ஒன்றுக்கும் விடுவதில்லை
பாடுபட்டு நாமுழைக்க நல்லவனாய் தாம் நடித்து
கேடுகெட்டு திரியுமிவரும் நாடுவிட்டோடி
வந்ததனைத் தாம் நினையார்.

பொய்மைக்குச் சிலவேளை உண்மைக்கு நிரந்தரமாய்
நல்வேளை வருமதனால் நாமிங்கு உழைக்கின்றோம்
நாட்டினிடர் நீங்கிவிடும் நல்லநிலை வந்துவிடும்
போயங்கு வாழ்ந்திடுவோம் ஒரு பொல்லாப்பும் இல்லை
கிணற்றுநீர் சுத்தம் அங்கு கிழங்குவகை சுத்தம்
காய்கறிகள் சுத்தம் கனகமணி நெல் சுத்தம்
காற்றும் சுத்தம் காண்பரியர் சுத்தம்
சுற்றம் சேர்ந்து சுகமாய் வாழ்ந்திடுவோம்.

கிராமிய வளர்ச்சியும் சமூக மேம்பாடும்

வ. கமிலன்
நிர்வாக அலுவலர்
கொமர்ஷல் கிறெடிற் பினான்ஸ் CLC
12.02.2016

"வீசுந் தென்றலில் சிலிர்த்தாடும் நெல்வயலும்
விரிவான் தெரிய விளைந்து கிடக்கும் பசும்புல்லும்
விண் தொட நிமிர்ந்து நிற்கும் நெடும்பனையும்....."

இப்படியெல்லாம் எண்ண வைக்கும் கிராமப் புறங்கள்தனை காண்பது தான் அரிதாகி விட்டது இன்றைக்கு. முன்னொருகால் பசுமை திழைத்திருந்த இத்தேசமின்று கட்டடங்களால் நிறைக்கப்பட்டு காட்சியளிக்கிறது. இயற்கையை விஞ்சிவிட்டு செயற்கை உலகாளும் தருணத்தில் கிராமிய வாடை நுகர ஏங்குகிறது உள்மனம்.

கிராமங்கள் அன்று சூழலுடனும் சக உறவுகளுடனும் பின்னிப் பிணைந்து ஒன்றினுள் மற்றொன்றாகவிருந்தது. ஆனால் இன்றோ அது தனித்து இயங்குகிறது. நகரமயமாதலின் விளைவால். நகரப் புறங்களின் வளர்ச்சி கிராமங்களின் வளர்ச்சியை முடக்குவதுடன் சமூகவியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி நிற்கிறது. கிராமங்களில் கூடிவாழ்தலின் தன்மை வெளிப்படும். நகர்ப்புறங்களில் மாடிக்கட்டட தளங்களில் முடங்கி வாழும் வாழ்க்கையும் வேலைப்பழுவின் ஆதிக்கமும் சமூக மேம்பாட்டை நகர்த்திப் போட்டி போடுகிறது.

முன்னைய காலத்தில் பண்டிகை நாட்களில் பண்டங்கள், படைத்து, புத்தாடை தரித்து, பூஜை புனஸ்காரங்களில் திழைத்து ஒன்றியிருந்த உறவுகளும் அயலும் கிராமப் புறங்களின் சிறப்பெனவே தெரிந்தது. ஒன்றாய் குழுமியிருந்து வைபவமோ, இறப்பு வீடோ, கொண்டாட்டங்களோ, களியாட்டங்களோ நடந்திருந்தன. சிறார்களின் துடியாட்டச் செயல்களும் தாய்மாரின் கனிவான கண்டிப்பும், தகப்பனாரின் வியர்வையில் விளைந்த நல்ல சோறுகறியும் நன்மையில் நனைந்து கிராமங்கள் வளர்ச்சியடைந்திருந்தன. கிராமங்களின் வளர்ச்சியே சமூக மேம்பாட்டை அதிகம் ஊக்குவிக்க முடியும். தொழில்நுட்ப

வளர்ச்சியால் கிடைத்த நகரங்களில் அவசர அவசிய, பழுநிறைந்த, விரைகிற, நாள் முழுக்க ஓடித்திரிகிற, அதிவேக குடித்தொகையில் சமூக ஒன்றிப்பை காணவுந்தான் முடியுமா? விரைவு உணவு என்கிற உணவுப் பழக்கம் நோய்வாய்ப்பை அதிகரித்து விட்டு ஆயுளை குறைத்து விடுகிறது. அதே தருணம் ஊட்டச்சத்துமிக்க கூழ், பழைய கஞ்சி மற்றும் இலைக்கஞ்சி போன்றவை ஆயுளை அதிகரிக்கும் கிராமத்து உணவுகளல்லவா? கிராமங்கள் வளர வளர அவசரத்தின் அவசியம் தொலைந்து அமைதியான அழகான வாழ்வை கைக்கொள்ள முடியும். கலாசாரமென்னும் இனஅடையாளம் கௌரவிக்கப்பட்டது கிராமங்களிலேயேயாகும். சமூகத்தில் கருத்திலெடுக்கப்படும் விடயம் கலாசாரம். சமூகத்தில் ஒருவரை அவர் நடை, உடை, பாவனை மூலம் மதிப்பிட்டு விட முடியும். உடை என்னும் போது கலாசாரம் சார்ந்ததாகவும் இருக்கிறது. அது பாலைப் பொறுத்தது, சமயத்தைப் பொறுத்தது. நகரமயமாதல் கலாசாரத்தையும் தொலைத்து விட்டது. சமூகவியலில் கலாசாரம் மறைக்கப்பட்டுவிட்டது இன்று மேலைத்தேய நாடுகளின் மிடுக்கான உடையமைப்பில் கவரப்பட்ட மக்கள் தேசத்துக்குரிய நன்மதிப்பு விடயங்களை மறந்து விட்டனர். தேசியத்தைத் தொலைத்து விட்டனர்.

வேலைவாய்ப்புக்கள் நிறைந்து கிடக்கும் நகர்ப்புறங்களில் குற்றச்செயல்கள் அத்துமீறி விட்ட தன்மை கவலைக்குரிய விடயமே. கிராமங்களில் ஒற்றுமைப்பட்ட மக்கள் குற்றச் செயல்களில் அத்துமீறியதில்லை. அதே தருணம் தமக்குள்ளே விசாரிக்கப்பட்டு பிரச்சினைகள் ஊர் மத்தியில் தீர்க்கப்பட்டுமிருந்தன. இந்த நாட்களில் கிராமங்களின் இருப்பு மிக குறைவாய் உள்ள சந்தர்ப்பத்தில் சமூக மேம்பாடு தன்மை விரல் விட்டே எண்ண இயலுமானதாய் இருக்கும். நகர்ப்புறங்களில் குடியாட்டம், களியாட்டம் கூடி இருக்கும். தீய செயல்களுக்கு இரையாகி கொண்டிருக்கும் அழிவின் பாதையில் பயணிக்கும் சமூக மக்களிடத்தே சமூக மேம்பாடு என்பதை எங்ஙனம் தேடமுடியும்.

கிராமத்தவர்கள் சற்றே படித்துயர்ந்தவராகிவிடில் நகரங்கள் நோக்கி நகர்கின்றார்கள். அல்லது கிராமத்தினுள்ளேயே நகரசுக

வாழ்வை அனுபவிக்க முனைகின்றார்கள். வேலிகள் போய் எல்லையில் மதில்கள் தோன்றி சூழற் சமநிலை பாதிக்கப்பட்டு வெப்பம் அதிகரித்துவிட்டது. வெப்பத்தைத் தணிக்க மின்விசிறிப் பயன்பாடு இதனால் பொருளாதார சுமை மற்றும் உடல்நலக்கேடு என சுமைகள் அதிகரிக்கும். தென்னங்கீற்றுத் தென்றலும் மாஞ்சோலையின் மாசற்ற காற்றும் மானிடர்க்கு தரும் சுகத்தை சுகமாக கருத மறந்தேவிட்டோம்.

பட்டதடிகள், மர எச்சங்களை வைத்து விறகால் உணவாக்கியுண்டு மறைமுகமாக மருத்துவ நலனையும் உணவோடு சேர்த்து நுகர்ந்த மனிதர் வேக சிந்தையால் செயற்கை வாயுவை சமையலுக்குப் பயன்படுத்தும் மாயைக்குட்பட்டு நோயாலும், பொருளாதார சுமையாலும் மாய்கின்றனர்.

பட்டி, பண்ணை, வேளாண்மையால் சுய பொருளாதாரம் மட்டுமல்லாமல் தேசிய பொருளாதாரத்திலும் பெரும் செல்வாக்குச் செலுத்திய கிராமங்கள் தமது அடையாளங்களை இழப்பதனால் சுகவாழ்வு, பொருளாதாரம், அடையாளத்தை மட்டுமிழக்காது மேலைத்தேய காலனித்துவத்திற்குள்ளும் அகப்பட்டதோடு அந்நிய செலாவணி வெளியேற்றத்தோடு தொடர்ந்தும் அந்நிய நாட்டில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

இயற்கைச் சூழலோடு ஒன்றியிருந்த சமூக வாழ்வு வெற்றியையே கண்டிருந்தது. இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலின்றி சூழலியல் நண்பராக கிராமங்களில் வாழ்ந்த மனிதர்கள் நகர்ப்புறங்களில் அல்லலுறும் சுற்றாடல் மாசடைதல் எனும் கொடிய மிருகத்திடம் சிக்கித் திண்டாடும் மனிதரிலும் பார்க்க சுகபோக வாழ்வையே வாழ்கிறார்கள். கிராமங்களின் வளர்ச்சி சமூக மேம்பாடுக்கு வித்திடுகிறது. எப்படியாயினும் கிராமங்கள் இன்றைய சூழ்நிலைகளுக்கு தாக்குபிடிக்கும் என்பது ஐயமே. எனினும் நகர மயமாக்கல் எனும் அழிவுப் பாதையை உருவாக்குவதை விடுத்து கிராம மயமாக்கல் எனும் ஆக்க பாதையை புனர் நிர்மாணம் செய்து சமூக விழுமியங்களை புதுப்பித்து சமூக மேம்பாட்டுக்கு புத்துயிரூட்டி சிறப்பாக வாழ்வோமாக!!

நேர்காணல்

எமது பிரதேசத்திலிருந்து அரச பொதுத் தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனைபுரியும் மாணவர்களை ஊக்குவிப்பது, கௌரவிப்பது, உதவுவது போன்ற செயற்பாடுகளால் மாணவர்களை மேலும்மேலும் சித்தியடைய, படிக்கத் தூண்டிவிடலாம் என்ற பெரு விருப்பில், நம்பிக்கையில் ஆண்டுதோறும் சாதனை படைப்பவர்களில் இருவரை நேர்காண்பது வழமை. அந்தவகையில் இவ்வருடம் க.பொ.த உயர்தர வணிகப்பிரிவில் 3A சிறப்புப் பெறுபேறு பெற்ற செல்வி சற்குணநாதன் சஞ்சீவியை நாம் சந்திக்கின்றோம்.

- வணக்கம் அம்மா, இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். ஆண்டு 2016 உங்கள் வாழ்வில் சுகத்தையும் சுபீட்சமும் கொண்டுவர வாழ்த்துகின்றோம்.

  நன்றி, நன்றி உங்களுக்கும் அவ்வாறே அமையட்டும். எமது பிரதேச மாணவர் நலனுக்காக நீங்களும் சுகமாக இருக்க வேண்டும்.

- வழமைபோல இவ்வருடமும் இப்பிரதேசத்துச் சாதனையாளர் இருவரைக் கௌரவித்து இளந்தளிர் 5 இற்காக உங்களை நேர்காண வந்திருக்கின்றோம்.

  வாருங்கள். இளந்தளிர் 5 இன் நேர்காணலுக்கு என்னைத் தெரிந்தெடுத்தமைக்கு நன்றிகள். அதில் கலந்துகொள்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

- அடிப்படை வசதிகள் குன்றிய எமது பிரதேசத்தில் வசித்துக் கொண்டு க.பொ.த உயர்தர தேர்வில் 3A பெற்றுக்கொண்டுள்ள நீங்கள் உங்கள் பாடசாலைக்கல்வியை எங்கு பெற்றீர்கள்?

  எனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை எமது பிரதேசத்தில் அமைந்துள்ள நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கற்றேன். ஆரம்ப இடைநிலைத் தேர்வுகளில் சிறப்புச் சித்தி பெற்றமைக்காக கந்தையா கனகம்மா நிதியத்தினர் ஊக்குவிப்பும் கௌரவிப்பும் வழங்கினர். ஆசிரியர்களும் குடும்பத்தினர்களும் பாராட்டினர். எனக்குள்ளும் ஒருவகை வேகம் பிறந்தது. கற்க வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இணைந்து கற்றேன்.

- உயர்தரக் கல்வியை வேப்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் பெற இணைந்தபோது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

பிரமிப்பாக இருந்தது. இனந்தெரியாத ஒரு வகைப் பயம் பற்றிக் கொண்டது. புது சூழல், உயர்தர குடும்பப் பிள்ளைகளின் தோரணை எல்லாம் என்னை நிலை தடுமாற வைத்தது. இவ்வேளையில் எம்போன்ற கிராமப் பாடசாலை களில் கற்றவர்கள் முன்னின்று ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருந்தோம்.

நாளாக நாளாக அநேக நண்பர்களும் உயர் குடும்ப நண்பர்களும் இணைந்து கொண்டனர். கிராமத்துப் பிள்ளைகள் நாங்கள் பாடங்களை உற்றுக் கவனித்து விளங்கிக் கொள்வதால் சங்தேகங்கள் தீர்த்துக் கொள்வதற்காகவும் இணைந்தனர். மனதில் தெம்பும் தைரியமும் குதூகலமும் வளர்ந்தது.

- இந்த அடைவு மட்டங்களை நீங்கள் அடைய காரணமாக இருந்தவர்கள் பற்றிக் கூறுங்கள்.

ஆரம்ப காலத்தில் எனது பெற்றோர்களும் அக்காக்களும் எனக்கு உத்வேகம் அளித்தனர். அக்காக்களின் பாடங்களை அவர்களுடன் சேர்ந்து சத்தமாகப் படிப்போம். பெற்றோர் உற்சாகப்படுத்தினர். இதன் பயனாய் கல்வி மீது எனக்குப் பெரும் ஆர்வம் வளர்ந்தது. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணதர பரீட்சை ஆகியவற்றில் உயர்புள்ளிகளைப் பெற்றமைக்கு எமது பிரதேச கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் கந்தையா கனகம்மா நிதியம் பாராட்டி பரிசில்களை வழங்கினார்கள். எனது ஆற்றலை அறிந்துகொண்ட இராசநாயகம் குமணன் அவர்கள் தங்கள் வீட்டில் தங்கிட வசதிகளுடன் எல்லா உதவிகளும் செய்து என்னை ஊக்குவித்தார். அவர்களது தாயார் என்னைத் தன் பிள்ளைபோல் பராமரித்து ஊக்குவித்தவண்ணம் இருப்பார். இவர்களுக்கும் என்னை ஊக்குவித்த அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

- உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் கூறுவீர்களா?

  எனக்கு மூன்று அக்காக்களுடன் ஒரு தம்பியும் உள்ளார்கள். வீட்டில் பொருளாதாரக் கஷ்டம் இருந்தாலும் எங்கள் அனைவரையும் எமது பெற்றோர் கல்வி கற்க வைத்துள்ளனர். வறுமை கற்க விரும்புபவர்களுக்குத் தடையல்ல என்பதை நிரூபித்துள்ளனர்.

- உங்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் பற்றிக் கூறுவதாயின், ...

  எங்கள் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு மிக்கவர்கள். தங்கள் பிள்ளைகளாகக் கருதி அரவணைத்து கற்பித்தவர்கள். தங்களிடம் பயிலும் ஒவ்வொருவரும் சிறந்த கல்வி பெறவேண்டும் என எண்ணங்கொண்டு அதிபரின் வழிகாட்டலுடன் கற்பித்தார்கள். பிரத்தியேக வகுப்புக்களில் கற்பித்த ஆசிரியர்கள் திரு. கஜீதரன், திரு. கஜன், திரு. பிரதீபன், திரு. சுகிர்தன் ஆகியோர் மிகவும் கவனமெடுத்துப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தி விட்டமை எனக்கு 3A அடைய இலகுவாயிருந்தது.

- தனியார் கல்வி நிலையங்களில் பயின்றுள்ளீர்கள். அவற்றின் அவசியம் பற்றிய உங்கள் கருத்து என்ன?

  மேலோட்டமாகப் பார்த்தால் பாடசாலைகளில் கற்க முடியாதவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கற்றுத் தேறிவிடமுடியுமா? என்ற கேள்வி எழுந்தாலும் தனியார் கல்வி நிலையங்கள் பரீட்சைக்காக எம்மைத் தயார்ப்படுத்துவதில் கூடிய கவனம் எடுத்தன என்றுதான் கொள்ள வேண்டும். பாடத்திட்டத்தில் முக்கிய பகுதிகளை இனங்கண்டு அவற்றை எமக்குத் தெரியப்படுத்தி தெளிவுபடுத்துவதால் தனியார் கல்வி அவசியமா கின்றது.

- உங்கள் எதிர்கால இலட்சியங்கள் பற்றி.....,

  உயர்கல்வி கற்று வங்கியியல் துறையில் உயர் பதவிகள் பெற்று முதலில் எமது குடும்பத்தவரை வசதியாக வாழவைப்பதுடன் எனக்குக் குமணன் அண்ணா கிடைத்தது போல நானும் சிலருக்காவது உதவி அவர்கள் வாழ்வை உயர்த்த வேண்டும். பிரதேசத்தில் இயங்குகின்ற சமூக மேம்பாட்டு அமைப்புக்களுடன் இணைந்து கிராமிய எழுச்சி ஏற்படுத்த முயல்வேன். கிராமங்கள் எழுந்தால் நாடும் எழுச்சி பெறும்.

- உங்கள் மாணவ நண்பர்களுக்கு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

  வறுமையும் ஏழ்மையும் கற்பவர்களுக்குத் தடையேயல்ல. ஊன்றிக் கவனித்து விருப்பத்துடன் பாடங்களைக் கற்க வேண்டும். இன்றைய பாடங்களை இன்றே திரும்ப மீட்டுப் பார்த்து தெளிந்துகொள்ள வேண்டும். மயக்கம் தரும் விடயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.தகுதிகாண் பரீட்சைக்குப் பின்னர் எத்துறையைத் தேர்ந்தெடுப்பது என்பதில் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும். பின் விருப்புடன் கடுமையாக உழைத்தால் எல்லாம் எல்லோருக்கும் சாத்தியமாகும்.

- இந்த அடைவுமட்டத்தை அடைய நீங்கள் எடுத்த முயற்சிகள் திட்டமிடுகைகள் பற்றிக் குறிப்பிடுவீர்களா?

  நேரமுகாமைத்துவத்தைத்தான் நான் குறிப்பிடுவேன். அதி காலையில் எழுந்து நேற்றைய பாடங்களை மீட்டுப் பார்ப்பேன். விளங்காதவற்றைக் குறித்துக்கொள்வேன். ஆசிரியரிடம் விளக்கம் கேட்டுப் புரிந்துகொள்வேன். புரியாத அல்லது கஷ்டமான விடயங்களை எழுதி கைப்பையில் ஒரு சிறு குறிப்பு வைத்திருப்பேன். அடிக்கடி எடுத்துப் பார்த்து மனதில் பதிய வைப்பேன். எதைச் செய்தாலும் விரும்பிச் செய்வேன். இவையாவும் எல்லோருக்கும் முடியும். எல்லோராலும் முடியும். முயலுங்கள். வெல்லுங்கள்

- நன்றி அம்மா. நன்றி. உங்கள் கனவுகள் இலட்சியங்கள் எல்லாம் மெய்ப்பட வேண்டும். இறைவன் அருள்புரிய வேண்டும். இப்பிரதேசம் எழவேண்டும். அதற்காக உங்களைப்போல இளைய பருவத்தினர் முயல வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சித்திரை விடுமுறையில் சுற்றுலா போனோம்.

திருமதி. மங்கையக்கரசி துரைராசா
தச்சன்தோப்பு

விடுமுறை நாட்களில் குடும்ப உறவினர்களுடன் சேர்ந்து களிக்கவென கனடாவில் வாழும் அண்ணரும் பிள்ளைகளும் யாழ்ப்பாணம் வந்தார்கள். பயணக்களைப்புக்கள் நீங்கி இங்குள்ள உறவுகளுடன் அன்பு பாராட்டி அளவளாவி உண்டு மகிழ்ந்து கொண்டாடினோம். இவர்களின் இலங்கைப் பயணத்தின்போது இலங்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் சுற்றுலாச் சென்று பார்ப்பது வழமை. இம்முறை நாங்கள் மலைநாட்டுப் பகுதிகளைச் சுற்றிப்பார்க்க ஆர்வம் கொண்டு பயண வரைபடம் ஒன்று வரைந்து எடுத்தோம். நவீன வலைத்தளங்களுக்குச் சென்று போதிய தரவுகளும் இடங்களின் முக்கியத்துவம் பற்றியும் அடிப்படை அறிவும் பெற்றுக்கொண்டோம். ஒவ்வொரு வீட்டிலும் குதூகலம். ஒவ்வொருவரும் பயணத்திற்குத் தயாராகினர். கனடாவிலிருந்து வந்த அண்ணர் குடும்பம், நீர்வேலியில் வாழ்ந்துவரும் அண்ணர் குடும்பம், எமது குடும்பத்தவரென இருபது பேர் கொண்ட குழுவினர் பயணப்படத் தயாரானோம். பயணத்துக்கேற்ற நல்ல நிலையிலுள்ள சிறிய பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம். 11.05.2015 திங்கட்கிழமை புறப்படுவது என முடிவெடுத்தோம். அன்று அதிகாலை சுமார் 05.30 மணியளவில் புறப்பட்டுத் திருகோணமலை நோக்கிப் பயணமானோம். காலை எட்டு மணியளவில் வவுனியாவில் வசித்து வருகின்ற எமது உறவினர்களைச் சந்தித்து மகிழ்ந்து கொண்டாடி, காலை உணவும் எடுத்துவிட்டு சற்று இளைப்பாறிய பின்னர் எமது பயணம் தொடர்ந்தது. இளவேனிற்காலம் முடிந்திருந்தமையால் மரங்கள் எல்லாம் இலையுதிர்த்துப் புதுக்குருத்துக்கள் விட்டிருந்தன. எங்கும் பசுமையான தோற்றம். அத்துடன் மரங்களின் பூக்களிலிருந்து வந்த நறுமணம் புத்துணர்வைத் தந்தது. காலைநேரத்து சீதளக்காற்றும் இதமாக இருந்தது.

முதலில் நாங்கள் தெட்சணாலயம் என அழைக்கப்படும் திருகோணமலை சென்றோம். புகையிரத நிலையத்திலிருந்து தெற்குப் பக்கமாக 1km தூரத்தில் அமைந்துள்ள உயரிய மூன்று பெரிய மலைகளிடையே இயற்கையாகவே அமைந்திருந்த துறைமுகம் பிரமிப்பை உண்டாக்கியது. இயற்கையின் சக்தி அளவிட முடியாதது. மூன்று பெரிய மலைகளிடையே அமைந்திருந்ததால் திருகோணமலை எனப் பெயர்பெற்று வந்ததெனவும், இவ் இயற்கைத் துறைமுகத்தில் தாங்கள் ஆதிக்கம் செலுத்த எண்ணிப் பல நாடுகள் இலங்கைக்கு உதவ வருவது போல முன்வருவதாக அறிந்து கொண்டேன்.

அதற்கேற்றாற்போல் வெள்ளைக்கார சுற்றுலாப்பயணிகள், சீனர், யப்பானியர்கள் பலரையும் அங்கு காணக்கூடியதாக இருந்தது. இயற்கை எழிலைப் புகைப்படம், வீடியோ எடுப்பதெனக் கூறி சந்துபொந்துகளையும் மலையின் அழகையும் துறைமுக அமைப்புக்களையும் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சுந்தரமூர்த்தி நாயனாராலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும் பாடப்பெற்ற சிவனாலயம் இம்மலையின் உச்சியிலே அமைந்துள்ளது. குளக்கோட்டன் என்ற அரசனால் அமைக்கப்பட்டது. அருகே பெரிய கணவாய் ஒன்றும் காணப்படுகின்றது. இதனை இராவணன் வெட்டு எனக் கூறினார்கள். மலை உச்சியிலுள்ள சிவனைத் தொழுதுவிட்டு கிண்ணியா என்னும் ஊரை சென்றடைந்தோம். உலக அதிசயமாக ஏழு நீரூற்றுக்கள் வெவ்வேறு வெப்பதட்ப நிலையில் அங்கு காணப்பட்டன. சிறுசிறு வாளிகளால் அள்ளிஅள்ளி அந்நீரில் குளித்தபோது உடல் சிலிர்த்தது, சுகமாகவும் இருந்தது. மருத்துவக் குணங்கள் அந்நீருக்கு உண்டு என்றும் தீராத பல வியாதிகளைத் தீர்க்கும் சக்தி உண்டென்றும் அறிந்து இயற்கையின் வலிமையை எண்ணி மகிழ்ந்தோம். அருகில் அமைந்துள்ள நிலாவெளிக் கடற்கரைக்குப் போனோம். கடல்நீரில் குளித்துக் கும்மாளமிட்டு கொண்டாடினோம். கடல்நீரில் குளித்ததாலோ என்னவோ கடும் பசி எடுத்தது. நேரமும் ஒருமணி ஆகிவிட்டது. அங்கிருந்த உணவு விடுதியில் சாப்பிட்டுவிட்டு சற்று ஓய்வெடுத்த பின்னர் பின்னல என்னும் இடத்தை நோக்கிச் சென்றோம்.

இரவாகிவிட்டதனால் தங்கிடம் ஒழுங்குசெய்து தங்கினோம். கடல்மட்டத்திலிருந்து 6181 அடி உயரத்தில் அமைந்துள்ள யானைகள் சரணாலயம் பார்க்கப் போனோம். வழி எங்கும் பச்சைக் கம்பளம் விரித்து விட்டது போல தேயிலைத் தோட்டங்கள் நிலச் சரிவுகளுக்கு ஏற்ப சரிந்து வளைந்து பொங்கித் தணிந்து மிக அழகாகக் காணப்பட்டன. தேயிலை பதனிடும் சாலைகள், பெரிய தொழிற்சாலைகள் என்பன கண்டோம். நேரம் கருதித் தேயிலை பதனிடும் முறையைக் காணச் செல்லவில்லை. காலம்தாழ்த்திச் சென்றால் யானைகளின் சாகசங்கள் காணமுடியாது போய்விடுமென அறிந்து விரைந்து சென்றோம். யானைகள் காட்டில் வளர்வது போன்ற இயற்கைச் சூழலில் மகிழ்வாகக் காணப்பட்டன. தாய், குட்டிகள், கொம்பன் யானைகள் என வலம் வந்து சாகசம் செய்தன. முன் கால்களைத் தூக்கி நடனமாடின. பின்கால்களைத் தூக்கிக் குதித்தோடின. அந்தப் பெரிய மிருகம் மனிதனுக்குக் கட்டுப்பட்டு இயங்குவது பிரமிப்பாக இருந்தது. கூலி பெற்றுக்கொண்ட பின் யானைகளில் ஏறிச் சவாரி செய்ய அனுமதித்தார்கள். ஒருபக்கம் பயம்

இருந்தாலும் மிகவும் சந்தோசமாகவும் இருந்தது. யானை என்று கேட்டதுமே பயந்து ஓடும் மக்கள் யானைமீதேறிப் பயணம் செய்வது என்பது மிகவும் மகிழ்வாக இருந்தது. கைகூடா ஆசைகள் பல இருந்தாலும் தனது குண்டான யானைக்குட்டியைத் தூக்கி இடுப்பில் வைத்துப் பொக்கை வாயில் முத்தமிட முடியாத தாய் யானையின் தவிப்புத்தான் மிகப்பெரிய கைகூடா ஆசையென எங்கோ வாசித்தது நினைவுக்கு வந்தது. குண்டு குண்டாகக் குட்டி குட்டியாகத் தாயைச் சூழவரும் யானைக் குடும்பத்தைக் கண்டு மகிழ்ந்தோம்.

அங்கிருந்து நாங்கள் நுவரெலியா நோக்கிப் பயணமானோம். பயணத்தில் நேரம் கழிந்திடவே தங்கிட விடுதி ஒன்றில் தங்கினோம். என்ன குளிர், எவ்வாறு மக்கள் இங்கு வேலைசெய்கிறார்கள் என அதிசயித்தேன். உயர உயரச் செல்லச்செல்ல காற்றின் அமுக்கம் குறையும் எனவும் குளிர் அதிகரிக்கும் எனவும் பள்ளிக் காலத்தில் ஆசிரியர் கூறிய வார்த்தைகள் நினைவில் வந்தன. கண்டி பெரதெனியா செல்லத் திட்டமிட்டிருந்த போதிலும் கண்டியிலிருந்து 2 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சீதலேய என்னும் சீதாதேவி கோவிலுக்குச் சென்றோம். மூன்று பக்கமும் உயர்ந்த மலைகளுடன் நடுவே இயற்கை வனப்புடன் இருந்த இவ்விடத்தில்தான் சீதையை கவர்ந்து வந்து இராவணன் சிறை வைத்ததாக அறிந்தோம். தோட்டத் தொழிலாளர்கள் முதுகில் கூடைகளுடன் படங்கு சுற்றிக்கொண்டு மலை முகடுகளில் ஏறித் தேயிலைக்கொழுந்து பறிப்பதையும் கண்டோம். எறும்புகள் போன்று சுறுசுறுப்புடன் வரிசை வரிசையாகவும் இருதுளிர் ஒரு மொட்டு என்ற நிலை குலையாமலும் பறித்துக் கூடையில் போட எவ்வாறு இவர்களால் முடிகின்றது என எண்ணினோம். இவர்களது வாழ்விடங்களையும் வாழ்க்கைத் தரத்தையும் அறிந்து கவலை கொண்டோம்.

மாத்தறை வழியாக யால தேசியப் பூங்காவுக்குப் போனோம். வழியில் சீன உதவியுடன் இலங்கை அரசு அமைத்த விமான நிலையத்தையும் மிகப் பிரமாண்டமான செயற்கைத் துறைமுகத்தையும் கண்டு வியந்தோம். இவ்விரு திட்டங்களும் சீராகச் செயற்பட்டு வருமானம் சம்பாதித்து தராமல் வீணே கிடப்பது கவலையளித்தது. யாலவில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் இரவு தங்கினோம். மயில் அகவும் ஓசையும் பறவைகளின் இன்னிசையும் யானைகள் பிளிறும் சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தது. நித்திரைகொள்ள முடியவில்லை. பயம் ஒருபுறம் என்றால் மறுபுறம் மகிழ்வாகவும் இருந்தது.

காலை சுமார் 6 மணியளவில் இரண்டு வாகனங்களில் எங்களை ஏற்றிக்கொண்டு 'யால' பூங்காவுக்குச் சென்றனர். அடர்ந்த

பெரும் காடு, வளைந்து நெளிந்து செல்லும் பாதையில் பள்ளம் திட்டிகள் காரணமாக மெதுவாக ஓசையின்றியும் பயணித்தோம். பயணத்தின் போதே கூட்டம் கூட்டமாக யானைகளை அண்மையில் கண்டு மகிழ்ந்தோம். பயந்தோம். ஒன்றுங் பயம் வேணாங் என்று சாரதி கூறினார். பிழையாக உச்சரித்தாலும் எமது மொழியை இன்னொரு மொழியாளர் பேவதைக் கேட்க ஆனந்தமாகவே இருந்தது. எங்களைப் போலவே நிறைய உள்ளூர் வெளிநாட்டு மக்களும் உல்லாசப் பயணம் வந்திருந்ததை அங்கு கண்டோம். சிறிய பெரிய யானைகள் அவற்றின் குட்டிகள், புள்ளி மான்கள் விரிந்த கொம்புகளுடன் கலைமான்கள், குரைக்கும் மான்கள், காட்டெருமைகள் எனப் பலவகை மிருகங்களுடன் வண்ணவண்ணப் பறவைகள், கீச்சிடும் குருவிகள், பறந்து செல்லும் வண்ணத்துப் பூச்சிகள், தும்பிகள் என இயற்கைக் காட்டுச் சூழலில் நாம் மகிழ்ந்தோம். மயில்கள் நீண்ட தோகைகளுடன் அசைந்து அசைந்து திரிவதும், சிறகை விரித்து ஆடுவதும் அகவி மகிழ்வதுமாக இருந்தது பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அண்ணருக்கும் பிள்ளை களுக்கும் எமது நன்றிகள். ஒரு யானை குட்டிகளுடன் எமக்கு அருகில் வந்துவிட்டது. பின்புறமாக வந்தவற்றைத் திடீரெனக் கண்டதும் பயத்தில் ஒருகணம் உறைந்து போய்விட்டோம். சத்தங்போட வாணாங் என்று ஓட்டுனர் கூறவே மேலும் பயம் அதிகரித்துவிட்டது. அவை அமைதியாக எம்மைக் கடந்து சென்றதும்தான் உயிர் வந்தமாதிரி இருந்தது. மீண்டு வந்து தங்கும் அறையில் உணவருந்தி ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மாலை நாலு மணியளவில் காலி கிக்கடுவ என்னும் கடற்கரைக்கு வந்தோம். கடலில் இறங்கிக் குளித்தோம். படகுகளில் பயணஞ்செய்து மகிழ்ந்தோம். படகுகளில் பலகைகளுக்குப் பதிலாகக் கண்ணாடிஇளை பொருத்தியிருந்தார்கள். வண்ண வண்ண மீன்கள், நண்டுகள், ஆமைகள், கடற்பூக்கள், நட்சத்திர மீன்கள் எனப் பலவகை உயிரினங்கள் கடல் நீரில் நீந்தித் திரிவதைக் கண்டோம். உருவத்தில் பெருத்த ஆமை ஒன்றையும் கண்டு வியந்தோம். 40 வருடங்களாக இந்த ஆமை அங்கு வசிப்பதாக அறிந்து வியப்படைந்தோம்.

பயணங்கள் கல்வியில் ஒரு பகுதி என வாசித்திருந்தாலும் நேரில் அனுபவிக்கும் போது கிடைக்கும் சந்தோஷமும் புரிதலும் அலாதியானதுதான். தினம் தினம் புதிது புதிதாக விஷயங்களை நாம் அறிந்துகொள்வதால்தான் ஔவைப்பாட்டி கற்றது கைமண் அளவு என்று கூறியுள்ளார் போலும். வழமையாக விடுமுறைக்கு வரும் அண்ணரும் பிள்ளைகளும் இலங்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் எம்மைக் கூட்டிச்சென்று காட்டினாலும் இவ்வருட விடுமுறை நாட்கள் மிக ஆனந்தமாகக் கழிந்தது.

போதையில்லா பாதை செய்வோம்

மகான்
யாழ்ப்பாணம்.

சமூக, நீதி, நியாயக் கட்டமைப்புக்கள் சீர்குலையும் போது நாடுகளில் பலவிதமான பிறழ்வுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான கட்டமைப்புக்கள் சீர்குலைய, தற்குறித்தனம், சமூக மேலாதிக்கம் நீதியையும் அவற்றை நிர்வகிக்கும் சபைகளை அவமதித்தல், சுயகட்டுப்பாடின்மை போன்றன பெருங்காரணிகளாகவும் வறுமை, வெறுப்பு, கல்வியின்மை, குரோதம், தவறான உறவுகளும் உணர்வுகளும் காரணிகளாகின்றன. இங்கே இரண்டாவதாகக் குறிப்பிட்ட காரணிகள் சிறு குற்றங்களையும் நெறிப்பிறழ்வுகளையும் ஏற்படுத்தினாலும் முன்னர் கூறிய காரணிகள் ஏற்படுத்துகின்ற கொடுமைகளையும் தாக்கங்களையும் விடக் குறைவானதாகவே காணப்படுகின்றன. இளைஞர்கள் கட்டிளமைப் பருவத்தில் இருப்பவர்கள் உணர்வுத் தூண்டல்களுக்கு வயப்படக்கூடியவர்கள். கூர்மையடைந்த அவர்களது சக்தி உலகில் பல சாதனைகள் புரிந்திருக்கின்றன. அதனை நன்கு அறிந்திருக்கும் அதிகார மட்டத்தில் இருப்பவர்கள், அவர்களது உணர்வுகளை அது விடுபடும் உணர்வாயினும் விமோசனம் தரும் உணர்வெனினும் தூண்டிவிட்டுத் தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வர். அல்லது அவர்களது உணர்வுகளைத் தவறான வழிகளில் திருப்பிவிட்டுத் தாம் சுகம் காண்பதும் உண்டு.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்கட்டிளம் பருவத்தினரைக் காக்க மத நிறுவனங்களும், பாடசாலைகளும், சமூக மன்றங்களும் பெரும் கஷ்டமான பங்காற்ற வேண்டியது அவசியமாகின்றது. அவர்கள் ஏனோதானோ என செயற்படும் காலங்களில் சமூக விடுதலை பற்றிய தூரநோக்கும் நேரிய சிந்தனைகளும் இல்லாமல் செயற்படும் காலங்களில் இப்பருவத்தினர் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அத்துடன் ஒழுக்கக் கட்டுப்பாட்டு அமைப்புக்குள் வாழ்ந்த மக்கள் தலைமைக் கட்டமைப்புகள் தளர்ந்தாலும் சமூக நெறிபிறழ்வுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. கரைகளுக்கிடையே நீர் சீரான வேகத்துடன் பாய்ந்தால் அது ஆறாகும். அந்த நீரில் ஊர் அழகு பெறும். விவசாயம் பெருகும்.

பொருளாதாரம் வளம் காணும். அதே ஆறு கரைபுரண்டு ஓடினால் காட்டாறாகி வழியில் கண்டவற்றை எல்லாம் அடித்துப் பிரட்டி அழித்துத் துவம்சம் செய்துவிடும். அவ்வாறாகச் சமூகக் கட்டமைப்புகளையும் ஒழுக்கத்தையும் பாடசாலைகளும், மத நிறுவனங்களும் இரு கரைகளாக இருந்து காத்துவரின் பிறழ்வுகள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் இவ்விரு நிறுவனங்களும் இன்று விழாக்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் மட்டுமே முக்கியமளிக்கின்றன. தெளிந்த ஞானம் வழங்கத் தவறுகின்றன. அறிவு பெற்றிருக்கும் ஒருவனை எந்தத் தலைவராலும் உணர்ச்சிச் செயற்பாடுகளுக்குள் தூண்டிவிட முடியாது. இவற்றுக்கான காரணிகளை உணர்ந்து அவற்றிலிருந்து விடுபட முயலவேண்டுமேயொழிய அவை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

போதைப் பொருட்களை நாட்டுக்குள் வரவிட்டு அதில் லாபம் காண்போர்களும், அதனால் இளைஞர்களைக் கெடுத்து கவனத்தைத் திருப்பி, தமது எண்ணங்களைச் சுலபமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் தலைமைகளும் நிறைந்துவிட்ட இக்காலகட்டத்தில் கட்டிளமைப் பருவத்தினரைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது மிக அவசியம். கண்காணிப்பதும் அவசியம். மாணவனோ, மாணவியோ படிக்கப் போவதாகக் கூறி வீட்டை விட்டு வெளிச்செல்ல எந்த நேரத்திலும் அனுமதிக்கும் பெற்றோர், பிள்ளைகள் படிக்கும் இடத்திற்குப் போகின்றார்களா என்பதைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். பிள்ளைகள் மேல் கொண்டிருக்கும் அபரிதமான நம்பிக்கையாலேதான் அதிகாலை வேளைகளிலும் இரவு 8 - 9 மணிநேரம் வரையிலும் தமது பெண்பிள்ளைகளைக்கூட வீட்டைவிட்டு வெளியில் இருக்க யாழ்ப்பாணச் சமூகம் அனுமதிக்கிறது. நெறிபிறழ்ந்து வாழும் ஒரு சிறு எண்ணிக்கையான இளைஞர்களால், ஒழுங்காகப் படிக்கச் சென்றுவரும் பிள்ளைகளையும் கண்காணிக்க வேண்டி நேரிடுகின்றது. இச்சிறு கூட்டத்தினர் உருவாவதற்குக் கூட பெற்றோரின் பழக்கவழக்கங்களும், படிபடி என நச்சரிப்பதும் தமது உணர்வுகளைப் பங்கிட முடியாமல், தம்மோடொத்த தமக்கு ஆறுதல் தரக்கூடியவர்களென தம்மோடு இசைந்து நடக்கக்கூடியவர்களுடன் சேர்வதால் உண்டானவைகளே. தவறான வழிக்குத் திருப்பி விடப்பட்ட

இவர்கள் நாளடைவில் சமூக சீரழிவுகளில் ஈடுபடுகின்றனர். அவசரமாகப் பணம் சேர்க்க முயலும் பெற்றோர்களுக்கு ஆறுதலாக இருந்து பிள்ளைகளுடன் அளவளாவி மகிழ நேரம் ஒதுக்க முடியவில்லை. பிள்ளைகளை நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர்க்க முடியாது, தேடித் தினம் பறந்து பணம் தேடி வைப்பதால் பயன் ஏதுமில்லை. கொடூரப் பிள்ளைகளாலும் திருட்டு, கொலை, வன்முறைவாய்ப்பட்ட பிள்ளைகளாலும் அதைப் போக்கவென எண்ணி மன ஆறுதலுக்கு எனக் கூறி மதுபாவனைக்குள் வீழ்வதை விட்டு தமது பிள்ளைகளை ஒழுங்காகவும் வளர்த்து தாமும் ஒழுங்காக வாழ முயலவேண்டும்.

போதை என்றதும் மக்கள் பாவனையிலுள்ள போதை தரும் பானங்களோ பவுடர்களோதான் மனதில் தோன்றும். கேரோயின், கொக்ரேயின் அபின் கஞ்சா கசிப்பு சாராயம் கள் என்பன மட்டும் போதை தரவில்லை. மயக்கம் தரவில்லை. மேலும் பல பொருட்களும் காரணிகளும் போதை தருகின்றன. சாராயம் போதை தரும், தாய்ப்பாலும் போதை தரும். புளித்த கள் போதை தரும். புனித தேனும் போதை தரும். சிறந்த கவிதை - சீரிய இலக்கியமும் போதை தரும். கிரிக்கட், கால்ப்பந்து விளையாட்டுப் போதை தரும். ஆதலால் இவை இவைதான் போதைப் பொருட்கள் என வரையறையிட முடியாது. ஆனாலும் எவை எவை அறிவை மயக்கிப் புத்தியை மழுங்கடித்து மனம் போனவழி செல்லத் தூண்டுகின்றனவோ, அவை எல்லாம் போதைப் பொருட்களே. அழகிய அணங்குகளின் கட்டுடல் லாவண்யம், இதழ் விரித்த அவர்களின் புன்னகை, அரங்குநிறை ரசிகர்களின் பாராட்டும் போதைதான், சங்கீதம் போதை, அளவுகடந்த சந்தோசமும் போதைதான், அதனை தூண்டும் எண்ணங்களும் போதைதான். ஒருவகையில் பார்த்தால் ஓடியோடிப் பணம் சேர்த்துப் பாவனையின்றிப் பாதுகாத்து வைத்திருப்பதும் போதைதான்.

நாள் முழுவதும் உடல் வருத்தித் தொழில் புரியும் உழைப்பாளி மதிய உணவின் முன்னரும் பின்னரும் ஒரு இடைவெளியில் தேனீர் அருந்துகின்றான். இழந்துவிட்ட சக்தியைப் பெற்றுப் புத்துணர்வுடன் தொழில்புரிய வைக்கும் ஊக்கியாகவே கருதுகின்றான். ஆனால் குறிப்பிட்ட அந்த நேரம் வந்ததும் தேநீருக்காகக் காத்திருப்பதும் அதுதேடி அலைவதும் இரப்பதும்

ஒருவகை மயக்கம்தான். போதைதான். ஆனால் அவன் உடல் அசதி போக்கவும் புத்தூக்கம் தரும் எனவும் எண்ணி மதுபானைக்குப் பழக்கப்படுவதும் மது அருந்தியதால் உலகம் வெறுக்கத்தக்க வகையில் செயற்படுவதுமாக இருப்பது வெறுக்கத்தக்கதாகும்.

போதிய அறிவும் தெளிந்த புத்தியும் இல்லாத கட்டிளம் பருவத்து இளைஞர்கள் ஏன் யுவதிகளும்தான் திருட்டு தம் அடிப்பதுடன் ஆரம்பிக்கும் இப்பழக்கம் புகையிலை, சுருட்டு, கஞ்சா, அபின் என பிரகவித்து ஊசியில் போதை மருந்து நிரப்பி உடனடியாக இரத்தத்தில் கலக்கும் வகையில் ஏற்றிக்கொள்ளச் செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளது. ஏற்றப்பட்ட போதையின் வீரியம் குறைய மீண்டும் மீண்டும் தேடி அலைவதும் இதனை அடையப் பணம் தேவைப்படும் போது திருடுவதும், ஆட்கடத்தல்கள், கற்பழித்தல், கொள்ளை போன்ற திட்டமிட்டுச் செய்யும் சமூக விரோதச் செயல்களைத் தொழிலாகக் கொண்டியங்கும் சமூக விரோதக் கும்பல்களின் வலையில் சிக்கி மீளமுடியாத இளைஞர் யுவதிகளையும் காணக்கூடியதாக உள்ளது. பரிதாபத்திற்குரியதாகிறது. வேதனை மிகத் தருகிறது.

பெற்றோர் தங்களது பிள்ளைகள் மேல் கொண்டுள்ள அபரிதமான பிரியத்தால் அவர்கள் செய்கின்ற சிறுசிறு தவறுகளை மன்னிப்பது, மூடிமறைப்பது, நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகாமை, நல்ல நூல்களை வாசித்து அறிவு - தெளிவு பெறாமை தரங்கெட்ட சினிமா, நெடுந்தொடர்களில் காணும் சாகசங்களை உண்மை என நம்புவது, அவ்வாறே தாமும் செல்ல முயல்வது, விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் மது அருந்திவிட்டு வீடு வரும் அப்பா, பிள்ளைகளிடம் காசு கொடுத்து போதைப்பொருட்களை வாங்கிவர ஏவுதல் போன்றனவும் இவ்வாறான பழக்கவழக்கங்கள் கட்டிளமைப் பருவத்தினரிடையே வளர்வதற்கான சில காரணங் களாகும்.

எவனொருவன் தனது மனதைக் கட்டுப்படுத்தும் திறன் உடையவனோ அவனே ஏனையவர்களை வழிநடத்த முடியும். தன் வழி தேர்ந்து உணர்ந்து தெளிந்து முயன்று நல்வழி வாழ்ந்துகொண்டு ஏனையவர்களுக்கும் வழிகாட்டியாக வாழவேண்டும். போதைப்பாவனையை விட்டேனும் சுருக்கியேனும் மனம்போன வழி

செல்லாமல் ஆசைகளை அடக்கி முன்மாதிரியாக வாழ்ந்து காட்டல் அவசியம். பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்தே அனேக விடயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். ஆதனால் பெற்றோர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழப் பழகவேண்டும். சொல்லித்திருத்திவிட முயலாது பார்த்துப் பின்பற்றிப் பழகவைக்கக் கூடியவாறு பெற்றோரும் மற்றோரும் வாழ வேண்டும்.

விஞ்ஞான ஆய்வுகள் கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் மனித வாழ்வை மேம்படுத்தவும் இலகுபடுத்தவுமே விளைகின்றன. இருப்பினும் தொலைக்காட்சி, கணினி, முகப்புத்தகம், அலைபேசி என யாவும் இப்படி வாழக்கூடாது என மறை நியாயத்தைக் காட்டி நேர்ச் சிந்தனைகளை வளர்த்துவிடவே முயல்கின்றன. ஆயினும் போதிய அறிவும் விளக்கமும் அற்ற நிலையில் கட்டிளம் பருவத்து வாலிபர், வனிதையர் அவற்றைப் பிரயோகித்துப் பரீட்சித்துப் பார்க்க முயலும் வேளையில் அதனுள் அமிழ்ந்துவிடுவதுதான் பேதமை, பரிதாபம். உற்பத்தியாளர்களும் சந்தைப்படுத்துவோரும் தங்கள் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக பொய் விளம்பரங்களையும் உறுதி மொழிகளையும் பரப்ப அதனை நம்பி வாங்கி, பருகிப் பாழாகிப்போன பலரும் உண்டு.

மற்றவரை அடக்கி ஆளும் போதை முழு உலகையுமே ஆளவேண்டும் என்ற வெறி, நான் செய்வது, சொல்வது அனைத்தும் சரி, நீ அதற்கமைய வாழ் என இடுகின்ற கட்டளை அதிகாரம், பலவீனர்களை அடக்கி ஆளும் பலம் பொருந்தியோரின் எதேச்சதிகாரம், எனது மதம் மட்டுமே உண்மை என்ற மதவெறி, வளரத் துடிக்கும் நாடுகளுக்கும் மக்களுக்கும் உதவவென உள்நுளைந்து வளங்களைச் சுரண்டிச் செல்லும் குள்ளத்தனம் என்பனவும் போதைதான். இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு எழுவோம்! வெளிச்சத்துக்கு வருவோம்! நம்மை நாமே அறிந்து தெளிந்து போதையை ஒழிக்க ஒன்றிணைவோம்!

நல்லன எண்ணுவோம் நல்லவையே நிகழும்.

அகன்ற அழகிய கனடாவே - கனடாவே

செல்வி. யுதிதா அருளானந்தம்
கனடா.

கனடா (canada) வட அமெரிக்க கண்டத்தில் உள்ள உலகின் இரண்டாவது பெரிய நாடாக இருந்தபோதிலும் ஒப்பீட்டளவில் சிறிய மக்கள் தொகையைக் கொண்டதுடன் ஐக்கிய அமெரிக்காவின் அண்டை நாடாகவும் உள்ளது. வடக்கே ஆட்டிக் (Artic) பெருங்கடலும், கிழக்கே அட்லாண்டிக் (Atlantic) பெருங்கடலும், தெற்கே அமெரிக்காவும், மேற்கே பசுபிக் பெருங்கடலும் (Pacific) அலாஸ்கா மாநிலமும் எல்லைகளாக அமைந்திருக்கின்றன. ஒட்டாவா (ottawa) கனடாவின் தலைநகரம் ஆகும். கனடாவின் மிகப்பெரிய நகரமாக ரொறன்ரோ (Toronto) கருதப்படுகிறது. இரண்டாம் எலிசபெத் (Elezebath II) மகாராணி பெயரளவில் கனடாவின் அரசியாக விளங்குகின்றார். இருந்தபோதிலும் அதிகார பூர்வமான செயல்கள் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி நடைபெறும். ஆங்கிலத்துடன் பிரெஞ்சு மொழியும் ஆட்சி மொழிகளாகக் கருதப்படுகின்ற போதிலும் பிரெஞ்சு மொழிதான் முதன் மொழியாக உள்ளது. மார்க்கம் (Markham), மிஸ்சுஸ்ஏகிவா (Mississahva) ரொறொன்டோ, (Toronto) ஸ்காபுறோ, (Scarborovgh) பிராம்ரன் (Brampton) ஆஜாக்ஸ் (Ajax) ஆகிய 6 பிரதான இடங்களில்தான் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர். (Ontario) வில் மட்டும் 4.5 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப்படுகின்றது.

கனடாவின் புவியியல் பற்றி நோக்கும் போது இயற்கை வளங்களாக பரந்த உயர்ந்த மலைகள், காடுகள், பல்வேறு வகையான புல்வெளிகள், பனிமலைப் பிரதேசங்கள், ஆறுகள் ஏரிகள் என பார்வையாளர்களின் கண்களுக்கு குளிர்ச்சி தரும் வளங்கள்

எண்ணற்ற வகையில் காணக்கிடக்கின்றன. இங்கு முக்கிய பங்களிப்பாக காலநிலை விளங்குகிறது. நான்கு வெவ்வேறு பருவகால நிலைகளைக் கொண்டிருக்கிறது. இளவேனில் (*Spring*) காலம், கோடை (*Summer*) காலம், இலையுதிர் (*Autumn*) காலம், குளிர் (*Winter*) காலம் என்பனவாகும். இவற்றுள் குளிர்காலமே மிக நீண்ட காலமாகக் கருதப்படுகின்றது. இந்தக் காலத்தில் மிகக் குறைந்த வெப்பநிலையாக -30^oC இலிருந்து -40^o வரை குறையும். கடுங்குளிரைத் தாங்கமாட்டாத நம் நாட்டவர்களில் சிலர் தமது சொந்த நாட்டுக்கு விடுமுறைகளில் சென்று உல்லாசமாகக் கழிப்பர். பெற்றவர்களை விட்டுப் பிரிய முடியாதவர்கள் தங்கள் பெற்றோரையும் அழைத்து வந்து இங்கு வைத்துப் பராமரிக்கின்றனர். வரண்ட வலயப் பகுதிகளில், பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ள இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளில் பிறந்து வளர்ந்து அச் சூழலுக்கேற்ப பழக்கப்பட்டுவிட்ட பெற்றோர்கள்தாம் கடும் குளிரில் மிகவும் கஸ்டப்படுகின்றனர். மிகப்பெரிய பத்து மாகாணங்களைக் கொண்ட இந்நாடு ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியே தலைநகரைக் கொண்டுள்ளது. கனடா என்றதும் எவர்க்கும் சட்டென ஞாபகத்துக்கு வருவது நாயகாரா நீர் வீழ்ச்சி ஆகும்.

நயாகரா நீர்வீழ்ச்சி (*Naigara Waterfalls*)

இயற்கை எந்தளவுக்கு விந்தையானது என்பதற்கு நாயகாராவே சாட்சி. பொதுவாக நீர்வீழ்ச்சி என்றதும் மலைமுகடுகளிலிருந்து நீர் குதித்து ஓடிவரும் காட்சியே நினைவில் வரும். நாயகாரா அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் எல்லையாக உள்ள இந்த நீர்வீழ்ச்சி குதிரை லாடம் போன்று பிரிந்து வளைந்து ஒன்றிணையும் சமதரையிலிருந்து நீர்ப்பரப்புகள் கீழே பாய்வதால் ஏற்படுகின்றது. நாயகாரா பற்றி அறிந்திருந்தாலும்கூட நேரில் காணும்

போது ஏற்படும் பரவசம் வார்த்தைகளுள் அடங்காது. உணரவே முடியும். அதிலும் இரவு அலங்கார வெளிச்சத்தில் காணும்போது..... கனடாவினதும் அமெரிக்காவினதும் எல்லையில், 56km நீளமும் 792(m) அகலமும் 55 m உயரத்தில் இருந்து பாய்ந்து வரும்போது எழும் நீர்த்துளிகளில் வெளிச்சம் பட்டுத் தெறித்து வானவில் தோன்றும். இவ்வாறு பலவானவில்கள் ஒரே நேரத்தில் காணப்படுவதால் அந்த இடம் சொர்க்கபுரியாகத் தோன்றும். நாங்கள் அறிந்திருக்கும் எமது நாட்டு லக்ஸ்சபான (Luxapana) நீர்வீழ்ச்சி 100 மெகா (Mega Walts) வால்ட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, பரவிப் பாயும் நாயகாரா நீர்வீழ்ச்சியானது 2525 (Mega Walts) மெகா வால்ட்ஸ் மின் சக்தியை உற்பத்தி ஆக்குகின்றது. ஒன்ரோறியா மாகாணத்தில் விழுகின்ற இவ் அருவியால் அந்நகரமானது தெறித்து விழும் நீர்ச்சாரலுடன் கூடிய புகை மண்டலமாக குளிர்ந்து மெய்சிலிர்க்க வைக்கும். சில்லிடும் காற்று, பனிப்புகை போன்று மெல்லிய நீர்ப்புகைமூட்டம். நீண்டு பரந்து கிடக்கும் புல்வெளி, குதிரைலாட வடிவில் விழும் அருவியின் தடுப்புச் சுவருக்கு அருகில் நின்று பார்த்தாலும் அதன் ஆழத்தை அளவிடமுடியாது. அனுமானிக்க மூளையால் முடியாது. இதயம் மகிழ்ச்சியில் துள்ளும். நாயகாராப் பகுதியில் கனடாவையும் அமெரிக்காவையும் இணைக்கும் வானவில் பாலமும் அமைந்துள்ளது.

சி.என் கோபுரம் (CN Tower)

கனடாவின் மிகப்பெரிய மாகாணமான ஒன்ரோறியாவில் ரொறென்ரோ ஏரிக்கரையில் அமைந்துள்ள 1815 அடி உயரமான இக்கோபுரம் 1796 இல் கட்டி முடிக்கப்பெற்று உலகில் முதலாவது மிகப்பெரிய கோபுரமாக 2010 வரை கருதப்பட்டது. (பின்னர் துபாய் நாட்டில் உள்ள 2016 அடி உயரமான (Burj Khalifa) புர்ஜ்கலிபா கோபுரமே உலகின் மிக உயரமான கோபுரமாகக் கருதப்படுகின்றது)

இக்கோபுரத்தின் கலசத்தில் 1815 அடி உயரத்தில் உள்ள தளத்தில் ஒரு பகுதி கண்ணாடி இழைகளால் அமைந்துள்ளது. இத்தளத்தில் நின்று பார்த்தால் ரொறென்டோவின் பெரும்பகுதிக் கட்டிட வளத்தையும் லேக்ரொறென்டோவையும் காணமுடியும். இக்கண்ணாடித் தளத்தில் ஏறிப்பார்க்க அஞ்சுபவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் உங்களுடன் 50 நீர் யானைகளையும் சுமக்கக்கூடிய வலு இக்கண்ணாடித் தளத்துக்கு உண்டெனவும் குறித்து வைத்துள்ளார்கள். இக்கோபுரத்தின் உச்சிக்குச் சென்று பார்த்தால் இம்மாகாணத்தின் பெரும்பாலும் எல்லா இடங்களையும் பார்க்க முடியும். சிறந்த உணவகங்களும், பொழுதுபோக்கு நிலையங்களும், இங்கு அமைந்துள்ளதால், அநேக உல்லாசப் பிரயாணிகள் இங்கு உணவருந்தி பொழுதைக் களித்துச் செல்வர். உலக தினங்கள் ஒவ்வொன்றையும் குறிக்கும் வகையில் இங்கு அந்தந்தத் தினங்களில் குறிப்பிட்ட வர்ணத்தில் விளக்குகள் எரியும். உலக புற்றுநோய் தினமான பெப்ரவரி 4 இல் செம்மஞ்சள், உலக எயிட்ஸ் தினமான டிசெம்பர் 1 இல் சிவப்பு நிற விளக்குகள் எரிய விடுவதால் மக்களின் கவன ஈர்ப்பையும், அவ்வகை நோயணுகாமல் தடுப்பதற்கான தூண்டல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்து கின்றன.

கனடாவின் ரொக்கி மலைத்தொடர் (*Canadian Rocky Mountains*)

இம்மலைத் தொடரானது கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா (*British Columbia*) என்னும் இடத்தில் அமைந்துள்ளது.. இத்தொடரானது அமெரிக்கா வரை நீண்டு செல்கின்றது.. இப் பிரமாண்டமான மலைத் தொடர் சுண்ணாம்பு மற்றும் *Shale* எனும் அடுக்குப் பாறைகளால் ஆனது. காண்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகைக் கொண்டது.

பான்ப்f தேசிய பூங்கா (*Banff National Park*)

ஆல்பெர்ட்டா (*Alberta*) மாகாணத்தில் மிக அழகான இயற்கை காட்சிகளுடன் இத்தேசிய பூங்கா அமைந்துள்ளது. நீர் நிரம்பிய பச்சை ஏரிகள், பனிமூடிய சிகரங்கள் மற்றும் பனிப்பாறைகள் என மனதைக் கவரும் மையங்கள் இப்பூங்காவில் அமைந்துள்ளன. பார்வையாளர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் பனிச்சறுக்கு விளையாட்டு பான்வ் ஏரியிலுள்ள *Louise* லூயிஸ் பிரதேசத்தில் அமைந்துள்ளது. குழந்தைகளைக் குதூகலப் படுத்தவும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரவுமென விளையாட்டுத் திடல்கள், கோடைகாலப் படகோட்டப் போட்டிகள், தனியாகவும் 5 - 6 பேர் சேர்ந்து செலுத்திச் செல்லக் கூடிய உந்துருளிகள், திரும்பிப் பார்க்கும் பக்கமெல்லாம் விரைவுணவுச் சாலைகள், குளிர்பான குளிர்களி பாலர்கள் காணப்பட்டாலும் பச்சைப் பசேலென விரிந்து கிடக்கும் புல்வெளிகளும் அங்கே நீண்ட கழுத்துக்களை ஆட்டிக் கொண்டும் மக்களைக் கண்டும் மிரளாமலும் ஆடி அசைந்து செல்லும் வாத்துக் கூட்டமும் மனதைக் கொள்ளை கொள்ளும். நேரம் போவது தெரியாமல் அங்கு நின்று விளையாடும் சுட்டிச் சிறுவர்களின் குறும்புத் தனங்களும் மனதைக் கவரும்.

அந்நாட்டவர்களுக்கு சவாலாக அல்லது ஈடுகொடுக்கும் வகையில் நாடெங்கிலும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளையும் உணவு விடுதிகளையும் சுப்பர் மாக்கெற்றுக்களையும் தமிழர்கள் நடாத்தி வருகின்றனர். வானொலி, தொலைக்காட்சி ஒளிபரப்பு வலையமைப்பு மையங்களுடன் புதினத்தாள்களையும், வார, மாத சஞ்சிகைகளையும் வெளியிட்டும் வருகின்றனர். அங்கே குடியுரிமையுடன் வாழும் இலக்கியவாதி நம்நாட்டுப் பகுத்தீவுக் கோவிந்தன் அவர்கள் காலத்துக்குக் காலம் நம்நாட்டிற்கு வந்து நூல்களைப் பதிப்பித்து இலவசமாக வழங்கி மாபெரும் இலக்கியப் பணி செய்து வருகிறார். கலாசார சீருடைகள், நவநாகரீக உடைகள்,

அந்த நாட்டவர் விரும்பி அணியும், தேவைப்படும் உடைகளை விற்பனை செய்து வரும் பெரும் பெரும் துணிக்கடைகளும் காணப்படுகின்றன. அவ்வாறான மிகப் பிரமாண்டமான துணிக்கடை ஒன்று எமது சித்தப்பா நாகநாதன் "**அபினா ரெக்ஸ்**" என்ற பெயரில் நடாத்தி வருகிறார். தொழில்நுட்ப வியலாளரான அவர் நடாத்தி வரும் இந்நிறுவனம் அங்குள்ள மக்களின் ஆடைத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்றது.

அதேபோன்று மிகப்பிரமாண்டமான கட்டிட வேலைகள், சேவைகள் வழங்கும் நிறுவனம் **மிக்வெல் பப்ரிக்கேசன்** (*Fabrication*) என்ற பெயரில் இன்னொரு சித்தப்பா தங்கராசா நடாத்தி வருகின்றார். இலங்கையிலிருந்து புகலிடம்கோரி இங்கு வந்துள்ள வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் உள்ள இளைஞர்கள் பலர் இங்கு வேலை செய்கிறார்கள். பயனடைகிறார்கள். இவ்வாறு எந்த நாட்டவரென்ற பேதமுமின்றி ஆர்வமும், முயற்சியும், வித்துவத்தனமும் உள்ளவர் எவரும் இந்நாட்டில் உழைத்து முன்னேற முடியும் என்பதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாகும்.

தமிழ் மாணவர்கள் இல்லாத கல்லூரிகளே இல்லை என்னும் அளவிற்கு இங்கு எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் மாணவர்கள் இணைந்து கற்று வருகின்றார்கள். உயர் புள்ளிகள் பெற்றுச் சாதனை புரிபவர்களும் அவர்கள்தான். பாரம்பரியம், கலாசாரம் பண்டிகைகள் கொண்டாட்டங்கள் யாவும் எமது மரபு வழிவந்த விழுமியங்கள் கலந்தனவாக யாழ்ப்பாணத்துக் கந்தபுராணக் கலாசாரத்தை ஒத்ததாக இருப்பதால் வேறு நாடொன்றில் வாழ்வது போன்ற எண்ணம் ஒருபோதுமே எழுவதில்லை.

அறநெறி வாழ்வும், ஆன்மீகப் பணிகளும் கடவுள் வழிபாடுகளும் தமிழர் வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை. அந்த

வகையில் தமிழர் வாழுமிடங்களிலெல்லாம் கோவில்கள் அமைத்து கலை கலாசாரம் பேணி ஆன்மீகம் வளர்த்து வருவது சிறப்பம்சமாகும். ஆரம்ப காலங்களில் வட இந்தியர்களின் சக்தி வழிபாட்டு முறையே இங்கு பின்பற்றப்பட்டு வந்த போதிலும் இலங்கைத் தமிழர் ஒன்று கூடும் இடமாக முற்று முழுவதும் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய ஸ்ரீ சுவாமி நாராயணன் மந்திர் என்ற ஆலயம் மொன்றியாவில் அமைந்திருக்கின்றது. 1984ம் ஆண்டு முதன் முதலாக இந்துக் கோவில் ரொறென்ரோவின் றிச்மண்ட்கில் (செல்வமலை)யில் ஸ்தாபிக்கப்பட்டது. செல்வமலை விநாயகர் ஆலயம், துர்க்கேஸ்வரம் துர்க்கை அம்மன் ஆலயம் முத்து விநாயகர் ஆலயம் வரசித்தி விநாயகர் ஆலயம் மௌலீஸ்வரன் ஆலயம் எனப் பல கோவில்கள் பின் நாட்களில் அமைத்து எமது பாரம்பரியக் கலைகளுடன் சமயப் பண்பாடுகள், நடனம் நாட்டியம் போன்ற கலைகளை வளர்த்தும் போட்டிப் பரீட்சைகள் நடாத்தியும் எமது தொன்மையான சமய விழுமியங்கள் வளர்த்து வரும் இடங்களாகத் திகழ்கின்றன.

பரந்து விரிந்து பெரும் சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ள கனடா நாட்டில் வான் தரை வழிப் பயணங்களுடன் கடல் வழிப் பயணங்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருப்பதால் விவசாயமும் பண்ணைகளும் மிகப்பெரிய அளவில் முன் எடுக்கப்பட்டு வருவதால் உற்பத்திகளை ஏற்றி இறக்கவும் மக்களின் உல்லாசப் போக்குவரத்துக்குமென பல்வேறு துறைமுகங்கள் கனடாவின் கரையோரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பெரியதும் சிறியதுமாக 700 துறைமுகங்கள் காணப்படுவதாக அறியமுடிகின்றது. அதிலும் 70% மான துறைமுகங்கள் அட்லாண்டிக் கடல் ஓரங்களில் நிறுவப்பட்டுள்ளன. வன்கூவர் என்பது மிகவும் பெரிய துறைமுகமாகும். பசுபிக் நாடுகளுக்கான தொடர்புகள் போக்குவரத்து என்பன இத்துறைமுகமூடாகவே நடைபெறுகின்றது.

போட்ஒவ்பிரின்ஸ் (*Port of Prince*)என்னும் துறைமுகம் வன்கூவருக்கு வடக்கே அமைந்து வடஅமெரிக்கா ஆசிய நாடுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. இவற்றுடன் *Portsof Montrial, Ports of Halifese* மத்தியகிழக்கு நாடுகளுக்கான துறைமுகங் களாகவும் செயல்படுகின்றன.

சர்வதேச தொடர்புகளுக்காகவும், உள்ளூர் வான்வழித் தொடர்புகளுக்காகவும் இந்த நாட்டில் மிகப்பெரும் எண்ணிக்கையான விமான நிலையங்கள் காணப்பட்டாலும் அவற்றுள் 20 வீதமான நிலையங்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும். மூடுபனிக்கட்டிகள் விழுந்து தடைப்படாவிட்டால் 24 மணி நேரமும் உயிரோட்டத்துடன் இயங்கும். இவற்றுள் *Port of Pearson* சர்வதேச விமான நிலையம், வன்கூவர் சர்வதேச விமான நிலையம், கல்கறி சர்வதேச விமான நிலையம், மொன்றியல் *Piere Ellio Trudeau* சர்வதேச விமான நிலையங்கள் எப்போதும் இயங்கியபடியே இருக்கும். இவற்றுடன் கனடா St John Gander, Halifax Monton, Fredericton, Quebec, Montrial, Torronto, Ottawa, Ninning Pe Gallery, Edmonton + Vancouver என்பன சர்வதேச போக்குவரத்துப் பணியில் ஈடுபடுகின்றன. இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தைக் கண்டு ஆச்சரியரியப்பட்ட எமக்கு, லண்டனிலும் மலேசியா சிங்கப்பூரிலும் நாம் கண்டு பிரமித்த விமான நிலையங்களை விடவும் பிரமிப்பும் மலைப்பும் உண்டாக்கும் வகையில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்த நாடொன்றில் வாழ்வது மனதுக்குச் சந்தோஷம் தரும் விடயமாகும். அத்துடன் இந்நாட்டு மக்களின் விருந்தோம்பல், இணைக்கப்பாடு, அன்பு, சேர்ந்து வாழ்வது போன்ற உயர் பண்புகளும் மதிக்கப்பட வேண்டியவையும் பின்பற்றப்பட வேண்டியவையுமாகும்.

சில பட்டறிவுகள் – படிப்பறிவுகளுக்கானவை

தொகுப்பு
கனகன்

அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவார்.
அடாது செய்பவர் படாது படுவார்.
அமாவாசைச் சோறு என்றைக்கும் வராது.
அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி.
அலைமோதும் போது தலை முழுகு,
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
அழுதபிள்ளை பால் குடிக்கும்.
அழுதாலும் பிள்ளை அவள்தானே பெறவேண்டும்.
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
ஆசை வெட்கம் அறியாது.
ஆபத்துக்குப் பாவமில்லை.
ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
ஆழமறியாமல் காலை விடாதே.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
இக்கரைக்கு அக்கரை பச்சை.
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
இனம் இனத்தோடு சேரும்.
இல்லை என்றிருப்பின் எப்போதும் இல்லை
உள்ளங்கை நெல்லிக்காய் போல.
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
ஊருக்கடி கண்ணே உனக்கல்ல.

ஊரோடின் ஒத்தோடு ஒருவனோடின் கேட்டோடு.
எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்.
எரிகிற கொள்ளியில் எண்ணை விட்டாற் போல்.
எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடாதே.
எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.
ஏற்றம் இருந்தால் இறக்கம் இருக்கும்.
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
ஒருவனைப் பற்றி ஓரகத்திரு.
ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஓதுவது தேவாரம் உடைப்பது சிவன் கோவில்.
ஓடுபவனைக் கண்டால் துரத்துபவனுக்குச் சுலபம்.
ஔவை சொல் அமிழ்தம்.
கடுகு போன இடம் ஆராய்வான் பூசனிக்காய் போனது அறியார்.
கடைத்தேங்காய் எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தது போல
கல்லுளி மங்கனுக்கு காடு மலையெல்லாம் தவிடுபொடி.
கல்வி கரையில கற்பவர் நாள் சில.
கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
கழுதை அறியுமா கற்பூர வாசனை.
காலத்திற்கு ஏற்ப கோலம் இடவேண்டும்.
காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.
கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
குறைகுடம் தளம்பும். நிறைகுடம் தளம்பாது.
குரைக்கின்ற நாய் கடிக்காது.
குப்பையில் போட்டாலும் குன்றுமணி மங்காது.
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.
சக்கரை என்ற சொல் தித்திக்குமா?
சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.
சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்.
தானம் கொடுத்த மாட்டின் பல்லை எண்ணிப் பார்க்காதே.
தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்.
தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
துள்ளுற மாடு பொதி சுமக்கும்.
தை பிறந்தால் வழி பிறக்கும்.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
பணம் பாதாளம் வரை பாயும்.
பதறிய காரியம் சிதறிப் போகும்.
பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி.
பேராசை பெருநட்டம்.
புத்திமான் பலவான்.
புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு.
பொறுத்தார் பூமியாள்வார்.
போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து.
மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினை.
மாரியல்லது காரியமல்ல.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசை கொள்ளலாகாது,
வெழுத்ததெல்லாம் பாலாகுமா?
வெள்ளம் வருமுன்னே அணைகட்டிவிடு.
வெறுங்கை முழமிடுமா?
வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம்.
வேலியே பயிரை மேய்ந்தால் விளைச்சல் எப்படி வரும்.

நாமடந்தை நிறைபணி விழா மலர்
சிந்தனைக் கருவூலம்

மகாவித்துவான், சித்தாந்த பண்டிதர் அருட்கலைமாமணி பேராசிரியர், டாக்டர் கனகசபாபதி – நாகேஸ்வரன், ph.d மொழித்துறை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

"பாடைபோகினும் ஏடது கைவிடேல்" என்பது தமிழ் முதுமொழி. இன்றைய விஞ்ஞான யுகத்தில் புதிய புதிய மறுமலர்ச்சிக் கண்டுபிடிப்புகள் தினந்தினம் நிகழ்ந்தவண்ணமேயுள்ளன. புதிய புதிய அக்கறைகளும், பணிகளும் மிக வேகமாகவே நிகழ்ந்த வண்ணமுள்ளன. வளரத்துடிக்கும் - வாழத்துடிக்கும் - முன்னேறத் துடிக்கும் ஒரு சமுதாயம் அதன் அறிவு – சிந்தனை – மனப்பாங்கு – முயற்சி என்பவற்றிலே அதீத கவனஞ் செலுத்துவது போற்றத்தக்கது. இத்தகு கொள்கையுடன், இலக்கியம், கல்வி, பண்பாடு, சமயம், மறுமலர்ச்சியென்னும் தடத்தில் பற்பல கருமங்களை ஆற்றிவரும் கந்தையா கனகம்மா நிதியத்து வள்ளண்மையாளர்களின் பன்முகப் பணிகள் முன்னெடுப்புகள் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

அண்மையில் 2015 நவம்பர் மாதம் இந்நிதியம் வெளியிட்டுள்ள **நாமடந்தை** எனும் நிறைபணி விழாமலர் எமது வாசிப்புக்குக் கிடைத்தது. அம்மலரை நிறைவாகப் படித்ததன் பயனாக இக்கட்டுரை மலர்ந்தது. நாவற்குழி மகாவித்தியாலயத்திலே ஏறக்குறைய முப்பத்தாறு (36) ஆண்டுகள் சேவை புரிந்தும் - அதிபராகப் பணியாற்றியுமுள்ள திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களது பணிகளை விதந்து பாராட்டும் மலராக வெளிவந்துள்ளது. பாடசாலை, கல்வி, அபிவிருத்தி பழைய மாணவர் சாதனைகள், செயற்றிட்டங்கள், விழாக்கள், அறிவுப்பரம்பல் ஆகிய அம்சங்களை விவரிப்பதாயமையும் பல கட்டுரைகளைக் கொண்டுள்ள **நாமடந்தையில்** சிந்தனைக்கு விருந்தளிக்கும்

வகையிலே நல்ல பல கல்விசார், சைவசமயஞ்சார், தலைமைத் துவம்சார் கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டுச் சுட்டத்தக்கது.

பல்கலைக்கழக நூலகர் பேராசிரியர்கள், பீடாதிபதி, சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள் எனப் பல திறப்பட்டவர்களினதும் நல்ல பல ஆக்கங்களைத் தாங்கி மலர்ந்துள்ளது **நாமடந்தை** நிறைபணி மலர்.

கந்தையா கனகம்மா நிதியத்தின் நிதிவள்ளண்மையுடன் திரு.க.மயில்வாகனம் அவர்களை நூலாசிரியராகக் கொண்டு மலர்ந்துள்ளது இச் சஞ்சிகை. "தூய சிந்தனையாளர்களுக்கு, உலகம் போற்றும் சான்றோர்களுக்குக்கூட சொந்தப் பிரதேசத்தில் அவ்வளவாக மதிப்பிருந்ததில்லை என நிதியத்தின் காப்பாளர் திரு. க. மயில்வாகனம் அவர்கள் குறிப்பிடுவது முற்றிலும் உண்மையான கூற்றாகும். இவர் "மழலைகளை வளப்படுத்தும் முன்பள்ளிகளில் வளப்படுத்த வேண்டிய பகுதிகள் - ஒரு பார்வை" எனும் விமர்சனம்சார் கட்டுரையில் முன்பள்ளிகளின் ஈழத்து வரலாற்றினை பதிவு செய்வதுடன் சவால்களையும் தீர்வுகளையும் கூறுதல் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது

அதிபர் வசந்தாதேவி நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு ஆற்றிய சேவைகள் நாமடந்தையிலே கிலாகிக்கப்பட்டுள்ளன. யான் இம் மலரிலே முழுவதையும் படித்துத் தெளிந்ததோர் கருத்தும் இம்மலரிலேயே இடம் பெற்றுள்ளது. **தெரிந்து செய்வது அறிவு. தெளிந்து செய்வது ஞானம்** என்பதே அது. இக்கருத்தியல் ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கே. ஆர். டேவிட் அவர்களின் "பாதச்சுவடுகள் ஒரு வரலாற்றுப் பார்வை" எனும் கட்டுரையின் ஊடும் அறிந்து கொள்ளலாம்.

"..... மனப்பாங்கு கொண்ட ஒரு பல்கலைக்கழக மாணவனைத் தற்போது எம்மால் தரிசிக்க முடியுமா?" என்ற ஒரு வினாவைத் தொடுத்துச் சிந்தனையைக் கிளர்த்தியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதம நூலகர் திருமதி. அ. ஸ்ரீ காந்தலஷ்மி. தமிழர்கள் ஒவ்வொருவரும் இக்கட்டுரையை முழுமையாகவே படித்துப் பார்க்க வேண்டும். "முரண்களுக்குள் தொலையும் முழுமை – 02 (ஈழத்தமிழ்ச் சமுதாயத்தின் கல்விச் செயற்பாடுகள் எதிர் கொள்ளும் சவால்கள்) (பக் 9 – 21) என்பது கட்டுரைத் தலைப்பு இவ்வாக்கத்தினை ஒவ்வொருவரும் அறியவேண்டும் நடைமுறையும் சமூகமாக்கலும் எதிர்கொள்ளும் இடைவெளிகள், புரியாத பக்கங்கள் இதில் பதிவாகியுள்ளன. பேராசிரியர் மா. சின்னத்தம்பி வகுப்பறைகளில் ஆசிரியர்கள் ஏன் தோல்வி அடைகின்றனர் முதல்நிலை ஆற்றல் பற்றிய விசாரணை" என்று நல்லதோர் கட்டுரையை எழுதியுள்ளனர். ஆசிரியத் தொழில்புரியும் அனைவரும் ஒரு தடவை இக்கட்டுரையை வாசித்தால் பல முன்னேற்றங்கள் உண்டாகும். கிழக்குப் பல்கலைக்கழக அரசறிவியற்றுறை முதுநிலைவிரிவுரையாளர் கலாநிதி த. கிருஷ்ண மோகன் இலங்கையில் உள்ளூராட்சி முறைமை என்ற கட்டுரையை எழுதியுள்ளார். அரசியல் ரீதியான கருத்துக்களைக் கொண்ட அருமையான கட்டுரை சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர், டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அருணகிரிநாதரின் ஞானத் தமிழ் என்ற கட்டுரையை எழுதியுள்ளார். (பக் 28-34)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி, "தலைமைத்துவம்" எனும் தலைப்பில் (பக்35 – 39) கட்டுரை எழுதி மலரைத் தகுதிப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியற்துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எஸ். உதயகுமார், "பட்டப்படிப்புக் காலத்தினுள் கலைப்பட்டதாரிகள் நிறைவுசெய்யக்கூடிய கற்றைநெறிகள் ஓர்பார்வை" என்ற தலைப்பில்

பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு வழிகாட்டும் முறையில் விவரணமானதோர் கட்டுரையை எழுதியுள்ளனர். (பக் 40 – 44) கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன் திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள் (பக் 45 – 48) என்னும் ஆன்மீகக் கட்டுரையை **நாமடந்தைக்கு** வழங்கியுள்ளார். இது ஆன்மீக அறிவியலைப் பறைசாற்றுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை விரிவுரையாளர் மகாலிங்கம் சத்தியகுமார் "மறைகலைத் திட்டத்தின் கவனத்தை வேண்டி நிற்கும் கட்டிளமைப்பருவம்" (பக் 49 – 57) எனும் விடயம் பற்றிக் கட்டுரை வழங்கியுள்ளார். இதனூடு இளையோர் பற்றிய புரிதல்களின் மறுபார்வை பதிவாகின்றது.

ஆங்கிலமொழியில் The steering wheel of a school is the principal என்னும் விடயம் பற்றி Miss. N. Yasothini ஆசிரியை கட்டுரை எழுதியுள்ளார். (பக் 59 – 61) "நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும் என்னும் சமயக் கட்டுரையைத் தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையத் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி திரு.க. ஈஸ்வரன் (பக் 62 – 65) எழுதியுள்ளார். உளவியல், கல்வி உளவியல் என்பன பற்றி நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியை திருமதி.கலைவாணி அண்ணாமலை "ஆசிரிய வாண்மை யாற்றுகைக்கு வளம் சேர்க்கும் உளவியல் ஒரு பார்வை" (பக்66-69) என்று கட்டுரை வரைந்துள்ளார். "கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியில் அதிபரின் வகிபாகம்" என்ற வியடத்தில் நாவற்குழி ம.வி ஆசிரியர் திருமதி லவநிசா டேகீஸ்வரா (பக் 70-71) கட்டுரை எழுதியுள்ளார். இவை உளவியல், முகாமை பற்றிய தகுதிவாய்ந்த படைப்புகளாக நூலை அரண் செய்கின்றன. "வழிகாட்டி" எனும் சிறு கதையை நாவற்குழி மகா வித்தியாலய பழைய மாணவி செல்வி சோபனா ஜெயசந்திரன் எழுதியுள்ளார். இளந்தலைமுறையின் முகிழ்ப்பும் புதிய ஆக்ககர்த்தா ஒருவரின்

யதார்த்த பதிவும் புரியக்கூடிய படைப்பாக உணரமுடிகின்றது. "ஒழுக்காற்றுக்குமுவும் அதிபரின்வகிபாகமும் என்ற விடயத்தில் திரு.தி.மதிபரன் (ஆசிரியர், நாவற்குழி மகாவித்தியாலயம்) கட்டுரை எழுதியுள்ளார். "அதிபர் நடிபங்கும் நடைமுறைச் செல்நெறியும் ஒரு யதார்த்த நோக்கு" என்ற தலைப்பில் நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர் திரு. சு. சுதர்சன் கட்டுரை படைத்துள்ளார். இவ்விரு கட்டுரைகளும் தலைமையின் பல்பரிணாமத் திறன்களை உற்றுநோக்கி அவற்றில் குறிப்பிட்டு சுட்டியுணர்த்தும் கட்டுரைகளாக இனம் காணலாம்.

ஒரு பெண்மணியின் - கல்விசார் அதிபரின் கண்ணியமிக்க சேவைகளை மதித்தும், மதிப்பிட்டும் சமூக நெறி நின்று கண்டும், விண்டுரைத்தும் - விளம்பியும் பெருமிதமாக நாமடந்தையெனும் மலரை வெளியிட்ட அனைத்து முயற்சியாளர்களுக்கும் கல்வியுலகும் தமிழ்கூறு நல்லுலகும் தென்மராட்சிச் சமுதாயமும் நன்றி கூறவேண்டும் என்பது பெருங்கடமையாகும். நல்லதோர் அறிவுக்களஞ்சியம் **நாமடந்தை**. கந்தையா கனகம்மா நிதியத்தின் பணிகள் தொடர்க.

முற்றும்.

2015 ஆம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்ற மாணவர்கள்

அரச பொது தேர்வுகளான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வு, கல்விப் பொது சாதாரணதரம் / உயர்தரம் தேர்வுகளில் எமது பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கடந்த எட்டு வருடங்களாக ஊக்குவிப்பு நிதியும் கௌரவமும் வழங்கி வருகிறோம். நாம் வழங்கும் வளங்கள் இவர்களது கற்றல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற சீரிய சிந்தனையில் 2014ம் ஆண்டிலிருந்து ஆண்டு 5 புலமைப்பரிசில் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கும் ஒவ்வொரு வருடமும் ஆண்டு ஒன்று புதுமுக வகுப்பில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கும் வங்கிக் கணக்குகள் ஆரம்பித்து, பணம் வைப்புச் செய்து வருகிறோம். நல்லுள்ளம் கொண்ட நண்பர்களையும், கல்வி ஊக்குவிப்புக்கு உதவ முன்வரும் அறக்கொடையாளிகளையும் இணைத்து இவர்களது உயர் கல்விக்காக இன்றிலிருந்தே சேமிக்கத் தூண்டுவதுடன், இவ்வாறான ஊக்குவிப்புப் பெறுகின்ற மாணவர்கள் முதல்வருட இறுதியில் அதிகூடிய தொகை சேமித்து வைத்திருப்பவர் களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கும் பரிசில்கள் வழங்குவதால், தங்கள் தங்கள் உயர்கல்வித் தேவைகளுக்காக தாங்கள் தாங்களே சேமித்துப் பழகும் குணவியல்பையும் இவர்களிடம் வளர்த்து வருகின்றோம். அந்தவகையில் இந்த வருடம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் விபரமும், கணக்கு இலக்கமும் தருகிறோம். நாளாந்த செலவோடு செலவாக சிறுதொகை பணத்தை இவர் களுக்காக அன்புடன் வழங்குங்கள். துளித்துளியாகச் சேரட்டும். பெருமழையாகவும் பெய்யட்டும். நாடும் வீடும் செழிக்கட்டும்.

2016ம் ஆண்டு ஆண்டு ஒன்றில் இணைந்து கொண்ட இப்பிரதேச மாணவர்களுக்கு கைதடி மக்கள் வங்கிக் கிளையுடன் ஆரம்பிக்கப்பட்ட கணக்கு விபரங்கள்

(நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்கள்)

01	802	செல்வி. கேனுஜா பிறேமபவன்	110-2-001-0-0063550
02	803	செல்வி. கம்சிகா நாகேஸ்வரன்	110-2-001-2-0063549
03	804	செல்வன். அபிஷேகன் பாஸ்கரன்	110-2-001-4-0063548
04	805	செல்வன். தேனுசன் சிவனேஸ்வரன்	110-2-001-6-0063547
05	806	செல்வன். தனுசன் ஹேமதாஸ்	110-2-001-8-0063546
06	807	செல்வி. துசிக்கா ஜெயகுமார்	110-2-001-0-0063545
07	808	செல்வி. நதீபா பார்த்தீபன்	110-2-001-3-0063544
08	809	செல்வன். சதுர்சன் வினின்காந்தன்	110-2-001-5-0063543
09	811	செல்வன். பிரசன்னா மயூரன்	110-2-001-1-0063559
10	812	செல்வி. ஜெனிந்தா உதயகுமார்	110-2-001-3-0063558
11	813	செல்வன். சியாம் சிவானந்தன்	110-2-001-5-0063557
12	814	செல்வன். ஜெபராஜ் வெஸ்றிராஜ்	110-2-001-7-0063556
13	815	செல்வன். சாமீமன் லோகேஸ்வரன்	110-2-001-2-0063554
14	816	செல்வன். பிரிடன்ராஜ் பிலிக்ஸ்	110-2-001-4-0063553
15	817	செல்வி. சிபியா யோகேஸ்வரன்	110-2-001-6-0063552
16	818	செல்வன். அருட்சேந்தன் தியாகராசா	110-2-001-8-0063551
17	819	செல்வன். சகிசன் இதயகுமார்	110-2-001-0-0063569
18	820	செல்வன். கவிர்தன் உதயசேகர்	110-2-001-2-0063568
19	821	செல்வன். கிருஷிகன் ரஞ்சிதமனோகரன்	110-2-001-4-0063567
20	822	செல்வி. வைஸ்ணவி கில்பாட்கிரிசியன்	110-2-001-6-0063566
21	823	செல்வி. தயாசினி தயாசன்	110-2-001-8-0063565
22	824	செல்வி. ஜெனுசியா ஜெமிஸ்	110-2-001-1-0063564
23	825	செல்வன். அபிசாந்த் செல்வராசா	110-2-001-7-0063561
24	826	செல்வன். அபிஷேக் மரியசெபஸ்தியான்	110-2-001-9-0063560
25	827	செல்வி. ரதிஸ்கா ரகு	110-2-001-8-0063589
26	828	செல்வி. மதுஸ்கா தவேஸ்வரன்	110-2-001-0-0063588
27	829	செல்வி. தயானா நவமோகன்	110-2-001-4-0063586

கௌரவிப்பு நிகழ்வுகள்

மங்கல விளக்கேற்றல்

சிறப்புரை

அன்பளிப்பு வழங்கல்

திருமதி.ம.சாந்தகுமாரி முதியோர் இல்லத்தில்
கைவிஷேசம் வழங்குகிறார் - 15.04.2015

லயன் மகேந்திரன் மூக்கு கண்ணாடி வழங்குகிறார்
18.11.2015

28	830	செல்வி. சதானா கின்சிலி	110-2-001-6-0063585
29	831	செல்வி. யுகேஸ் அருந்தவராசா	110-2-001-1-0063583
30	832	செல்வன். கஜானன் கருணாகரன்	110-2-001-5-0063581
31	833	செல்வி. கஜனவி கருணாகரன்	110-2-001-9-0063579
32	834	செல்வி. சுகீரணா சுரேஸ்குமார்	110-2-001-1-0063578
33	835	செல்வன். திலேக்ஸ் டெஸ்லி	110-2-001-3-0063577
34	836	செல்வன். தனுசன் நாகேஸ்வரன்	110-2-001-5-0063576
35	837	செல்வன். சாருஜன் நந்தகுமார்	110-2-001-7-0063575
36	838	செல்வன். நிதர்சன் அந்தோனி யேசுராசா	110-2-001-0-0063574
37	839	செல்வி. ஹரணி - றொபின்	110-2-001-2-0063573
38	840	செல்வன். டில்சான் கிரிஸ்தோபர்	110-2-001-4-0063572
39	841	செல்வி. கரோலின் ஸ்ரீகாந்தன்	110-2-001-6-0063571
40	846	செல்வன். ஸ்ரெபான் சென்ற்செபஸ்ரியன்	110-2-001-3-0063600
41	847	செல்வி. ரிஸாஸ்ரிபோனி ஜெயசந்திரன்	110-2-001-7-0063599
42	850	செல்வி. பவித்திரா ரமேஸ்	110-2-001-4-0063591
43	1151	செல்வன். கபிசன் சுகந்தன்	110-2-001-1-0063597
44	1152	செல்வன். டிலோஜிதன் சதானந்தன்	110-2-001-3-0063596
45	1153	செல்வி. பிரவீணா உதயராசா	110-2-001-5-0063595
46	1154	செல்வி. ஜர்சி கனகராசா	110-2-001-8-0063594
47	1155	செல்வன். ஜொய்சன் ஜெரோன்	110-2-001-0-0063593
48	1156	செல்வி. சுவேதா சுதாகர்	110-2-001-2-0063592

கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை மாணவர்கள்

49	1103	செல்வி. கேதுஜா சுஜீபன்	110-2-001-1-0063620
50	1104	செல்வி. சிவானி நடேசு	110-2-001-3-0063619
51	1105	செல்வி. கிஷானா தாஜீஸ்வரன்	110-2-001-5-0063618
52	1106	செல்வி. சாருஜா அமிர்தலிங்கம்	110-2-001-7-0063617
53	1107	செல்வி. திலக்சிகா தவராசா	110-2-001-9-0063616
54	1108	செல்வி. லக்சனா பிரகலாதன்	110-2-001-1-0063615
55	1109	செல்வன். சங்கீர்த்தனன் ஜெகதீஸ்	110-2-001-4-0063614
56	1110	செல்வன். கிரிசன் தர்மசீலன்	110-2-001-6-0063613
57	1111	செல்வன். தாருணிகன் மோகனராசன்	110-2-001-8-0063612

58	1112	செல்வன். நிசான் தயாதரன்	110-2-001-0-0063611
59	1113	செல்வன். கபிசன் ரவிச்சந்திரன்	110-2-001-2-0063610
60	1114	செல்வன். திசான் உதயசுதர்சன்	110-2-001-4-0063609
61	1115	செல்வன். மதுமிதன் விக்னேஸ்வரன்	110-2-001-6-0063608
62	1116	செல்வன். தரணீதரன் லோகேஸ்வரன்	110-2-001-8-0063607
63	1117	செல்வன். தினேஷ் வசந்தன்	110-2-001-0-0063606

கோவிலாக்கண்டி மகாலவ்மி வித்தியாலயம் மாணவர்கள்

64	1118	செல்வி. டெல்சிகா வின்சென்ட் சர்ச்சில்	110-2-001-7-0063622
65	1119	செல்வன். ஜஸ்வினன் கனேசமூர்த்தி	110-2-001-1-0063601
66	1120	செல்வன். தேனுஜன் ரஞ்சன்	110-2-001-2-0063605
67	1121	செல்வன். அனுஸ்காந்த் ஜெயராசா	110-2-001-5-0063604
68	1122	செல்வன். மதுசன் ரஞ்சித்குமார்	110-2-001-7-0063603
69	1123	செல்வன். ஜெரூசன் அஸ்லவன்	110-2-001-9-0063602
70	1123	செல்வி. அபினா அமுதராசா	110-2-001-9-0063598
71		செல்வி. அனுஜா கமலேந்திரன்	110-2-001-3-0063718

புலமைப்பரிசில் தேர்வு - தேசிய சேமிப்பு வங்கியுடன்

01)	கு. டில்ருக்ஷன்	வ. விபுலானந்தா கல்லூரி	0 335446
02)	சி. நீதிராஜா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335444
03)	யோ. டஸ்மிகா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335445
04)	ச. மீனுஜா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335446
05)	யோ. பிரியக்கா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335447
06)	கி. நிதுயா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335448
07)	வி. தர்சிகா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335449
08)	கி. நபிதா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335450
09)	ஜ. ஞானக்குமரன்	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335451
10)	தீ. லதுர்சன்	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335452
11)	தெ. கிருஷிகன்	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335453
12)	லெ. சாலேம்ராஜ்	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335454
13)	இரா. கோபிஷாந்	யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்	0 335455
14)	நா. அபிசுவா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335456
15)	ம. மதிஷன்	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335457
16)	கு. கஜானி	யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலம்	0 335458
17)	செ. யானுஷா	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335459
18)	பி. பிறேமினி	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335460
19)	ச. டிலானி	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335461

20)	பி. லோகிதன்	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335462
21)	பி. லக்ஷிகன்	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335463
22)	ச. யுஜிந்தன்	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335464
23)	த. தக்ஷிகன்	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335465
24)	பா. ஐங்கரன்	யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை	0 335466
25)	ற. றஜீபா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335467
26)	நி. டினுசா	யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்	0 335468

எவை எவை தனக்குச் சந்தோசம் தருகின்றனவோ அவற்றுக்காகச் செலவு செய்வதற்காகவே ஒவ்வொருவரும் முயன்று வருந்தி உழைத்துச் சம்பாதிக்கின்றனர். இவ்வகைச் செலவுகள் தனக்கு மட்டுமன்றிப் பிறரையும் சந்தோசப்படுத்துவதுடன் மேம்படுத்துமாயின் அதுவே உண்மையான உளைப்பும் சந்தோசமுமாகும். உழைப்பைச் செலவு செய்பவனே காசுக்காரன் (பணக்காரன்) உழைத்துச் சேமித்து வைத்திருப்பவன் காவல்காரன் மட்டுமே பிறர் செலவு செய்வதற்காகச் சேமித்துப் பாதுகாப்பனாவான்.

19.12.2015 வாசிப்பு மாத நிகழ்வில்

விருந்தினர்கள் அரங்கில்

நூல்கள் அன்பளிப்பு
திரு.க.மயில்வாகனம்

பரிசில் வழங்கல்
திருமதி.து.மங்கையற்கரசி

கல்விச் சுற்றுலாவின் போது - 03.01.2016

2015 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத் தேர்வில் சித்தியெய்தி உலக்குவிப்பு பெறும் மாணவர்கள்

செல்வன் ஞானசூரியன் - திவாகரன்

செல்வி. சஞ்சீவி - சற்குணநாதன்

செல்வி. சோபிகா - விஜயகுமார்

செல்வி தேனுசா - இராச சேகரம்

செல்வி. தர்சினி - சிவபாலசுந்தரம்

செல்வி. பிரியந்தினி - இராசலிங்கம்

செல்வன் திலிபன் யேசுதாசன் - அம்மினதாப்

செல்வன் பத்மநாதன் - பத்மலோஜன்

இலக்குகள் மனதில் இருந்து அரித்துக்கொண்டு இருக்க வேண்டுமே தவிர வெளித்தெரியக்கூடாது. தூக்கத்தில் வருவது கனவல்ல. தூங்கவிடாமல் உயிர்ப்பிப்பதே கனவாக இருக்க வேண்டும் என்று அப்துல்கலாம் கூறியவாறு இலக்குகளை நோக்கி நாம் மெதுமெதுவாக ஆனால் நிதானமாக நகர வேண்டும். நிச்சயம் ஒரு நாள் வசப்படும். அப்போது வெளிச்சத்துக்கு வரும். நல்ல மனிதராக வாழ்வதே எமது இலட்சியம். நல்மனம், நற்குணம், நல்லொழுக்கம் இல்லா வாழ்வு வாழ்வல்ல, அது சாவாகும்.

சமயபாடத் தேர்வு - 2015
பரிசில் பெறும் மாணவர்கள்

கீழ்ப்பிரிவு - பணம், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

- 1ஸ இடம்: செல்வி. நி.அன்பானுகா - யா/நாவற்குழி மகா வித்தி
- 2ம் இடம்: செல்வி. த.டனுசிகா - யா/நாவற்குழி மகா வித்தி
- 3ம் இடம்: செல்வன். ஜெ. சம்சன் - யா/நாவற்குழி மகா வித்தி

கனிஷ்டபிரிவு - பணம், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

- 1ஸ இடம்: செல்வி. ச.ஜிந்துஜா - யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்
- 2ம் இடம்: செல்வி. பி.பிறேமினி - யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
- 3ம் இடம்: செல்வி. சௌ.பிரவீனா - யா/நாவற்குழி மகா.வித்தி

மத்தியபிரிவு - பணம், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

- 1ஸ இடம்: செல்வி. வி.சுவேதா - யா/நாவற்குழி மகா.வித்தி
- 2ய இடம்: செல்வி. ச.நிலானி - யா/நாவற்குழி மகா.வித்தி
- 3ம் இடம்: செல்வி. ரா.சர்மிளா - யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்

சிரேஷ்டபிரிவு - பணம், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

- 1ஸ இடம்: செல்வி. கி.பிரியங்கா - யா/நாவற்குழி ம.வி.
- 2ம் இடம்: செல்வி. கி.நிரோஜா - யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா
- 3ம் இடம்: செல்வி. து.மதுஷா - யா/நாவற்குழி ம.வி.

மேற்பிரிவு - பணம், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

- 1ஸ இடம்: செல்வன். சு.சுபாஸன் - யா/நாவற்குழி ம.வி.
- 2ம் இடம்: செல்வி. க.ரம்மியா - யா/கைதடி நாவற்குழி அ.த.
- 3ம் இடம்: செல்வி. அ.பகீர்த்தனா - யா/நாவற்குழி ம.வி.

நூல் சான்றிதழ் பெறுபவர்கள்

கீழ்ப்பிரிவு :

செல்வி. உ.அஸ்வியா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வி. வி.சாரங்கா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வி. ஜ.அதிஸ்ரதாரணி : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
செல்வி. சு.கிஷோனா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வி. ஜெ.ஜெகதீபா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வன். பா.தமிழன்பன்: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வி. வ.யஸ்மின் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வன். S.சுபந்திரன் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
செல்வி. ந.கம்சிகா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

கனிஷ்டபிரிவு :

யோ.பிரியங்கா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
செ.அகல்யா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
பா.தர்ஷனா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
த.கிரிவாசன் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
த.தர்ஷிகன் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ச.பவித்திரன் : யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
கு.கஜானி : யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
நா.டிலக்சிகா : யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்
ச.நீலவாணன் : யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்
இ.கோபிசாந்த் : யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்

மத்தியபிரிவு :

நி.நிதர்சன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
ஜெ.தர்ஷியா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ந.கிஷாந்தி : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ஜெ.தாட்சாயினி : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
சி.சுகன்யா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
கு.கஜானி : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
த.துவாரகா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ச.சாருன்யா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
அ.பிருந்தா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
வி.சஜிந்தா : யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்

சிரேஷ்டபிரிவு

சு.சங்கீர்த்தன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ச.கிருசாந்தி : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ஞா.சத்தியா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ச.சங்கீதராஜ் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ம.திருமாறன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

க.பிரதீபன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

செ.வினுசன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

சி.திவ்யா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

பி.சர்மினி : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

வ.கோபிநாத் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

மேற்பிரிவு

யோ.ஷபீனா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

வி.பத்மஜன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

கு.துயர்சன் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ஜெ.ஜெயீனா : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

சு.சுகுணராஜ் : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ஜெ.கீதாஞ்சலி : யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

செ.டினீஷா : யா/நா.ம. வித்தியாலயம்

ப.ரதீபன் : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

வி.றோகிதா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

பா.பிரியங்கா : யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

சான்றிதழ் பெறுபவர்கள்

கனிஷ்டபிரிவு

ந.காயத்திரி	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
ற.றஜீபா	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
நா.சாருஜா	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
செ.கஸ்மிதா	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
சி.றசிந்தன்	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
வ.பிரியன்	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
பி.லோகிதன்	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ஆ.புவிதரன்	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
கு.கீர்த்திகா	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
ஏ.கபில்ஷா	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்

மத்தியபிரிவு

தி.அபிஷாளினி	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
சி.பானுஜன்	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
அ.தமிழ்வாணி	:	யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
ஆ.அபிகிருஷ்ணா	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
இ.மதுசியா	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
ந.கிருஷாலினி	:	யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
து.கஜிதரன்	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
தெ.அருளினியன்	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
வி.கஜாளினி	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
வ.கபிலன்	:	யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்

சிரேஷ்ட பிரிவு

1	ஜ.உமையாள்	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	யோ.ஷமிதா	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	ஜ.சானுஜா	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
2	சி.ரஜீபன்	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
2	ஸ்ரீ.கோகுலவதனன்	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	மு.தனுஜன்	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	கு.கஜானா	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
1	பு.ஜதுசனா	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
1	சி.துஸ்யந்தி	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
1	கு.மேனகா	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

மேற்பிரிவு

1	ம.தர்சினி	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	க.கஜேந்தினி	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	கி.சர்மியா	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
2	சி.அனிஸ்ரன்	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	தி.திஸா	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
1	த.நீரஜா	: யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
2	ப.இந்துசன்	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
2	அ.கௌசிகன்	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
2	த.அனோஜன்	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
2	பி.விஜிதரன்	: யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

நாம் 10.10.2015 அன்று சாவகச்சேரிப் பிரதேச சபையின் பொது நூலகத்துடன் இணைந்து நடாத்திய கட்டுரைப் போட்டியில் பரிசில், கௌரம் பெறுபவர்கள்

கீழ்ப்பிரிவு

- 1ஆம் இடம்: 1 ந.ஜிந்துஜா -யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்
- 2ம் இடம்: 2 ஜெ.ஜெயடினோஜன்
  -யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
- 3ம் இடம்: 1 சௌ.பிரவீனா - யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

மத்தியபிரிவு

- 1ஆம் இடம்: 1 நா.சங்கீதா - யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- 2ம் இடம்: 1 அ.லோஜிதா - யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- 3ம் இடம்: 1 ஸ்ரீ.கதிர்விழி - யா/வேம்படி மகளிர் கல்லூரி

சிரேஷ்டபிரிவு

- 1ஆம் இடம்: 1 சி.பிரியங்கா - யா/இந்து மகளிர் கல்லூரி
- 2ம் இடம்: 1 அ.சர்விகா - யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- 3ம் இடம்: 1 சு.அனுஜன் - யா/புனித ஜோன்ஸ் கல்லூரி

மேற்பிரிவு

- 1ஆம் இடம்: 1 கோ.தாரங்கினி - யா/நாவற்குழி மகா வித்தியாலயம்


சத்தியம் காப்போம் தர்மம் வளர்ப்போம்
சாவே வரினும் சமத்துவம் காப்போம்
சித்திரம், சிந்தனை நுண்கலை கற்போம்
சீரைத் தருவது ஏடென அறிவோம்
சுற்றத் தவருடன் சூழ இருப்போம்
சூது விலக்குவோம் வாதில் வெல்வோம்
செல்வம் பணம் அல்ல, கல்வியென உணர்ந்தோம்
சேரிடம் அறிந்து சேர்ந்தே வாழ்வோம்
சையெனத் திரியோம் சர்ச்சை புரியோம்
சொன்ன சொல் காக்க சோர்விலா துழைப்போம்
சோம்பல் தவிர்ப்போம் சாதனை புரிவோம்
சௌக்கியமாக சகலரும் வாழ்வோம்
பிச்சை புகினும் கற்று உயர்வோம்.